## கருணை இல்லம் கோகுலம்



ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி, நல்வாழ்வு, சிறந்த எதிர்காலம் ஏற்படுத்திக்கொடுக்கும் கருணை இல்லம் கோகுலம், பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்கள் திருமண நாள், அன்புக்குரியவர்களின் நினைவு தினம் போன்ற எந்தவொரு விசேட நிகழ்வுகளுக்காகவும் இச்சிறியோரின் ஒரு நாளுக்கான பராமரிப்புச் செலவு தொகை 65,000 ரூபாவை வழங்கி உதவலாம்.

நிதியை வைப்பிலிட வங்கி விபரம்:
Commercial Bank A/C No : 1050669901 Office : Sri Sri Radhakirshna Temple.
A/C Name :- ISKCON,Shitf Code CCEYLKLX No : 188, Newchetty Street, Colombo-13
Gokulam No : 607 A, Negombo Road Mobola, Wattala. Phone : 0112433325 , Email: iskcon@slt.lk



Follow us:

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN தமිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 142 சுபகிருது வருடம், மாசி மாதம் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (12.03.2023) ஹிஜ்ரி-1444, ஜமா அதுல் ஷஃபான் -19, 0115886187 - பக்கங்கள் 18+8+8+8

விலை ரூ.130





ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா கட்டிட வேலைகள் இறுதிக்கட்டத்தில்

ஆலய திருப்பணிக்கு நிதியை பணமாகவோ காசோலையாகவோ வங்கிக் கணக்கிலோ செலுத்தலாம்

Commercial Bank - Colombo-13
A/C Name: ISKCON Temple Fund
A/C No:- 1120017042
Hatton National Bank - Colombo-13
A/C Name: ISKCON
A/C No- 207010000891

ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண (ஆலயம்)
188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு –13, தொலைபேசி:–011–2433325
Fax:2471089, Email:iskcon@slt.lk Web: www.iskcon.lk


# உள்ளூராட்சி சபைகளுக்கு விசேட ஆணையாளர்கள்

## 19ஆம் திகதி நியமனம்

மார்ச் 19ஆம் திகதி நள்ளிரவுடன் நாட்டின் அனைத்து உள் ளூராட்சி சபைகளும் கலையவுள்ளன.

இதன்பின்னர் உள்ளூராட்சி அமைச்சினால் அனைத்து சபைகளுக்கும் விசேட ஆணையாளர்கள் நியமிக்கப்பட வுள்ளனர். உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற்று புதிய உறுப்பினர்கள் பொறுப்பேற்கும் வரை இவர்களின் கீழேயே அனைத்து சபைகளும் இயங்கவுள்ளன.

நாட்டின் 341 உள்ளூராட்சி சபைகளுக்கான ஆயுட்காலம் கடந்த 2022 மார்ச் 20ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்த நிலையில்... 02 பக்கம்

## பாடசாலைகள் முன் போராட்டம் நடத்தாதீர்!

### அமைச்சர் பிரசன்ன



பாடசாலைகளுக்கு முன்பாக நடத்தப்படும் போராட்டங்களைக் கட்டுப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளால் பெற்றோர்கள் வேதனையடைவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும் ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளருமான... 02 பக்கம்

## உள்ளூராட்சித் தேர்தலுக்கான புதிய வர்த்தமானி வெளியீடு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான தினத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நிதி நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் கடந்த 9ஆம் திகதி இடம்பெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதி நடத்துவதற்கு தேர்தல் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய தேர்தலுக்கான தினம் தொடர்பில் ஏற்கனவே வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களினால் புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.


## தபால் வாக்குச்சீட்டுகள் 5 நாட்களுக்குள் அச்சீடு

### தேர்தல் ஆணைக்குழு

தபால் மூல வாக்குச்சீட்டுகளை 05 நாட்களுக்குள்ளும் ஏனைய வாக்குச் சீட்டுகளை 20 முதல் 25 நாட்களுக்குள்ளும் அச்சிட்டு வழங்க முடியும் என அரச அச்சகர் அறிவித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நிதி அமைச்சின் செயலாளரூடாக அதற்கான நிதி... 02 பக்கம்

## 'வெடி'மணியம்



"ரணில்-ராஜபக்ஷ" அரசுக்கெதிராக போராடும் பல்கலைக்கழக மாணவர்கள் மீது கடும் "அழுத்தங்களை" பிரயோகிக்கப்படுகிறது.

மீண்டும் ஒரு "காலிமுகத்திடல்" போராட்டம்போல நிகழ்ந்துவிடாமல் தடுக்க பல "முனைகளில்" ஆளும் ரணில் அரசு தன்னுடைய அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்டிருக்கிறது.

"அரசாங்கத்துக்கு எதிராக போராடும் பட்டதாரி மாணவர்களுக்கு எதிர்காலத்தில் அரச வேலைகள் கிடையாது" என்ற தொனியில் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இது அப்பட்டமான ஒரு அடிப்படை மனித உரிமை மீறல்.

"கருத்து சுதந்திரத்தின் மீது" கை வைப்பது என்பது மிக ஆபத்தான நிலையை நோக்கி நாடு நகர்கிறது என்பதைக் காட்டுகிறது.

"உரிமைகளுக்காக ஜனநாயக வழியில் போராடும் சிங்கள மாணவர்களை" கடுமையான சட்டங்கள் மூலம் ஒடுக்கிவிடலாம் என்று ரணிலும் ராஜபக்ஷவும் நினைப்பது முட்டாள்தனம்.

மாணவர் போராட்டங்களை மிக அவதானமாக கையாளவேண்டிய கடமையும் பொறுப்பும் அரசுக்கு உண்டு. 11 பக்கம்

## தேர்தல் தொடர்பில் ஆளும் - எதிர்க்கட்சி எம்.பிக்கள் சபையில் கடும் வாக்குவாதம்

பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்திக்கொண்டு தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சிப்பதாக பிரதான எதிர்க்கட்சி வெள்ளிக்கிழமை (10) சபையில் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததால் ஆளும் - எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

பாராளுமன்றம் வெள்ளிக்கிழமை பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. 02 பக்கம்

## சர்வதேச நாணய நிதிய திட்டங்கள் நீண்ட கால பயனைத் தராது

### சர்வதேச பொருளாதார நிபுணர் ஸ்ரீவ் ஹங்



நீண்ட கால கடன்பேண்தகு தன்மையை அடைவதற்கு இலங்கைக்கு நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள் அவசியம் - என சர்வதேச பொருளாதார நிபுணர் ஸ்ரீவ் ஹங் தெரிவித்துள்ளார். சி.என்.பி.சி செய்தி சேவைக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் சி.என்.பி.சி. மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஆர்ஜென்ரீனா, மொன்டிநீக்ரோ போன்ற நாடுகளில் புதிய அரசாங்கத்துக்கு நாணய விடயங்களில் உதவிய ஸ்ரீவ் ஹங், இலங்கை நீண்ட.... 02 பக்கம்

## எரிபொருள் விற்பனை வீழ்ச்சி



நாட்டில் கடந்த 13 மாதங்களில் எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் சில்லறை மற்றும் தொழில்துறைசார் எரிபொருள் விற்பனை பதிவுகள் பாரியளவில் வீழ்ச்சியை சந்தித்துள்ளன.

அதற்கமைய, நடப்பாண்டின் ஜனவரி மாதத்துடன் 2022ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தை ஒப்பிடும்போது ஓட்டோ டீசல் விற்பனை 50 சதவீதமும், பெற்றோல் விற்பனை 30 சதவீதமும் வீழ்ச்சியை சந்தித்துள்ளதாகவும் மண்ணெண்ணெய் பயன்பாடு 70 சதவீதமாக குறைந்துள்ளதாகவும் எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## ஜனாதிபதித் தேர்தலுக்கும் பணமில்லையென ரணில் சொன்னால் என்ன செய்வது?



தேர்தலுக்குப் பணமில்லை என்று தொடர்ந்து சொல்லி வருகிறார்கள். ஜனாதிபதித் தேர்தலுக்கும் தன்னிடம் பணம் இல்லை என ஜனாதிபதி கூறினால் என்ன செய்வது? - என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார். 02 பக்கம்


## நக்கல் நமசிவாயம்

தேர்தலை நடத்த காசில்ல..
ஆனா கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வாங்க பணமிருக்குது..









# பொட்டம் ட்ரோலிங் முறையில் இறால் பிடிக்க அனுமதி

## அமைச்சர் டக்ளஸ் ஆலோசனை





இந்திய இழுவைப் படகுகள் இலங்கையை அண்டியுள்ள கடல் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பொட்டம் ட்ரோலிங் எனப்படும் இழுவைமடி கடற்றொழில் நடவடிக்கை காரணமாக இலங்கையின் கடல் வளங்களுக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன. இதனால் இலங்கை கடற் பிரதேசத்தில் பொட்டம் ட்ரோலிங் எனப்படும் இழுவை வலைத் தொழிலுக்கு தடை விதிக்கப்பட்டது.

அவ்வாறு தடை விதிக்கப்பட்டதனால் இலங்கையில் கற்பிட்டி, மன்னார், யாழ். ஆகிய பகுதிகளில் சிறிய அளவில் பொட்டம் ட்ரோலிங் முறையில் இறால் பிடிக்கும் தொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களுக்கு அவர்களது தொழிலை முன்னெடுக்க முடியாத நிலையேற்பட்டது. இது தொடர்பில் கவனம் செலுத்திய கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆய்வொன்றை மேற்கொண்டு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கடற்றொழில் திணைக்களம் மற்றும் நாரா நிறுவனத்தின் ஊழியர்களுக்கு ஆலோசனை வழங்கினார். அதன் பிரகாரம் அவ் ஆய்வுகளை மேற்கொண்ட அதிகாரிகளின் அறிக்கை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

அவ் அறிக்கையின் பிரகாரம் இலங்கையில் ஏற்றுமதிக்கு உகந்த இறால்கள் கல்பிட்டி, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட கடற்பகுதிகளில் காணப்படுவதாகவும் அப்பகுதிகளில் சிறிய அளவிலான பொட்டம் ட்ரோலிங் படகுகளைப் பயன்படுத்தி நீண்டகாலமாக இறால் பிடிக்கும் தொழில் இடம்பெற்று வருவதாகவும் அதனால் இக்கடல் வளத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்திய படகுகளால் ஏற்படுத்தப்படும் அழிவுகளைப் போன்ற பாதிப்புகள் ஏற்படாதெனவும் அவ்வாறு இறால்கள் பிடிக்கப்படாவிட்டால் இறால்களின் பெருக்கம் தடைபட்டு அவற்றை உணவாக உட்கொள்ளும் பட்சிகளின் பெருக்கம் அதிகரித்து இறால்கள் முற்றாக அழிந்துவிடுமெனவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே இப்பகுதியில் இறால் பிடிப்பதற்கு அனுமதி வழங்குமாறு பரிந்துரைப்பதுடன் அவ்வாறு பொட்டம் ட்ரோலிங் முறையில் இறால் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படாவிட்டால் ஆயிரக்கணக்கான கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்களெனவும் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை நன்கு ஆராய்ந்த அமைச்சர் அப்பிரதேசங்களில் பொட்டம் ட்ரோலிங் முறையில் இறால் பிடிப்பதற்கு அனுமதி வழங்கும் சட்டங்களை வகுக்குமாறு ஆலோசனை வழங்கினார்.

இச்சந்திப்பில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து ரத்நாயக்க, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த மற்றும் நாரா நிறுவனத்தின் விஞ்ஞானிகள் உட்பட பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கமத்தொழில் அமைச்சின் விசேட அனுமதியுடன் மாத்திரம் வயல் நிலங்களை நிரப்ப நடவடிக்கை



வயல் நிலங்களை நிரப்பும் செயற்பாடுகளை அமைச்சின் விசேட அனுமதியுடன் மாத்திரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கமத்தொழில்கள் அமைச்சர் மஹிந்த அமரவீர சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அண்மையில் (07) உத்தரவிட்டார்.

வயல் நிலங்கள் நிரப்பப்படுவது குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்ற கமத்தொழில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தபோதே அமைச்சர் மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்தார்.

மேலும், அடுத்த சிறுபோகத்தை சிறப்பாக மேற்கொள்வதற்கும் தேவையான உரங்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்து தரப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார். இதன்படி, அடுத்த பருவத்திற்கு மண், உரம் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் என்றும் யூரியா 10ஆயிரம் ரூபா அல்லது அதற்கும் குறைவான விலையிலும், பொட்டாசியம் முரியேட்டு உரம் தற்போதைய விலையைவிடக் குறைந்த விலையில் வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். மேலும், ரூபாவின் பெறுமதியை வலுப்படுத்துவது விவசாயிக்கு நன்மை பயக்கும் எனவும், விவசாயச் செலவுகளை முடிந்தவரை குறைக்க அரசாங்கம் தலையிடும் எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள விலங்கின நலம்பேணல் சட்டமூலம் தொடர்பிலும் குழு கவனம் செலுத்தியது. சட்டத்தரணி திருமதி லாலனி எஸ்.பெரேரா உட்பட குழுவுக்கு அழைக்கப்பட்டவர்கள் இந்தச் சட்டமூலத்தின் அவசியம் குறித்து கருத்துத் தெரிவித்தனர். இந்த நாட்டில் விலங்குகள் நலனுக்காக நடைமுறையில் உள்ள சட்டம் மிகவும் பழமையானது, அது போதாது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். 1907ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட விலங்குகள் துன்புறுத்துவதைத் தடுக்கும் சட்டமே தற்போது இலங்கையில் விலங்குகள் நலனுக்காக அமுலில் உள்ளதாகவும், புதிய சர்வதேச சட்டங்களின்படி புதிய விலங்கின நலம்பேணல் சட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

விலங்கினங்களின் நலன்பேணலுக்குப் புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றாலும், விவசாய மற்றும் கலாசார நடவடிக்கைகளுக்கு விலங்குகளை பயன்படுத்துவதை இந்த சட்டங்கள் பாதிக்கக்கூடாது என்று சில பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

எனவே, இவ்விவகாரம் குறித்து மேலும் ஆழமாக விவாதித்த பிறகே இறுதிச் சட்டமூலம் தயாரிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார். இதனால், இதுதொடர்பான எழுத்துபூர்வ கோரிக்கைகளை இரண்டு வாரங்களில் மீண்டும் அமைச்சு மட்டத்தில் சந்தித்து விவாதிக்க முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான மொஹான் பிரியதர்ஷன் த சில்வா, டி.பி. ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.ஸ்ரீதரன், உதயகாந்த குணதிலக்க, குலசிங்கம் திலீபன், உபுல் மகேந்திர ராஜபக்ஷ மற்றும் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## தேர்தல் தொடர்பில்...

பிரதான நடவடிக்கைகளைத்தொடர்ந்து, சிறப்புரிமை பிரச்சினை ஒன்றை முன்வைப்பதற்காக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கருத்து தெரிவிக்கையில், உயர் நீதிமன்றம் விடுத்திருக்கும் தடை உத்தரவை அடிப்படையாகக்கொண்டு இடம்பெறும் நடவடிக்கைகளை இடைநிறுத்த வேண்டும் என பாராளுமன்ற சிறப்புரிமை குழு உத்தரவிடவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை முன்வைத்து எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிடுகையில், தேர்தலுக்கு பணத்தை வழங்காமல் இருப்பதை தடுத்து உயர்நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவொன்றை பிறப்பித்திருக்கிறது.

அதன் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதியை நிர்ணயித்திருக்கிறது. தற்போது அரசாங்கம் நீதிமன்றத்துக்கும் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவுக்கும் எதிராக சிறப்புரிமை மீறுவதாக தெரிவித்து பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பது இந்த இரண்டு நிறுவனங்களையும் அடக்குவதற்காகும்.

நீதிமன்ற தீர்ப்பை கேள்விக்குட்படுத்துவதை நிறுத்த வேண்டும். இது தொடர்பாக ரவூப் ஹக்கீம் வெள்ளிக்கிழமை(10) சபையில் தெளிவுபடுத்தி இருந்தார். அதனால் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையால் நீதிமன்றம் பயப்படும் என நினைக்க வேண்டாம். நீதிமன்றத்துக்கு அழுத்தம் பிரயோகிக்க முற்பட்டால், நீதிமன்றம் இதனைவிட கடுமையாக செயற்படும்.

அத்துடன், சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதியை இரண்டாவது தடவையே நிர்ணயித்திருக்கிறது. அதனால் இந்த நிறுவனங்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த ரவூப் ஹக்கீம் எம்.பி. குறிப்பிடுகையில், பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்திக்கொண்டு நீதிமன்ற தீர்ப்பையும் நீதிபதிகளையும் கேள்விக்குட்படுத்தக்கூடாது என நான் சபையில் தெரிவித்திருந்தேன்.

அதற்கு மாற்று நடவடிக்கையாகவே தற்போது நிதி இராஜாங்க அமைச்சர் சிறப்புரிமையை பயன்படுத்திக்கொண்டு, நீதிமன்றத்தின் தடை உத்தரவை இடைநிறுத்துமாறு சிறப்புரிமை குழு உத்தரவிடவேண்டும் என கேட்கிறார்.

அதனூடாக உயர் நீதிமன்றம் நிதி அமைச்சின் செயலாளருக்கு விடுத்திருக்கும் உத்தரவுக்கு அவர் நீதிமன்றத்துக்கு பதிலளிக்காமல் தடுப்பதற்கான நடவடிக்கையே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்திக்கொண்டு இவ்வாறு நீதிமன்ற நடவடிக்கையை கட்டுப்படுத்த இடமளிக்க முடியாது என்றார்.

அதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிடுகையில், பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்படுவதென்ற காரணத்தை மேலோங்கச்செய்து, நாட்டின் நீதிமன்ற நடவடிக்கைக்கு தலையீடு செய்யும் வேலைத்திட்டங்களை பாராளுமன்றத்துக்குள் செயற்படுத்த இடமளிக்க முடியாது.

ஜனநாயகத்தின் பிரதான தூண்களான நீதிமன்றம், பாராளுமன்றம் மற்றும் நிறைவேற்றுத்துறை ஜனநாயகத்தின் பிரதான மூன்று விடயங்களாகும்.

அத்துடன் பிரேமனாத் சி தொலவத்த மற்றும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க ஆகிய இருவரின் நடவடிக்கை, தேர்தலை நடத்துவதற்கு பணத்தை ஒதுக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மீள பெற்றுக்கொள்ள அரசாங்கம் மேற்கொண்டு வரும் சதித்திட்டத்தின் மற்றுமொரு நடவடிக்கையாகும்.

அதனால் பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்திக்கொண்டு தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. அதற்கு இடமளிக்க முடியாது என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கும் உரிமையின் பிரகாரமே நான் சிறப்புரிமை பிரச்சினை ஒன்றை எழுப்பினேன். அந்த உரிமை எனக்கு இருக்கிறது. தற்போது எனது சிறப்புரிமை பிரச்சினை சிறப்புரிமை குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு பிரதி சபாநாயகரால் உத்தரவிடப்பட்டிருக்கிறது என்றார்.

அதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல குறிப்பிடுகையில், ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியை வேறு தேவைகளுக்கு பயன்படுத்த முடியாது என்றே நீதிமன்ற தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதனால் ஒதுக்கப்பட்டிருந்தால் அதுதொடர்பில் பார்க்கலாம்.

அடுத்த விடயம் பாராளுமன்றத்தில் சிறப்புரிமை ஒன்றை எழுப்ப பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கும் உரிமையை மற்றுமொரு உறுப்பினர் கேள்விக்குட்படுத்துவது பிரச்சினைக்குரியதாகும். அப்படியானால் யாருக்கும் சிறப்புரிமை பிரச்சினை எழுப்ப முடியாமல் போகும் என்றார்.

இறுதியாக, பிரதி சபாநாயகர் பதிலளிக்கையில், உறுப்பினரால் சபைக்கு முன்வைக்கப்பட்ட சிறப்புரிமை பிரச்சினை, சிறப்புரிமை குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டிருக்கிறேன். அதனால் இதுதொடர்பில் விவாதிக்க இடமளிக்க முடியாது என தெரிவித்து, சபை நடவடிக்கையை கொண்டு சென்றார்.

## ஜனாதிபதித் தேர்தலுக்கும்...

"பணம் இல்லையா, வாக்குகள் இல்லையா? இந்த பயம் தேர்தலுக்காக அல்ல தேர்தல் முடிவுக்காக. அதனால் தான் பணம் இல்லை என்கிறார்கள். அந்த கதை பொய்யானது.

8ஆயிரம் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் செலவை தாங்க முடியவில்லை என்றால், அவர்களின் கொடுப்பனவை சரி பாதியாகவோ 75 சதவீதமாகவோ குறைக்கலாமே" என்றும் அநுரகுமார திசாநாயக்க கூறினார்.

## தபால் வாக்குச்சீட்டுகள் ...

பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, உரிய பாதுகாப்புகளை வழங்க முடியும் என தேர்தல்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய, தேர்தலுக்கான எரிபொருளை விநியோகிப்பதற்கு, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாப னத்தின் அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசாளர் தேவை (ஆண்)
(Cashier)
Bairaha உற்பத்திகளை விற்பனை செய்யும் Kwality Meat Mart நிறுவனத்துக்கு கொழும்பு மாவட்டத்துக்கு உட்பட்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும் அல்லது தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்ளவும்.
077 23 66 188
E-mail :- kwalitymeatmart@gmail.com
சம்பளம் - 35000/- க்கு மேல்
(மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் விற்பனை Incentive உற்பட)

## உள்ளூராட்சி சபைகளுக்கு...

உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலம் மேலும் ஒரு வருடத்தால் அதிகரிக்கப்பட்டது. உள்ளூராட்சி சட்டவிதிகளின்படி அமைச்சரால் ஒரு வருடத்திற்கு மட்டுமே சபைகளின் ஆயுட்காலத்தை நீடிக்க முடியும். இதன் பிரகாரம் ஏற்கனவே, மார்ச் 20ஆம் திகதி வரை உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலம் நீடிக்கப்பட்டது. இந்த நிலையில், ஏப்ரல் 25ஆம் திகதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், மார்ச் 19ஆம் திகதி நள்ளிரவுடன் கலையும். உள்ளூராட்சி சபைகளின் அதிகாரம் விசேட ஆணையாளர்களின் கீழ் செல்லவுள்ளது. விசேட ஆணையாளர்களை, உள்ளூராட்சி அமைச்சை வைத்திருக்கும் பிரதமர் தினேஷ் குணவர்தன நியமிக்கவுள்ளார்.

## எரிபொருள் விற்பனை...

2022ஆம் ஆண்டு கடந்த ஜனவரி மாதம் ஒரு இலட்சத்து 99 ஆயிரத்து 32 லீற்றர் விற்பனையான லங்கா ஒட்டோ டீசல், இந்தவருடத்தின் ஜனவரி மாதத்தில் 93 ஆயிரத்து 106 லீற்றரே விற்பனையாகியுள்ளது. இதேவேளை, கடந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் 6,544 லீற்றருக்கு விற்பனையான லங்கா சுப்பர் டீசல் (யூரோ 4) இந்தவருடம் 1,882 லீற்றரும், கடந்த ஜனவரி மாதத்தில் 19,212 லீற்றர் விற்பனையான மண்ணெண்ணெய் இந்தவருடத்தின் ஜனவரி மாதத்தில் 4,757 லீற்றரும், கடந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் 10, 134 லீற்றர் விற்பனையான லங்கா பெற்றோல் 95 ஒக்டைன் யூரோ 4 இந்தவருடத்தின் ஜனவரி மாதத்தில் 2,087 லீற்றரும், கடந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் 110,491 லீற்றர் விற்பனையாக லங்கா பெற்றோல் 92 ஒக்டைன் இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் 79,510 லீற்றரே விற்பனையாகியுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஜனவரி மாதத்தில் நாளாந்த எரிபொருள் விற்பனையும் பாரிய சந்திப்பை சந்தித்துள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வியாழக்கிழமை 2023.03.09
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5054 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,113,043.00
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 2 2 2 3 6 9

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3296 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 85,217,371.20
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 02 06 39 74

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1509 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,480,509.60
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 6 2 5 7 7 2

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1084 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,000,000.00
ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 11 51 74 80

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 363 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,071,454.80
வெற்றி இலக்கினம் விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 25 27 46 50 — விசேட இலக்கினம் விருச்சிகம்

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1402 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 306,536,130.00
ஆங்கில எழுத்து P — சுப்பர் இலக்கம் 16 — வெற்றி இலக்கங்கள் 29 41 55 61
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

## பாடசாலைகள் முன் போராட்டம்...

பிரசன்ன ரணதுங்க வெள்ளிக்கிழமை(10) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எனவே, பாடசாலைகளுக்கு முன்பாக போராட்டம் நடத்த வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் இவ்வாறான உரையாடல் இடம்பெற்றது.

இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிக்கையில்,

அமைச்சர் பாடசாலை மாணவர்கள் மற்றும் பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் பேசுகின்றார். அரச பயங்கரவாதத்தில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு பல சேதங்கள் ஏற்பட்டன. றோயல் கல்லூரி மாணவர்களுக்கும் கண்ணீர்ப் புகைக்குண்டு வீசப்பட்டு தாக்கப்பட்டுள்ளனர். பாடசாலை மாணவர்களுக்கும் இவ்வாறு நடக்கும்போது கல்வி அமைச்சர் எடுக்கும் முடிவு என்ன? என கேள்வி எழுப்பினார்.

இது குறித்து ஆளுங்கட்சியின் பிரதம அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிக்கையில்,

. பாடசாலைகளுக்கு அருகில் போராட வேண்டாம். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை கற்பதற்கே பாடசாலைகளுக்கு அனுப்புகிறார்கள். பாடசாலைகளுக்கு முன் போராட்டங்களை நடத்தும்போது பெற்றோர்களும் வேதனையடைகின்றனர். குழந்தைகளுடன் பெற்றோரும் வலியை உணர்கிறார்கள் என்றார்.

இதையடுத்து சஜித் பிரேமதாச,

பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறியதன் அடிப்படையில் இந்த நாட்டின் நீதித்துறையில் தலையிடுவது போன்ற வேலைத்திட்டங்களை இந்த பாராளுமன்றத்தில் நடைமுறைப்படுத்த முடியாது. இந்த நாட்டில் ஜனநாயகத்தின் புகைப்படமாக படம் நீதித்துறை, சட்டமன்றம் மற்றும் நிறைவேற்றுத்துறை இருக்கிறது என்றார்.

இறுதியாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிக்கையில், இவர் பாராளுமன்றத்திற்கு அதிகாலையில் வந்து பிரசங்கம் செய்கின்றார். ஒரு தடவை மருந்து இல்லை என்றும், இன்னொரு தடவை மற்றொன்றும் சொல்கிறார். எதிர்க்கட்சிகள் தங்கள் விருப்பப்படி பாராளுமன்றத்தை செய்ய விடாதீர்கள் என்றார்.

## சர்வதேச நாணய நிதிய...

கால கடன்பேண்தகு தன்மையை அடைவதற்கு நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள் அவசியம் என குறிப்பிட்டுள்ளார்.

தென்னாசிய நாடு, அதன் தசாப்த கால வரலாற்றில் இல்லாத பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் அதன் நிதிநிலையை ஸ்திரப்படுத்துவதற்கு கடந்த செப்டெம்பரில் இணக்கம் காணப்பட்டதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெறவேண்டியுள்ளது.

இந்த நாடுகளில் காணப்படும் விதிமுறைகளையும் நிறுவனங்களையும் நீங்கள் மாற்றினால் அன்றி, நீண்டகாலமாக காணப்படுகின்ற நிலைமைகள் தொடர்ந்தும் நீடிக்கப்போகின்றன என ஜோன் ஹொப்ஹின்ஸ் பல்கலைக் கழக பேராசிரியராக உள்ள ஸ்டீவ் ஹங் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் உயர்மட்டத்தில் நீண்டகாலமாக அதே நபர்களே செயற்பட்டு வருகின்றனர் என குறிப்பிட்டுள்ள அவர், ஆகவே எதுவும் மாறவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் முதல் இலங்கை உணவு, மருந்து, எரிபொருள், மின்சாரத்துக்கான கடும் போராட்டத்தை சந்தித்து வருகின்றது. இது சீற்றத்துடன் கூடிய ஆர்ப்பாட்டத்துக்கு வழிவகுத்ததுடன் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டிலிருந்து தப்பியோடி பதவியை இராஜினாமா செய்யவேண்டிய நிலையை ஏற்படுத்தியது.

இதனை தொடர்ந்து ஆறு தடவை பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்றம் பிரதமராக தெரிவு செய்தது.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றீகனின் பொருளாதார ஆலோசகராக பணியாற்றிய ஹங் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டுள்ள இலங்கைக்கு நீண்ட கால அளவில் உதவுமா என்பது குறித்து ஐயம் கொண்டுள்ளார்.

இலங்கை நிவாரணத்துக்காக பல தடவை சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடியுள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

1965ஆம் ஆண்டிலிருந்து 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று தோல்வியடைந்த நாடு இலங்கை என்பதை நீங்கள் நினைவில் வைத்திருக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியால் நீங்கள் தற்காலிகமாக நிம்மதியடைய முடியும். ஆனால், நீண்ட காலத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்கள் பலனளிக்காது எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

# துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் மூன்றுக்கான தலைவர்கள் நியமனம்



துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் மூன்றுக்கான தலைவர்கள் அண்மையில் (08) பாராளுமன்றத்தில் நியமிக்கப்பட்டனர்.


இந்தத் துறைசார் மேற்பார்வைக் குழுவொன்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 12 ஆகக் காணப்படுவதுடன், குழு உறுப்பினர்கள், பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் டிகிரி கே.ஜயதிலக்க, பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் திணைக்களப் பணிப்பாளரும் தொடர்பாடல் திணைக்கள பதில் பணிப்பாளருமான எச்.ஈ.ஜனகாந்த சில்வா ஆகியோர் இந்தக் கூட்டங்களில் கலந்துகொண்டனர்.

'மத விவகாரங்கள் மற்றும் சகவாழ்வு' பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் உபுல் மஹேந்திர ராஜபக்ஷ நியமிக்கப்பட்டார். அவரது பெயரை பாராளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஸ்வரன் முன்மொழிந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் அதனை வழிமொழிந்தார்.

அதேபோன்று, 'தேசிய பாதுகாப்பு' பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நியமிக்கப்பட்டதுடன், அவரது பெயரை பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ முன்மொழிந்ததுடன், அதனைப் பாராளுமன்ற உறுப்பினர் மித் உடுகும்புற வழிமொழிந்தார்.

மேலும், 'சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி' பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும நியமிக்கப்பட்டதுடன், அவரது பெயரை பாராளுமன்ற உறுப்பினர் சி.பி.ரத்நாயக்க முன்மொழிந்தார். அதனை பாராளுமன்ற உறுப்பினர் வருண லியனகே வழிமொழிந்தார். இந்த நியமனங்களையடுத்து, குழு உறுப்பினர்களுக்கு பிரேரணைகளை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டதுடன், இதன்போது இந்தக் குழுக்களின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் ஆரம்பக் கலந்துரையாடலும் இடம்பெற்றது.

# 19ஆவது பிம்ஸ்டெக் அமைச்சர்கள் கூட்டத்தில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி உரை






இணையவழி மெய்நிகர் முறையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சியின் (பிம்ஸ்டெக்) 19ஆவது அமைச்சர்கள் கூட்டத்தில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் எம்.யூ.எம்.அலி சப்ரி உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் அலி சப்ரி, உலகப் பொருளாதார வளர்ச்சியின் பாதை ஆசியாவை நோக்கி நகர்வதால், பிம்ஸ்டெக் நாடுகளின் வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கூறுகள் தொடர்புடையதாக இருப்பதற்காக புத்துயிர் பெறவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

வர்த்தகம் மற்றும் முதலீட்டின் ஓட்டத்தை மேம்படுத்துவதற்கு வலுவான மற்றும் ஆற்றல்மிக்க தனியார்துறை வலையமைப்பை உருவாக்குவதற்கான ஒரு வழித்தடமாக மாறுவதற்காக பிம்ஸ்டெக் முன்னணி வகிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி, ஒவ்வொரு நாட்டினதும் ஒப்பீட்டு நன்மைகளை மையமாகக் கொண்டு, பிராந்திய வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான கூட்டு முயற்சிகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சூழலில், வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் துறைகளில் முன்னெச்சரிக்கையுடன் பணியாற்றுவதற்கான இலங்கையின் உறுதிப்பாட்டை அமைச்சர் மீண்டும் வலியுறுத்தினார்.

மேலும், அனைவருக்கும் உருமாறும் பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதற்காக, உள்ளகப் பிராந்திய முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில், நாடுகடந்த வணிக நிறுவனங்களின் வலையமைப்பைக் கட்டியெழுப்புவதற்கான இலங்கையின் முழுமையான ஆதரவையும் அவர் வெளிப்படுத்தினார்.

பிம்ஸ்டெக் பாங்கொக் விஷன் 2030, கடல்சார் போக்குவரத்து இணைப்புக்கான ஒப்பந்தம் மற்றும் பிம்ஸ்டெக்கின் தலைசிறந்த நபர்களின் குழுவை நிறுவுதல் போன்ற முக்கியமான நிகழ்ச்சி நிரல்கள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

தாய்லாந்தின் தலைமைத்துவத்தின் கீழ், பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளான பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம், மியன்மார் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்கள் பங்கேற்ற அமைச்சர்கள் கூட்டம் தாய்லாந்தின் துணைப் பிரதமர் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரின் தலைமையில் நடைபெற்றது.

# பொருளாதார நெருக்கடி தீர்வுக்கான குழுவிற்கு ஜனாதிபதி செயலகத்தால் ஆனந்தகுமார் நியமனம்




சமகால பொருளாதார நெருக்கடிகளுக்கு தொழிற்சங்க ரீதியான தீர்வுகளை காண ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள மூவர் அடங்கிய விசேட குழுவின் உறுப்பினராக ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

சமகால பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வுகாணும் முகமாக கடந்த ஜனவரி மாதம் 13ஆம் திகதி ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் விசேட கலந்துரையாடலொன்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் சமகால பொருளாதார நெருக்கடிகளுக்கு தொழிற்சங்க ரீதியான விடயங்களை கையாள மூவர் அடங்கிய விசேட குழுவொன்றை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அதன் இரண்டாவது கூட்டம் கடந்த ஜனவரி 30ஆம் திகதி பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்றது.



ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

My No: PS/TU/...

10th March 2023

Mr. Suppaiah Anandakumar
Ratnapura District Organizer UNP
No.36, Mill Street
Colombo 12

Nominations for membership of Tripartite Committees to Trade Union Alliance

As it was decided in the discussion regarding the establishment of tripartite committees to find solutions for the current economic crisis held at the Chamber of the Presidential Secretariat on 13.01.2023 under the leadership of the Hon. President, arrangements were made to establish tripartite committees in the second discussion session held at the temple trees on 30.01.2023 under the leadership of the Hon. Prime Minister.

02. Accordingly I am pleased to inform you that you have been nominated as a member of Tripartite Committee of Trade Union Alliance.

Saman Rathnapriya
Director General
(Trade Union Relations)

கலந்துரையாடல்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள மூன்று பேர் கொண்ட விசேட குழுவின் உறுப்பினராக ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமாரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் தொழிற்சங்கங்களின் பணிப்பாளர் சமன் ரத்னாயக்கவால் வழங்கப்பட்டது.

# குருநகர் கடற்பகுதியில் அனுமதியின்றி கடலட்டை பிடித்த அறுவர் கைது





யாழ்ப்பாணம் – குருநகர் கடற்பகுதியில் அனுமதியின்றி கடலட்டை பிடித்த ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், படகு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காக குருநகர் மீன்பிடி பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# மன்னாரில் வெடி பொருட்களுடன் இருவர் கைது



*(மன்னார் நகர் நிருபர்)*

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளிமுனை கடற்கரைப் பகுதியில் ஒரு தொகுதி டைனமைட் வெடிபொருட்களுடன் இருவர் கடந்த வியாழக்கிழமை (09) மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் 200 டைனமைட் மற்றும் அதற்குப் பயன்படும் 160 அடி நூல் மற்றும் பட்டா ரக வாகனம் என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.


மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் துல்சான் நாகாவத்தவின் பணிப்பில், உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரபாத் விதானகேவின் வழிகாட்டலில் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு தற்காலிக பொறுப்பதிகாரி உ.பொ.ப.ஜயவர்தன பொ.சா.ரத்னமணல தலைமையிலான அணியினரே மேற்படி டைனமைட் வெடி பொருட்களை மீட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் நாரம்பன பகுதியைச் சேர்ந்த 35 மற்றும் 54 வயதுடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

மேற்படி சந்தேகநபர்கள் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் மேலதிக விசாரணையின் பின்னர் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# யாழ். மாநகர சபை முதல்வர் வேட்பாளரை ஏனைய கட்சியினர் நிராகரிப்பதற்கு அரசியல் விரோதமே காரணம்

## - பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவிப்பு -



70 வருட வரலாற்றைக் கொண்ட தமிழரசுக் கட்சியின் மாநகர சபை முதல்வர் வேட்பாளரை அரசியல் விரோதங்களும் குரோதங்களும் பழி வாங்கும் எண்ணமும் தான் ஏனைய கட்சியினர் நிராகரிப்பதற்கு காரணமென பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்,

யாழ். மாநகர சபையின் இடைக்கால முதல்வர் தெரிவு கோரமின்மையால் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் அவரை வினவிய நிலையில், அது குறித்து கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பாக மாநகர சபையில் மக்கள் எமக்கு பெரும்பான்மையை வழங்கத் தவறி விட்டார்கள். அதைவிட எதிர்வரும் காலத்தில் யாழ். மாநகர சபையில் 25க்கும் மேற்பட்ட ஆசனங்களைப் பெற்று யாழ். மாநகர சபையை பூரணமாக கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. அதற்குரிய ஆணையை மக்கள் வழங்குவார்கள் என நம்பிக்கையுடன் தெரிவிக்க விரும்புகின்றோம்.

எதிர்வரும் தேர்தலில் மாநகர சபையை தமிழரசுக் கட்சி பூரணமாக கைப்பற்றும் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. மக்கள் எங்களுடன்தான் உள்ளார்கள். ஓரிருவர் கூறும் வார்த்தைகள் நியாயமாகிவிட முடியாது.

எதிர்காலத்தில் மாநகர சபையை தமிழரசுக் கட்சி கைப்பற்றும் என்பதில் ஐயமில்லை. மக்களை ஏமாற்றி மாதச் சம்பளத்தை பெறுவதற்காக பின்வாசலால் கையெழுத்திட்டு சபை அமர்வில் கலந்துகொள்ளாது விட்ட ஏனைய கட்சிகளின் கதைகளை கேட்பதற்கு நாம் தயார் இல்லை.

ஏற்கனவே சூ.சிறில் பல வருடங்களுக்கு முன்னர் மாநகர சபையின் பிரதி முதல்வராக செயற்பட்டவர். அவர் நீண்ட அரசியல் அனுபவம் உள்ளவர். ஆளுமை மிக்கவர். அவ்வாறான ஒருவரைத்தான் இம்முறை எமது வேட்பாளராக தெரிவுசெய்தோம்.

அது மாத்திரமல்ல, கடந்த காலங்களில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து தமிழ் மக்களுக்காக பாராளுமன்றத்தில் கடுமையாக குரல் கொடுத்த ஒருவரைத் தான் தமிழரசுக் கட்சி முதல்வர் வேட்பாளராக தெரிவுசெய்துள்ளது.

எனவே, ஏனைய கட்சிகள் எமது கட்சியை பழிவாங்கும் முகமாக செயற்படுகிறார்கள் என்பது இப்போது அப்பட்டமாக வெளிப்பட்டுள்ளது.

ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட முதல்வர் ஆனோல்ட் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் பொங்கு தமிழ் நிகழ்வை யாழ். மாவட்டத்தில் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் நடத்தி தமிழ் மக்கள் மனதில் இடத்தைப் பிடித்தவர். இத்தகைய ஆற்றல் உள்ளவரே மாநகர சபை முதல்வர் பதவிக்கு தகுதியுள்ளவர் என்ற ரீதியில் கட்சி தெரிவுசெய்தது.

அதேபோல் அவர் பல்கலைக்கழகப் பட்டதாரி. ஒரு முதல்வரானவர் படித்தவராகவும் மக்களின் மனதில் இடம் பிடித்தவராகவும் இருக்க வேண்டும் என்ற காரணத்தினால் தான் கட்சி இமானுவேல் ஆனோல்டை கடந்த காலங்களில் முதல்வராக தேர்வு செய்திருந்தது.

எதிர்வரும் காலங்களில் மக்கள் எமக்கு பூரண ஆணை வழங்குமிடத்து சபையைத் திறம்பட செயற்படுத்துவோம் என்றார்.

# அனுமதிப்பத்திரமின்றி 60 ஆடுகளை லொறியில் கொண்டுசென்ற இருவர் கைது





*(கந்தளாய் நிருபர்)*

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேராற்றுவெளி பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி, சட்டவிரோதமான முறையில் சிறிய லொறியொன்றில் அறுபது ஆடுகளை ஏற்றிச்சென்ற இருவரை கைதுசெய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் குருநாகல் பகுதியை சேர்ந்த 30 மற்றும் 32 வயதுடையவர்கள் எனவும் கிண்ணியாவிலிருந்து கொழும்புக்கு ஆடுகளை அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக லொறியில் ஏற்றிச்சென்றபோதே கந்தளாயில் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தளாய் போக்குவரத்துப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களைத் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, அவர்கள் கந்தளாய் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் சந்தேக நபர்கள் ஆடுகளை ஏற்றிச்சென்ற லொறி கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சிறுபோகச் செய்கை எதிர்வரும் 15இல் ஆரம்பம்

சிறுபோகச் செய்கையை எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட நீர்த்தேக்கங்களில் தற்போது 67.5% நீர் காணப்படுவதாக திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் சுதர்ஷனி விதானபத்திரண குறிப்பிட்டார்.

பெரும்போகத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட 8 இலட்சம் ஏக்கர் வயலில் 80 வீதமானவற்றில் இம்முறை சிறுபோகச் செய்கையை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக அவர் கூறினார்.

மட்டக்களப்பு, மன்னார், புத்தளம், மொனராகலை போன்ற மாவட்டங்களில் சிறுபோகச் செய்கையை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை விவசாயிகள் முன்னெடுத்துள்ளதாகவும் சுதர்ஷனி விதானபத்திரண தெரிவித்தார்.

இந்த நிலையில், மழைநீரை அதிகளவு பயன்படுத்துவதனூடாக நீர் முகாமைத்துவத்தை சீராகப் பேண முடியுமென நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் சுதர்ஷனி விதானபத்திரண சுட்டிக்காட்டினார்.

வாரவெளியீடு
தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 12, 2023

# போதைப்பொருள் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்!

சர்வதேச போதைப்பொருள் வலையமைப்பின் பாதாள உலகக்கும்பலின் முக்கிய தலைவரான ஹரக் கட்டா எனப்படும் நதுன் சிந்தக மற்றும் சலிது மல்ஷித ஆகிய பாதாள உலக செயற்பாட்டாளர்களை நாட்டிற்கு அழைத்து வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மடகாஸ்கரில் அந்நாட்டு பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையில் கைதுசெய்யப்பட்ட பாதாளக்குழு உறுப்பினர்கள் இருவரையும் இலங்கைக்கு விமானம் மூலம் அழைத்து வரும் முயற்சிகள் தாமதமாகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களை நாட்டிற்கு அழைத்துவர சம்பந்தப்பட்ட விமான நிறுவனம் இதுவரை பதில் வழங்கவில்லை என்று பொலிஸ் தகவல் தெரிவிக்கின்றது. இந்த இரண்டு சந்தேகநபர்களையும் சாதாரண பயணிகள் விமானம் மூலம் இலங்கைக்கு அழைத்து வருவதற்காக, விமான நிறுவனங்களுடனான கலந்துரையாடலில் ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

சர்வதேச பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நபர்களை தனி விமானத்தில் மாத்திரமே ஏற்றிச்செல்ல வேண்டும் என்று சில விமான நிறுவனங்கள் நிபந்தனை விதித்துள்ளன.

மேலும், சந்தேகநபர்கள் அமரும் இருக்கைக்கு முன், பின் வரிசை இருக்கைகளை காலியாக வைக்க வேண்டும் எனவும் அந்த இருக்கைகளுக்கும் கட்டணம் செலுத்த வேண்டுமெனவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் முன்வைக்கும் வாதங்களின் அடிப்படையில் இந்த இரு சந்தேகநபர்களையும் இலங்கைக்கு அழைத்து வர முடியாத நிலை ஏற்படலாம் என்பதால், அவர்களை விரைவில் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த பாதாள உலகப் புள்ளிகளை விடுவிக்க இலங்கையின் அரசியல் பிரமுகர்கள் பலர் முயற்சிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதனால்தான் கடந்த வாரம் தேசிய பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் இது பற்றிய பேச்சு நடத்தப்பட்டுள்ளது. உடனடியாக இந்த விடயம் குறித்து ஆராய்ந்து அந்தப் புள்ளிகளை இலங்கைக்குக் கொண்டுவருமாறு பணித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

சர்வதேச போதைப்பொருள் வலையமைப்பின் முக்கிய புள்ளிகளான மேற்கண்ட நபர்கள், தனி ஜெட் விமானம் மூலம் மடகாஸ்கர் சென்றனர் என்றால் அவர்களின் செல்வாக்கை அதில் அறிந்துகொள்ளலாம். கடந்த காலங்களில் இதே போன்ற செல்வாக்கை மாக்கந்துர மதுஷ் என்ற போதைப்பொருள் புள்ளி கொண்டிருந்தார்.

ஆனால், அவர் உயிருடன் இருந்தால் அரசியல்வாதிகள் பலரின் தொடர்பாடல்கள் வெளிவந்துவிடும் என்று எண்ணி அவர் பாதுகாப்புத்துறையினரால் கொலை செய்யப்பட்டதாக அப்போது செய்திகள் வெளிவந்தன.

இப்போதும் இந்த சந்தேக நபர்கள் இலங்கைக்குள் கொண்டுவரப்படுவதைத் தடுப்பதும், அப்படியே கொண்டுவந்தால் அவர்களை கொல்வதும் என்று சதித்திட்டங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றனவா என்ற ஐயம் ஏற்படுகிறது.

அந்த ஐயத்தை நீங்கச் செய்வது அரசாங்கத்தினதும் பாதுகாப்புத்துறையினரதும் கடமை என்பதை வலியுறுத்த விரும்புகிறோம். போதைப்பொருள் என்னும் அரக்கனை சமூகத்தில் முற்றாக ஒழிக்க வேண்டுமாயின் அந்த வியாபாரத்தில் ஈடுபடுவோரை கைதுசெய்து உரிய தண்டனையை வழங்கவேண்டுமே தவிர கைதுசெய்யப்படுவோரை கொல்வதால் எந்தத் தீர்வும் ஏற்படாது.

# தமிழ்நாட்டுக்கு எதிராக வதந்திப்போர்!



**ரமணி**

ஸ்டாலினின் பிறந்தநாள் கொண்டாட்டம் டில்லிக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 70ஆவது பிறந்தநாள் மார்ச் முதலாம் திகதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

சென்னை வை.எம்.சி.ஏ. மைதானத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியனின் ஏற்பாட்டில் நடைபெற்ற பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவரும் ஜம்மு - காஷ்மீர் முன்னாள் முதல்வருமான பரூக் அப்துல்லா, சமாஜ்வாடி கட்சித் தலைவரும் உத்தரப் பிரதேச முன்னாள் முதல்வருமான அகிலேஷ் யாதவ், ராஷ்ட்ரிய ஜனதா தளக் கட்சித் தலைவரும் பீகார் துணை முதல்வருமான தேஜஸ்வி யாதவ் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

தமிழகக் கட்சியொன்றின் தலைவரின் பிறந்தநாள் விழாவில் தேசியத் தலைவர்கள் பங்கேற்றதை பாரதீய ஜனதா கட்சி அதிர்ச்சியுடன் பார்த்தது. இந்தியப் பிரதமராகும் தகுதி ஸ்டாலினுக்கு இருப்பதாக வட இந்தியத் தலைவர்கள் பகிரங்கமாக அறிவித்ததை பாரதீய ஜனதாத் தலைவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பீஹார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ்வின் உரையை பீகார் பாரதீய ஜனதா தலைவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. நரேந்திர மோடிக்கு சவால் விடும் தலைவர் எதிர்க்கட்சிகளிடம் இல்லை என்பதே உண்மை. அந்த இடத்தை ஸ்டாலின் நிரப்பி விடுவாரோ என்ற அச்சம் அங்கு ஏற்பட்டுள்ளது.

பீகார் பாரதீய ஜனதா கட்சியின் சார்பில் ட்விட்டரில் ஐந்து வீடியோக்களுடன் ஒரு பதிவு வெளியானது. அதில் , ''ஹிந்தியில் பேசியதற்காக பீகார் தொழிலாளர்கள் 12 பேர் தமிழ்நாட்டில் கொலைசெய்யப்பட்டிருக்கின்றனர். ஆனால், அந்த மாநில முதல்வரின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் தேஜஸ்வி யாதவ் பங்கேற்றிருக்கிறார்'' என்று குற்றஞ்சாட்டியது அந்தப் பதிவு. கொஞ்ச நேரத்திலேயே 'பதிவு செய்த விடயம் தவறு' என்று தெரிந்து அந்தப் பதிவு நீக்கப்பட்டது. ஆனாலும், அதற்குள் அந்தத் தவறான செய்தியும் வீடியோக்களும் பல நூறு பேரைச் சென்றடைந்துவிட்டன.

பீகார் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரான பாரதீய ஜனதாவின் விஜய்குமார் சின்ஹா இதில் ஒரு வீடியோவை சட்டமன்றத்திலேயே காட்டி, "இது போலியாக இருந்தால் நான் மன்னிப்புக் கோருகிறேன்'' என்று சொல்லி, தமிழ்நாட்டில் இருக்கும் பீகாரி தொழிலாளர்களைக் காப்பாற்றுமாறு கோரினார். அதைத் தொடர்ந்தே பீகார் அதிகாரிகள் குழு ஒன்று தமிழ்நாட்டுக்கு சென்றது.

இந்த வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் பரவியதும், பீகாரைத் தாண்டி பல வட இந்திய மாநிலங்களில் பதற்றம் தொற்றிக்கொண்டது. உத்தரப் பிரதேச பாரதீய ஜனதாக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் பிரசாந்த் படேல் உம்ரா, சுபம் சுக்லா, பத்திரிகையாளர் முகமது தன்வீர், 'டைனிக் பாஸ்கர்' நாளிதழின் ஆசிரியர் ஆகியோர் மீது வதந்தி பரப்பியதாக வழக்கு பதிவுசெய்திருக்கிறது தமிழ்நாடு பொலிஸ்துறை. அதில் ஒருவர் கைதுசெய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக முன்பிணை பெற்றுள்ளார்.

ஹிந்திக்கு எதிராகக் குரல் கொடுப்பதில் தமிழகம் முன்னணி வகிக்கிறது. அறிஞர் அண்ணா காலத்திலிருந்து ஹிந்தித் திணிப்புக்கு எதிராக தமிழ்நாடு போராட்டம் செய்கிறது. ஹிந்திக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆனால், ஹிந்தித் திணிப்பைக் கடுமையாக தமிழகம் எதிர்க்கிறது. அண்ணாமலையும் தன் பங்குக்கு தமிழக அரசின் மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

'வட இந்தியத் தொழிலாளர்கள்' என்ற ஒரே அடைப்புக்குறிக்குள் இவர்களை வைத்தாலும், பீகார், ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம், உத்தரப்பிரதேசம், ஒடிசா ஆகிய மாநிலங்களிலிருந்தே அதிகம் பேர் தமிழ்நாட்டுக்கு செல்கிறார்கள். கடந்த 2016ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு எடுத்த ஓர் ஆய்வின்படி, இங்கு 10.6 இலட்சம் புலம்பெயர் தொழிலாளர்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டது. இப்போது இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாக உயர்ந்திருக்கலாம். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு என நகர வளர்ச்சியும் சிறு தொழிலகங்களும் அதிகமிருக்கும் வட மாவட்டங்களில் இவர்கள் பெருமளவு இருக்கிறார்கள். இங்கிருக்கும் ஒவ்வொரு சிப்காட் தொழிற்பேட்டையிலும் புலம்பெயர் தொழிலாளர்கள் உழைக்கிறார்கள். சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் உடலுழைப்பு தேவைப்படும் தொழில்களைச் செய்வோரில் 70% பேர் இவர்களே. கட்டுமானத் தொழில்துறையில் 70 முதல் 85% பேர் புலம்பெயர் தொழிலாளர்கள்தான். ஐடி காரிடார் தொடங்கி மெட்ரோ ரயில் கட்டுமானம் வரை நவீன சென்னையின் அடையாளங்கள் இவர்களின் வியர்வையில் உருவானவையே. அதேபோல் கோவை, ஈரோடு, திருப்பூர் வட்டாரத்திலும் கணிசமாக இருக்கிறார்கள். கோவை, திருப்பூர் ஜவுளி தொழிலகங்களில் இவர்களின் உழைப்பு அதிகம். ஊட்டி கேரட் தோட்டங்களில் தொடங்கி தஞ்சையில் விவசாயப் பணிகள் வரை இவர்களைப் பார்க்க முடிகிறது. சின்னச் சின்ன நகரங்களில் இருக்கும் சலூன்களில், ஹோட்டல்களில் கூட புலம்பெயர் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.

வெளி மாநிலத் தொழிலாளர்கள் இல்லை என்றால் தமிழகத்தின் கட்டுமானப் பணிகள், ஹோட்டல்கள், தொழிற்சாலைகள் என்பன முடங்கிவிடும் அபாயமுள்ளது. அவர்களின் மாநிலங்களில் தினக்கூலி மிகவும் குறைவானது. தமிழகத்தில் இரண்டு மடங்கு அதிகமானது. தொழிலாளிகளுக்குரிய மரியாதை, வசதி,கௌரவம் என்பன தமிழகத்தில் கிடைக்கின்றன.

தமிழகத்தில் கல்வி கற்றோர் தொகை அதிகரித்ததால் கல்விக்கேற்ற வேலையைத் தேடுகிறார்கள். அதிகம் படிக்காதவர்கள் தமிழ்நாட்டுக்குப் புலம்பெயர்ந்து செல்கிறார்கள். தமிழகத்திலுள்ள பலரும் வளைகுடா நாடுகளுக்கு உழைக்கச் செல்கிறார்கள். ஐ.டி. படித்தவர்கள் அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் புலம்பெயர்கிறார்கள்.

இரண்டு மாநிலங்களை மோதவிட்டு வேடிக்கை பார்க்க எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.



# சிங்கள ஆளும் வர்க்கத்தின் ஜனநாயக முகத்திரையைக் கிழித்தவர்கள் தமிழர்களே!

சுதந்திர இலங்கையில் கடந்த 75 வருடங்களாக ஜனநாயகமற்ற நாட்டில் திறந்தவெளிச் சிறைச்சாலை கைதிகளாக வாழ்வதாக தமிழ் மக்கள் எழுப்பிவருகின்ற குரலை இன்று அதாவது 75 வருடங் களுக்குப் பிறகு தென்னிலங்கையில் முதன்முதலாகக் கேட்கக்கூடியதாக இருக்கின்றது.

கடந்த 75 வருடங்களாக ஜனநாயகமற்ற ஜனநாயக நாட்டில் வாழ்ந்து வருகின்றோம் என்று தென்னிலங்கை தற்போது வெளிப்படையாகவே புலம்புகின்றது.

**ஜனநாயகத்திற்கு பிரியாவிடையா?**

ஜனநாயகத்திற்கு பிரியாவிடை அளிக்கப்படுகின்றதா? என்று கேள்வி எழுப்பும் தென்னிலங்கை, இலங்கையில் ஜனநாயகம் கூட்டுப் பலாத்காரத்திற்கு ஆளாகியுள்ளதாகவும் அராஜகத்தின் மூலம் ஜனநாயகம் கற்பழிக்கப்படுவதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

**நாம் சபிக்கப்பட்டவர்களா?**

இலங்கையில் இன்றைய காலகட்டத்தில் வாழ்பவர்கள் சபிக்கப்பட்டவர்களா என்றும் கேள்வி எழுப்பும் தென்னிலங்கை, தாம் பாவப்பட்ட மக்களாகவே வாழ்வதாகவும் தெரிவிக்கின்றனர். ஏனென்றால் எதிலும் எங்கும் தமக்கு மன அமைதி கிடைப்பதில்லை.

நாட்டின் சாதாரண குடிமக்களுக்கு எதிராகவே அனைத்து செயற்பாடுகளும் உள்ளன. உணவு, எரிபொருள், மின்சாரம், தண்ணீர், போக்குவரத்து, சுகாதாரம், கல்வி போன்ற அத்தியாவசியமான வாழ்க்கைத் தேவைகளின் விலைகள் எந்தவித கட்டுப்பாடும் இல்லாமல் உயர்ந்து கொண்டே செல்கிறது. பொதுவெளியில் போஸ்டர் பிடித்து கருத்துகளை தெரிவிக்க முடியாது. எங்களின் அகிம்சை போராட்டங்கள் பாசிச மற்றும் பயங்கரவாதம் என்று முத்திரை குத்தப்பட்டு, நாங்கள் தண்ணீர் பீரங்கிகளினாலும், கண்ணீர்ப்புகைக் குண்டுகளினாலும்,தடியடிகளுடன் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்றோம்.

> **நாடு தோற்றுப்போன அரசாக உருவெடுக்கக் காரணமான கர்த்தாக்களை இனங்கண்ட தென்னிலங்கை இதற்கான மூலவேரை அடையாளப்படுத்தத் தவறிவிட்டது.**

**நாஜி வதை முகாமா?**

இலங்கை என்றால் என்ன? இது ஒரு நாஜி வதை முகாமா? என்று கேள்வி எழுப்பும் தென்னிலங்கை, தற்போது மக்களுக்கும், மக்களின் அங்கீகாரம் இல்லாத முரட்டு அரசுக்கும் இடையேயான போராட்டம்தான் நடைபெறுகின்றது என்றும் கூறுகின்றனர்.

மக்களிடம் ஆயுதங்கள் இல்லை. அவர்களின் குரல், கைகளில் பதாகைகள் மட்டுமே இருக்கின்றன.

மக்களுக்கு இது ஒரு நாளாந்த போராட்டமாக அமைந்துவிட்டது.

ஆனால், முரட்டுத்தனமான ஆட்சியாளரிடம் முப்படைகள், காவல்துறை மற்றும் பாதாள உலகம் என்று அனைத்து சக்திகளும் பின்புலமாக உள்ளன. அதற்கும் மேலாக கொடிய துப்பாக்கிகளும் தண்ணீர் பீச்சியடிக்கும் வாகனங்களும் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் மற்றும் நிராயுதபாணிகளான மக்களைத் தாக்கவென் மேலதிகமாக தடிகளும் உள்ளன. அவர்களிடம் இல்லாதது மனசாட்சியும் மனிதாபிமானமும் மட்டுமே. இந்த அரசின் அடியாட்கள் நாட்டுக்கு சாபம் இல்லையா?

இந்த நாட்டில் வாழ்வது நிச்சயமாக ஒரு சாபமாகத் தெரிகிறது.

திருடுவதும், கமிஷன் பெறுவதும், கொள்ளையடிப்பதும் வெளிப்படையாகவே நடைபெறுகின்றது. இந்த விடயங்களை தடுத்து நிறுத்தவேண்டிய அவசியமில்லை என்றவாறு ஆட்சியாளர் உள்ளனர்.

நாடு கடுமையான சாபத்திற்கு ஆளாகிறது. எதுவும் வெற்றிபெறவில்லை. அனைத்தும் தோல்வியடைந்தன.

விவசாயம் அழிந்தது. கடன்கள் செலுத்தத் தவறியதால் நாடு திவாலானதாக அறிவிக்கப்பட்டது. எரிபொருள் இல்லை. உணவு இல்லை. பாடசாலைகளுக்கு புத்தகங்கள் இல்லை. மருந்து இல்லை. வேலை இல்லை. அதிகரிக்கப்பட்டுள்ள மறைமுக வரியை செலுத்த மக்களிடம் பணம் இல்லை. மின்சாரம் மற்றும் பிற பொதுவான வசதிகளுக்கான கட்டணம் அதிகரித்து வருகிறது.

இலங்கை, சபிக்கப்பட்டு நலிந்துவிட்டது. இந்த சாபத்திலிருந்து நாடும் மக்களும் எப்போது விடுதலையாவர் என்ற எதிர்பார்ப்புடன் மக்கள் நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றனர்.

**அழிந்த ஜனநாயகம்**

அரசியலமைப்பு மற்றும் தேர்தல் சட்டங்களில் உள்ள பல பாரிய குறைபாடுகளினால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இந்த நாட்டில் ஜனநாயகத்தின் இதயத்தை பறிக்கும் புற்றுநோயாக மாறியுள்ளது. எனவே, இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு என்பது முற்றிலும் தவறான பெயர். அரசியல் காரணங்களுக்காக தேர்தல்கள் தாமதமாகவோ அல்லது இரத்துசெய்யப்பட்டோ, மக்களுக்கு அவர்களின் வாக்குரிமை மறுக்கப்படும் எந்த நாடும் தன்னை ஜனநாயகம் என்று அழைக்க முடியாது.

அனைத்தையும் ஜனாதிபதி தனது கட்டைவிரலின் கீழ் வைத்துள்ளார்.

கவலையளிக்கும் வகையில் நிறைவேற்று அதிகாரம் நாடாளுமன்றத்தில் ஆதிக்கம் செலுத்தி அராஜகத்திற்குள் நாட்டையும் மக்களையும் ஆழ்த்தியுள்ளது. இத்தகைய போக்கினை மக்கள் தொடர்ச்சியாக பல ஜனாதிபதிகளின் கீழ் பார்க்கின்றனர். இன்று நிலைமை மோசமான நிலைக்குத் திரும்பியுள்ளது.

அரசியலமைப்புச் சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் என அனைத்தையும் ஜனாதிபதி தனது கட்டைவிரலின் கீழ் வைத்துள்ளார்.

**எதேச்சதிகாரத்தை நோக்கி இலங்கை!**

இலங்கை ஜனநாயகம் முன்னெப்போதும் இல்லாத வகையில் பெரும் ஆபத்தில் உள்ளது. இலங்கை எதேச்சதிகாரத்தை நோக்கிச் செல்வதாக தேர்தல் கண்காணிப்பாளர்களும் ஏனைய சிவில் சமூக அமைப்புகளும் எச்சரித்துள்ளன.

ஆனால், எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய வேண்டிய தருணத்தில் பிரிந்துநின்று தமது பலத்தை சோதித்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

அண்மையில் ஜே.வி.பி. எதிர்ப்பாளர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மரணங்கள் மேலும் தொடர்கின்றன. தமது அரசியல் எஜமானர்களை மகிழ்விப்பதற்காக அணிவகுத்துச் செல்லும் பொலிஸாரின் கைகளினால் என்ன நடக்கப்போகிறது என்பதற்கான முன்னறிவிப்பாகவே இந்த மரணத்தைப் பார்க்கவேண்டியுள்ளது.

**கற்பழிப்பாளர்களின் காவலில் இலங்கை?**

கூட்டுப் பலாத்காரத்தால் பாதிக்கப்பட்ட பெண் பலவந்தமாக கற்பழிப்பாளர்களின் காவலில் வைக்கப்படும் அதே இக்கட்டான நிலையை இலங்கையும் காண்கிறது.

பொது நிதியை திருடுவதற்கும் பொருளாதாரத்தை தவறாக நிர்வகிப்பதற்கும், திவாலாவதற்கும் காரணமானவர்கள் தொடர்ந்து ஆட்சியில் உள்ளனர்.

இன்னும் மோசமானது வரி செலுத்துவோரின் இழப்பில் மக்களை மேலும் தியாகங்களைச் செய்து பொருளாதாரத்தை சீரமைக்க உதவுமாறு இந்த அராஜக அரசியல் கதாபாத்திரங்கள் வலியுறுத்துகின்றன.

பொது நிதியை திருடுவதற்கும், பொருளாதாரத்தை தவறாக நிர்வகிப்பதற்கும், நாடு திவாலாவதற்கும் தோற்றுப்போன அரசாக இலங்கை வீழ்ந்து கிடப்பதற்கும் காரணமானவர்கள் தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தில் உள்ளனர்.

**பாகிஸ்தானைப் பாருங்கள்**

பாகிஸ்தான் பிரதமர் ஷேபாஸ் ஷெரீப் அமைச்சர்கள் மற்றும் சிறப்பு ஆலோசகர்கள் தங்கள் நாட்டின் பொருளாதார நிலையை கருத்திற்கொண்டு சம்பளம் மற்றும் சலுகைகளை கைவிட முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளார்.

அவரைப் பொறுத்தவரை ஜூன் 2024 வரை ஆடம்பரப் பொருட்களை வாங்குவதற்கும் அனைத்து வகையான புதிய கார்களை வாங்குவதற்கும் முழுத் தடை விதிக்கப்படும்.

அமைச்சரவை உறுப்பினர்கள் பயன்படுத்தும் அனைத்து சொகுசு கார்களும் இரத்துசெய்யப்பட்டு ஏலம் விடப்படும்; அமைச்சரவை உறுப்பினர்கள் வெளிநாட்டுப் பயணங்களின்போது ஐந்து நட்சத்திர விடுதிகளில் தங்க மாட்டார்கள்.

அரசாங்க அதிகாரிகள் கட்டாயமான வருகைகளை மேற்கொள்ள மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். மேலும் அவர்கள் பொருளாதாரத்தில் பயணிப்பார்கள். அரச அதிகாரிகளுக்கு இனி பாதுகாப்பு கார்கள் வழங்கப்படாது. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு புதிய நிர்வாக அலகு பிரிவு அல்லது துணைப்பிரிவு உருவாக்கப்படாது. எரிவாயு மற்றும் மின்சாரத்தை சேமிக்க, கோடை காலத்தில் அலுவலகங்கள் காலை 7.30 மணிக்கு திறக்கப்படும்.

அரசு நிகழ்ச்சிகளில் ஒரு உணவு மட்டுமே அனுமதிக்கப்படும். இஸ்லாமாபாத்திலுள்ள அனைத்து அமைச்சுகளிலும் பிரதமர் மாளிகையிலும் ஒரே ஒரு உணவு மட்டுமே இருக்கும். தேநீர் நேரம் என்றால், தேநீர் மற்றும் பிஸ்கட் மட்டுமே வழங்கப்படும்.

> **தென்னிலங்கையின் அரசியல் களத்தில் மாற்றத்தை நோக்கிய பயணத்தை வழிநடத்த உரிய தலைமை இருப்பதாகக் கண்ணுக்கெட்டிய தூரம்வரை தெரியவில்லை.**

அமைச்சுகள், துறைகள் மற்றும் துணைத் துறைகளின் தற்போதைய செலவு 15% குறைக்கப்படும். ஏக்கர் பரப்பளவில் உள்ள அரச வீடுகள் நகர வீடுகளாக மாற்றப்படும்.

300 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள அரச பரிசுகளை வைத்திருக்க எந்த அதிகாரியும் அல்லது அமைச்சரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

ஒரு கருவூலக் கணக்கு மேலதிகமாக நிறுவப்படும்.

இலங்கை அரசாங்கம் அவ்வாறு செய்ய முடியாது என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, அதன் தலைவர்கள் தங்கள் தேசபக்தியை பகிரங்கமாக வெளிப்படுத்தும் வாய்ப்பையும், நாட்டிற்காக இறக்கத் தயாராக இருப்பதையும் ஒருபோதும் இழக்க மாட்டார்கள்.

இலங்கையின் எந்தவொரு அமைச்சராவது தனது உத்தியோகபூர்வ வாகனங்களை ஏலத்தில் விடுவதற்கு அனுமதிக்க விரும்புகின்றாரா?

இந்தத் தகுதியானவர்கள் தேர்தல் நேரத்தில் லொரிகளில் பணம் செலவழிக்கும் அளவுக்கு செல்வந்தர்கள். எனவே, அவர்கள் ஏன் எரிபொருளுக்கு பணம் செலுத்த முடியாது? தங்கள் வாக்காளர்களைபோல் அவர்களால் ஏன் பஸ் அல்லது ரயிலில் பயணிக்க முடியாது? அரசியல்வாதிகள் அவ்வாறு செய்யாத வரை, பொதுப் போக்குவரத்தை மேம்படுத்த வேண்டிய அவசியத்தை அவர்கள் உணர மாட்டார்கள்.

பெரும்பாலும் பாராளுமன்ற அமர்வுகள் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றன. மேலும் அவையில் கோரம் இருக்க சபாநாயகருக்கு கடினமாக உள்ளது.

**சுவீடனில் பிரதமருக்கு மாத்திரமே வாகனம்**

மிகவும் வளர்ந்த நாடுகளில் ஒன்றான சுவீடனில் பிரதமரைத் தவிர, வேறெந்த மக்கள் பிரதிநிதிக்கும் அதிகாரப்பூர்வ வாகனத்திற்கு உரிமை இல்லை.

**எம்.பிக்களுக்கு பஸ், ரயில் பாஸ்**

எம்.பிக்களுக்கு பஸ், ரயில் பாஸ் வழங்கப்படுகிறது. அவர்கள் தங்கள் தனிப்பட்ட வாகனங்களை அவர்களின் சொந்த செலவில் பயன்படுத்தலாம்.

**சுவீடன் சபாநாயகருக்கு கூட உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்படவில்லை.**

சுவீடன் சபாநாயகருக்குகூட உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்படவில்லை. இப்படிப்பட்ட நாடுகள் வளர்ந்ததில் ஆச்சரியமில்லை. இலங்கை இன்னும் வளர்ச்சியடையாமல் இருப்பதற்கு அரசியல்வாதிகளை தெய்வமாக்குவது ஒரு முக்கிய காரணம்.

எதிர்ப்பு அரசியல் அதிகரித்து வருகிறது.இது வெளிப்படையாகத் தெரிகிறது.

நாடு முழுவதும் ஒரே நேரத்தில் வெகுஜனப் போராட்டங்கள் வெடித்தால், குழப்பத்திலிருந்து ஒழுங்கைக் கொண்டுவரவோ அல்லது தங்கள் அரசியல் எஜமானர்களைப் பாதுகாக்கவோ காவல்துறையோ அல்லது அரசாங்க சார்பு ஜெனரல்களோ எதுவும் செய்ய முடியாது.

**மக்கள் சக்திக்கு முன் பொலிஸாரும் இராணுவமும் நிகரில்லை**

பொதுமக்களின் கோபத்தின் மற்றொரு சுனாமி உருவாவதற்கான அறிகுறிகள் உள்ளன. மேலும் அது முழு நாட்டையும் குழப்பத்தில் மூழ்கடிக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று தென்னிலங்கை பொரிந்து தள்ளுகின்றது.

சுதந்திர இலங்கையில் ஜனநாயகத்தை இழந்த தமிழ் மக்கள் கடந்த 75 வருடங்களாக தமது சுதந்திரத்துக்காக போராடி வருகின்றனர். 75 வருடங்களாக தென்னிலங்கையின் ஆளும் வர்க்கம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை கொடூரமாக மிலேச்சத்தனமாக அடக்கி ஒடுக்கி வருகின்றது. தென்னிலங்கையின் ஆளும் வர்க்கம் ஆட்சி அதிகாரத்துக்காக பிரிந்துநின்று போராடியபோதும் தமிழர் விவகாரத்தில் சமரசத்துக்கு இடமில்லை என்ற நிலைப்பாட்டை இன்றுவரை மிக இறுக்கமாகக் கடைப்பிடித்துவருகின்றது.

**இனவாத போதைக்குள் இன்றும் தென்னிலங்கை**

தென்னிலங்கையின் ஆளும் வர்க்கத்தின் தமிழ் மக்களுக்கெதிரான இந்த கொள்கையினையும் கோட்பாட்டினையும் தென்னிலங்கை மக்களும் தொடர்ந்தும் இன்றுவரை ஆதரித்தே வருகின்றனர்.

தென்னிலங்கையின் ஆளும் வர்க்கத்தின் இனவாத முலாம் பூசப்பட்ட கோட்பாட்டுக்குள் மூழ்கிக் கிடக்கும் தென்னிலங்கை, இனவாத போதைக்குள் இருந்து விடுபட இன்றைய நிலையிலும் தயாராக இல்லை.

ஆனால், இன விவகாரத்திற்கான தீர்வின்றி நாடு மூச்சுவிடுவதற்கே வழியில்லை என்ற நிலையிலும் தென்னிலங்கை இனவாதப் போதைக்குள் மூழ்கிக் கிடக்கின்றது.

**தென்னிலங்கை தேடும் நிரந்தரத் தீர்வு சாத்தியமில்லை!**

தற்போதைய நிலையில் தென்னிலங்கை புள்ளடி போட்டு முகங்களை மாற்றினாலும் நாடு எதிர்கொண்டுள்ள பாரிய பிரச்சனைகளுக்குத் தீர்வு கிடைப்பதாக அமையாது. வேண்டுமானால் மூச்சுவிட அவகாசம் கிடைக்கலாம். இதற்கு மேல் நிரந்தரத் தீர்வுக்கு வழிவகுப்பதாக அமையாது.

துட்டகைமுனுவிடம் ஏன் முடங்கிப் படுத்திருக்கின்றாய் என்று அவருடைய தாய் விகாரமகாதேவி வினவுகின்றாள். அதற்குப் பதிலளித்த துட்டகைமுனு, வடக்கே தமிழர்கள் தெற்கே கடல். எவ்வாறு நீட்டி நிமிர்ந்து படுப்பது என்று கூறியதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இந்தப் பரம்பரையில் வந்த படைச்சிப்பாய் இன்று புத்தர் கனவில் வந்து யாழ். நிலாவறையில் புத்தர் சிலையை வைக்கக் கூறியதாக கூறுகின்றார்.

எனவே, ஒரு புறம் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை மறுதளித்துக்கொண்டு மறுபுறம் தென்னிலங்கை தமது அரசியல் அபிலாஷை குறித்தும் தமக்கான ஜனநாயகம் குறித்தும் உரத்துப் பேசிக் கொண்டிருக்கின்றது.

அந்தவகையில் தென்னிலங்கையில் ஜனநாயகம் குறித்த கலந்துரையாடல்கள் இன்று பெரிய அளவில் இடம்பெற்று வருகின்றன. ஆங்கில, சிங்கள ஊடகங்களில் மாத்திரமல்ல, பொதுவெளியிலும் தென்னிலங்கையின் ஜனநாயகம் பேசு பொருளாக உள்ளது.

**தெற்கில் அரசியல் மூலதனமாக - சித்தாந்தமாக இனவாதக் கோட்பாடே உள்ளது**

நாடு தோற்றுப்போன அரசாக உருவெடுக்கக் காரணமான கர்த்தாக்களை இனங்கண்ட தென்னிலங்கை, இதற்கான மூலவேரினை அடையாளப்படுத்தத் தவறிவிட்டது.

கடந்த 75 வருடங்களாக அரசோச்சியவர்களின் அரசியல் மூலதனமாக - சித்தாந்தமாக இனவாதக் கோட்பாடே இருந்தது என்பதை கணக்கில் எடுக்கத் தவறிவிட்டனர் என்று கூறுவதைவிட தமது வசதிக்காக தவிர்த்துக்கொண்டனர் என்று கூறுவதுதான் பொருத்தமாக அமையும். இது இலங்கையின் சுபீட்சத்திற்கும் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பெரும் தடையாகவே தொடர்ந்தும் இருக்கப்போகின்றது.

மொத்தத்தில் வரலாறு இன்று கற்பித்துக்கொண்டிருக்கும் பாடத்தில் இருந்துகூட யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் தென்னிலங்கை, தமக்கான ஜனநாயகத்திற்கான பாதையினை செப்பனிட்டுக்கொள்ள புதிய தலைமையினை நாடி நிற்பதுடன், தனிவழி போக தீர்மானித்துள்ளது.

ஆனால், தென்னிலங்கையின் அரசியல் களத்தில் மாற்றத்தை நோக்கிய பயணத்தை வழிநடத்த உரிய தலைமை இருப்பதாகக் கண்ணுக்கெட்டிய தூரம்வரை தெரியவில்லை. வேண்டுமானால் நல்லாட்சி போன்ற ஒரு மாயைக்குள் தள்ளக்கூடிய ஆட்சிக்கு வித்திடலாம். அது நிச்சயமாக தென்னிலங்கை எதிர்பார்த்து நிற்கின்ற மாற்றமாக அமையாது.



வி.தேவராஜ் – மூத்த ஊடகவியலாளர்
Email: vathevaraj@gmail.com

## ஆசிரியர் சங்கத் தலைவர்களுக்கு ஒரு கடிதம் ....




உங்கள் எல்லாருக்கும் இந்தப் பத்தாம்பசலி பேரம்பலத்தின்ரை வணக்கம். நீங்கள் எல்லாம் மெத்தப் படிச்ச ஆக்கள் எண்டபடியால நல்லது கெட்டது நாலும் தெரியும் எண்டு என்னைப்போல கொஞ்சம் அரைகுறையாப் படிச்ச ஆக்கள் நினைச்சுக்கொண்டம். பேந்து இப்பதான் உங்களுக்கு எல்லாம் கற்ற அறிவு, பெற்ற அறிவு, உற்ற அறிவு, பட்டறிவு, பகுத்தறிவு எண்டு ஒரு கோதாரியும் இல்லை எண்டது வடிவா விளங்குது. வரி அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, கரண்ட் பில் அதிகரிப்பு, உள்ளூராட்சித் தேர்தலை நடத்து எண்டு பல காரணங்களை முன்வைச்சு நீங்கள் போராட்டம், வேலைநிறுத்தம் எண்டு செய்யிறியள். நல்ல விசயந்தான். ஆனால், எனக்கொரு விஷயம் விளங்கேல்ல. உந்த வரி அதிகரிப்பாலை வாத்திமாருக்கோ அதிபர்மாருக்கோ நேரடியா எந்தவிதமான பாதிப்பும் இல்லை. உங்கடை சம்பளங்களிலை இருந்து வரி ஒண்டும் வெட்டுப்படேல்லை. ஆனால், எதிர்மறையான பாதிப்பு இஞ்சை இந்த நாட்டில இருக்கிற எல்லாச் சனத்துக்கும் இருக்கிறமாதிரி இருக்குது. அதுக்காக நீங்கள் ரோட்டிலை இறங்கிறது எனக்கெண்டால் சரியாப் படேல்லை.

சர்வதேச ஒப்பந்தச் சட்டங்களிலை கல்விக்கான உரிமை ஓர் அடிப்படை மனித உரிமையாக அங்கீகரிக்கப்பட்டு இருக்கெண்டது உங்களுக்குத் தெரியும். ஐ.நா. பொதுச் சபையின் பிரகடனமானது மனித உரிமைகளின் உறுப்புரை 26 (1), (2) ஒவ்வொருவருக்கும் கல்வி கற்பதற்கான உரிமை, ஆரம்பக் கல்வியின் அவசியம் பற்றிச் சொல்லுது. ஐ.நா. சிறுவர் உரிமைகள் சாசனம் 18 வயதிற்குட்பட்ட அனைவரும் சிறுவர்கள் எண்டு சொல்லி அதுகின்ரை உறுப்புரை 28 சிறுவர்களின் கல்வி உரிமையையும் வலியுறுத்துது. பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான சர்வதேச மாநாட்டின் (ICESCR) 13ஆம் பிரிவும் கல்வி அடிப்படை மனித உரிமை எண்டு வலியுறுத்துது. அதோட கல்வி எண்டது இந்த நாட்டிலை ஓர் அடிப்படை உரிமையாக இல்லாட்டிலும் கூட இலங்கையில் எழுத்தறிவின்மையை முற்றாக இல்லாமல் செய்யவேண்டி யாவருக்கும் எல்லா மட்டங்களிலும் கல்வியைப் பெறுவதற்குரிய சமசந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எண்டு நாட்டின்ரை அரசியலமைப்பின்ரை 27ஆவது பிரிவில வடிவாச் சொல்லி இருக்கெண்டு உங்களுக்குத் தெரியும்தானே.

அப்ப இவ்வளவத்தையும் தெரிஞ்சுகொண்டு நீங்கள் ஆர்ப்பாட்டம், வேலைநிறுத்தம், ஊர்வலம் எண்டு வெளிக்கிட்டு இந்த நாட்டில உள்ள எத்தினையோ மில்லியன் பிள்ளையளின்ரை அதுகும் பெருமளவான பிள்ளையள் ஏழை எளியதுகளின்ரை வறுமைக்கோட்டுக்கு கீழ வாழுகின்ற பெற்றோரின்ரை பிள்ளையள். அப்பிடிக்கொத்த பிள்ளையளின்ரை அடிப்படை உரிமையை இல்லாமல் செய்யிறியள். அதை மறுக்கிறியள் எண்டது உங்களுக்கு உன்னாண விளங்கேல்லையோ. வாக்குரிமை வாழும் உரிமை பற்றி கதைக்கிற நீங்கள், கல்வி உரிமையை எங்கடை பிள்ளையள் ஒழுங்காப் பெறேல்லை எண்டால் உந்த வாக்குரிமையை இல்லாட்டில் வாழும் உரிமையை அவையாலை சரியான முறையில நிலைநாட்டேலும் எண்டு நினைக்கிறியளே.

இப்ப பாத்தால் நீங்கள் விடைத்தாள் திருத்திறதுக்கான கூலியை ரெண்டாயிரத்தில இருந்து மூவாயிரமாக் கூட்டித் தரேல்லை எண்டால் உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்த மாட்டம் எண்டு அடம்பிடிக்கிறியள். இப்ப இருக்கிற பொருளாதார நிலைமையில அரசாங்கத்தாலை உதைச் செய்யேலாது எண்டு தெரிஞ்சுகொண்டும் நீங்கள் இப்பிடி அடம்பிடிக்கிறதன் மூலம் எவ்வளவோ கஷ்ட நஷ்டத்துக்கு மத்தியில கரண்ட் இல்லாமல் ஒழுங்காத் தின்னக் குடிக்க வழியில்லாமல் தங்கடை எதிர்காலம் பற்றிய கனவோடை சோதினை எழுதின இலட்சக்கணக்கான பிள்ளையளின்ரை எதிர்காலத்தோடை விளையாடுறியள். அதுகள் வாற ரிசல்ற்ரை வைச்சுத்தானே திரும்ப சோதினை எடுக்கிறதோ இல்லாட்டில் வெளிநாட்டிலையோ உள்நாட்டிலையோ மேலை படிக்கிறதோ இல்லாட்டில் வேலை வெட்டிக்குப் போறதோ எண்டு தீர்மானிக்க முடியும்.

உங்கடை முட்டாள்தனமான தான்தோன்றித்தனமான வேலையாலை இந்த நாட்டின்ரை எதிர்காலச் சந்ததியின்ரை வாழ்க்கையை அவையின்ரை எதிர்காலத்தை நீங்கள் சீரழிக்கிறியள் எண்டதை உங்களாலை விளங்க ஏலாமல் இருக்குதோ. உந்தப் பேப்பர்களைத் திருத்தினால்தானே மற்ற மற்ற சோதினையளை வைக்கலாம். அப்பிடி வைக்காமல் போனால் இந்த நாட்டிலை எவ்வளவு பெரிய நெருக்கடி வரும், எத்தினை மில்லியன் பிள்ளையள் மன உளைச்சலுக்கு ஆளாகுங்கள். உதால அதுகள் சமூகத்துக்கு உதவாத தேவையில்லாத வேலயளிலை ஈடுபட்டு தங்களைத் தாங்களே சீரழிக்கிற ஒரு நிலைமைக்கு எல்லோ போகுங்கள் .

உப்பிடித்தான் முந்தி COVID-19 தொற்றுநோய் வந்து மார்ச் 2020 முதல் பள்ளிக்கூடங்களை மூடவேண்டிய ஒரு தேவை வந்து அரசாங்கம் அதுகளை மூடி இருக்கிற கொஞ்ச நஞ்ச வசதியளை வைச்சு ஒன்லைனிலை பாடங்களை நடத்த வெளிக்கிட்டது. அப்பவும் நீங்கள் சம்பளத்தை கூட்டச் சொல்லி, சம்பள முரண்பாடுகளை நீக்கச் சொல்லி, கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்தை மீளப்பெற வேணும் எண்டு வேலைநிறுத்தம் எல்லாம் செய்தனியள். உங்கடை மனசாட்சியை வைச்சு சொல்லுங்கோ வரியக்கணக்கா உந்தப் பள்ளிக்கூடங்கள் பூட்டி இருக்கேக்கை உங்கட எத்தினை அங்கத்தவர்கள் பிள்ளையளுக்கு படிக்க உதவி செய்தவை. எல்லாரும் வீட்டிலை சும்மா இருந்து கொண்டேல்லோ செய்யாத வேலைக்கு சம்பளம் எடுத்தனீங்கள். நீங்கள் வேலை செய்யேல்லை எண்டு போட்டு அரசாங்கம் உங்களுக்கு சம்பளம் தராமல் விட்டதே. நான் அறிய கொஞ்ச வாத்திமார் பிள்ளையளுக்கு அங்கையும் இஞ்சையும் எண்டு ஓடு பட்டுத் திரிஞ்சு அவையிட்டை இவையிட்டை எண்டு பல்லைக் காட்டி அதை இதை வாங்கி படிக்க உதவி செய்தவை மற்றவை எல்லாம் சும்மா சம்பளம் எடுத்துத் திண்டுகொண்டு இருந்தவை.

அதிலையும் கனபேர் பள்ளிக்கூடம் போக முடியுமாக இருந்தும் கொவிட்டாலை போகேலாது எண்டு சாட்டுச்சொல்லிப் போகாமல் ஒன்லைனிலை காசு வாங்கிப் படிப்பிச்சவை. தற்செயலாக் காசு குடுக்கப் பிந்தினால் அதுகளை வகுப்பாலை நிப்பாட்டினவை. எத்தினை பேர் சுகவீன லீவுப் போராட்டம் எண்டு லீவு போட்டுப்போட்டு டியூட்டரி வழியை படிப்பிச்சவை. உதுகள் எல்லாம் எங்களுக்குத் தெரியாது எண்டு நினைக்கிறியளோ.

உன்னாண ஜனாதிபதி பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 5(1)க்கு கீழை மற்ற சேவையளோடை சேத்து சமூகத்தின் வாழ்க்கைக்கு இன்றியமையாத அத்தியாவசிய சேவையாக கல்வியையும் அறிவிக்கலாம். அப்பிடி அறிவிச்சால் நீங்கள் உந்த ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், வேலை நிறுத்தங்கள் எல்லாத்தையும் விட்டுப்போட்டு பள்ளிக்கூடங்களுக்குப் போவணும். ஆனால், உங்கட நல்ல காலம், யசபால எதிர் ரணில் விக்கிரமசிங்க வழக்கில் எஸ்.சி. 1980 இன் விண்ணப்ப எண். 103 படி கல்வி அத்தியாவசிய சேவைகளின் கீழ் வராது எண்டு நீதியரசர் ஷர்வானந்தா அவர்களின் தீர்ப்பு இருக்கிறபடியாலை ஜனதிபதியாலை கல்வியை அத்தியாவசிய சேவை ஆக்கேலாமல் கிடக்கு.

எல்லோருக்கும் கல்வி எண்டது இண்டைக்கு பரவலாக பேசப்படுகிற ஒரு விஷயம். எல்லாருக்கும் ஆரம்பக் கல்வி எல்லாருக்கும் இடைநிலைக் கல்வி எண்டு சொல்லி இந்த குறிக்கோளை அடையவேணும் எண்டு முயற்சிகள் பல நாடுகளிலையும் எடுத்துக்கொண்டு வரேக்கை இஞ்ச நாங்கள் எல்லாத்தையும் தலைகீழா நிண்டு செய்யிறம். எங்கட நாட்டிலை 5 முதல் 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு கட்டாயக் கல்வி வழங்கப்பட வேணும் எண்டு இருந்தாலும் இப்படியான தூரநோக்கு இல்லாத தொழில் சங்க நடவடிக்கைகளால உதுகளை நடைமுறைப்படுத்திறதிலை சரியான சிக்கல்களாக் கிடக்கு கண்டியளோ.

அரசியல் நிகழ்ச்சி நிரல்களின்ரை அடிப்படையில இப்பிடியான வேலை நிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் செய்யிறதாலை கடைசியில எங்கட பிள்ளையளின்ரை ஏன் உங்கடை பிளையளின்ரை நலன்களும் எத்ரிகாலமும்தான் பாதிக்கப்படப் போகிறது எண்டது உங்களுக்கு விளங்குதே.

சரி... சரி...உங்களோடை மினக்கெட எனக்கு இப்ப நேரம் இல்லை பேந்து ஒரு கடுதாசி ஆறுதலா எழுதிறன் கண்டியளோ.

பிற்குறிப்பு : ஆர்ப்பாட்டம், ஊர்வலம், வேலைநிறுத்தம் எண்டு நீங்கள் திரிஞ்சாலும் அரசாங்கம் உங்களுக்கு சம்பளம் தாறது பெரிய விஷயம் எல்லே.



# திறைசேரியின் செயற்பாடுகளால் தேர்தல் நடத்துவது பாதிக்கப்படலாம்!

## தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (கெபே) நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன்

**உரையாடல் - நா.தினுஷா**

தபால்மூல வாக்கெடுப்புக்கான வாக்குச்சீட்டுகளை அச்சிட்டு, உரிய நேரத்தில் விநியோகிக்காமையே இந்தத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமைக்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது. நிதியும், பாதுகாப்பும் கிடைத்தால் வாக்குச்சீட்டுகளை அச்சிட்டு தருவதாக அரசாங்க அச்சகம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கூட நிதி அமைச்சின் செயலாளர் பங்கேற்றிருக்கவில்லை. எனவே, திறைசேரியின் செயற்பாடுகளால் தேர்தலுக்கு பல முட்டுக்கட்டைகள் வரலாமென எதிர்பார்க்கிறோம் - என்று சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (கெபே) நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் 'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய செவ்வியின்போது தெரிவித்தார்.

அவருடனான உரையாடலின் முழு விபரம் வருமாறு,

**இம்மாதம் 09ஆம் திகதி தேர்தலை நடத்துவதாக அறிவித்து, பின்னர் மீண்டும் தேர்தல் அடுத்தமாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடுகளால் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் நிலைப்பாடு என்ன?**

நல்லாட்சி அரசாங்கத்தின் முக்கிய பண்பு ஜனநாயகத்துக்கு மதிப்பளிப்பதாகும். அவ்வாறு ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கப் படுகின்றதென்றால் உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படவேண்டியது அவசியமாகும். அதற்கான மதிப்பு இல்லாமல்போகும் சந்தர்ப்பங்களிலேயே உரிய நேரத்தில் தேர்தல் இடம்பெறுவ தில்லை. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மாத்திரமல்ல, மாகாண சபைகளுக்கான தேர்தல் இடம்பெற்றும் 10 வருடங்களுக்கு மேலாகிறது. ஒவ்வொரு மாகாண சபைக்குமான தேர்தல் உரிய நேரத்தில் இடம்பெற்றிருந்தால், மாகாண சபைகளுக்கான காலம் நிறைவடைந்து இரண்டாவது தேர்தலும் தற்போது இடம்பெற்றிருக்க வேண்டும். இது நாட்டின் நிலைமையாகும்.

எமது மக்களுக்கு வாக்குரிமை கிடைக்கப்பெற்று, 75ஆவது வருடத்தில் இடம்பெறும் தேர்தலாகவே இதனை முகங்கொடுத்து இருக்கிறோம். தேர்தலுக்கான இரண்டாவது திகதி அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், இன்னும் தேர்தல் இடம்பெறுமா, இடம்பெறாதா என்பது தொடர்பில் வேட்பாளர்களின் மத்தியில் சந்தேகமான மனநிலையே காணப்படுகின்றது. இதுபோன்றவொரு உறுதியற்ற நிலைமைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது.

**மாகாண சபைகள் என்ற ஒன்று இல்லாத நிலைமையே நாட்டில் இருப்பதாக அநேகமானோர் குற்றஞ்சாட்டுகிறார்கள். இந்த நிலைமை எதிர்காலத்தில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும்?**

மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதிகளுக்கான இடமில்லாமல் போகும்போது, மேற்குறிப்பிட்டது போன்று ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்காததொரு நிலைமையே நிலவும். ஆட்சிக்கு வருகின்ற ஒவ்வொரு அரசாங்கமும் அவர்களுக்கு தேவையான காலப்பகுதியிலேயே தேர்தலை நடத்தும் நிலைமையே இருக்கிறது. அதாவது, உரிய காலத்தில் தேர்தலை நடத்தவேண்டும் என்ற தேவைப்பாடு அவர்களுக்கு இல்லை.

உதாரணமாக, உத்தியோகபூர்வ கால எல்லை முடிவடைவதற்கு முன்னர் ஒரு தேர்தலை நடத்தினால் அது அவர்களுக்கு சாதகமாக அமையுமென்று நினைத்தால் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு முன்னரே தேர்தலை நடத்துவார்கள். மாறாக, ஆட்சியில் இருப்பவர்களுக்கு சாதகமான வாய்ப்புகள் இல்லை என்று கருதினால் தொடர்ச்சியாக தேர்தலை பிற்போடுவதற்கான சந்தர்ப்பங்களே நிலவுகின்றன.

மக்கள் பிரதிதிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்காவிட்டால் அது சர்வாதிகார ஆட்சிக்கே வழிவகுக்கும். உதாரணமாக, ஒவ்வொரு மாகாண சபையிலும் பல நூற்றுக்கணக்கானோர் உறுப்பினர்களாக இருந்துவந்துள்ளார்கள். அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் 8,000 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களே செயற்பாட்டில் இருந்து வருகிறார்கள். ஆகவே, மாகாண சபைகளில் பிரதிநிதிகள் இல்லாதது என்பதால் ஒன்பது மாகாண சபைகளுக்கும் ஒன்பது ஆளுநர்கள் மாத்திரமே நடைமுறையில் இருக்கிறார்கள்.

இரண்டாவது, உள்ளூராட்சி மன்றங்களில் 8,000இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இருந்தாலும் எதிர்வரும் 19ஆம் திகதியின் பின்னர், அவற்றின் அதிகாரங்கள் அனைத்தும் உள்ளூராட்சி ஆணையாளர்களின் வசமாகிவிடும். ஆகவே, உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உறுப்பினர்கள் இல்லாத நிலை உருவாகும். இவ்விரு செயற்பாடுகளும் சர்வாதிகாரத்தை நோக்கியே நிர்வாகத்தை கொண்டுசெல்லும்.

இந்த, 8,000இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களில் 2,019 பேர் பெண் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கும்போது, பெண்களுக்கான ஒதுக்கீடுகள் சரியான முறையில் வழங்கப்படவேண்டியது அவசியமாகும். உள்ளூராட்சி மன்றங்களில் அதிக எண்ணிக்கையிலான ஆண்களே ஆணையாளர்களாக இருக்கிறார்கள். அவ்வாறிருக்கையில், 339 உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள், ஆணையாளர்களின் வசமாகும்போது பெண்களுக்குரிய சந்தர்ப்பமும் இல்லாமல் போகிறது.

> **"பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்து எல்லை நிர்ணய அறிக்கையை வர்த்தமானியாக வெளியிட்டால் சிக்கல் நிலை உருவாகும்"**

**அடுத்த மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தவுள்ளதாகவும், இம்மாத இறுதியில் தபால்மூல வாக்கெடுப்பை நடத்தவுள்ளதாகவும் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அவ்வாறெனில் இன்னும் குறுகிய நாட்களே இருக்கின்றன. ஆனால், அதற்கான நடவடிக்கைகளிலும் காலதாமதத்தை அவதானிக்க கூடியதாகவுள்ளதே?**

> **"நடைமுறையிலுள்ள தேர்தல் முறைமை அமுல்படுத்தப்பட்டு ஐந்துவருடங்கள் கழிந்துள்ள நிலையில், தற்போது மாற்றியமைக்க வேண்டும் என்று கூறுவது தவறாகும்"**

தேர்தல் ஆணைக்குழு மாத்திரம் தனியாக தேர்தலை நடத்த முடியாது. ஏனைய பங்குதாரர்களும் இதற்கான உதவிகளை வழங்கினால் மாத்திரமே தேர்தலை நடத்த முடியும். 09ஆம் திகதி தேர்தலை நடத்துவதாக ஆணைக்குழு அறிவித்தது. தேர்தலை நடத்தவேண்டும் என்ற நோக்கத்தின் காரணமாகவே அவர்கள் அறிவிப்பை வெளியிட்டார்கள். ஆனால், இடையில் இருக்கக்கூடிய பங்குதாரர்கள் அவர்களின் சார்பில் வழங்கவேண்டிய ஒத்துழைப்பை வழங்காததாலேயே தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

போதியளவு நிதி ஒதுக்கீடு கிடைக்காமையின் காரணமாகவே தேர்தலை ஒத்திவைப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். இரண்டாவது தேர்தல் திகதி அறிவிப்புக்கு முன்னர் நடந்த பேச்சவார்த்தையில் கூட நிதி அமைச்சின் செயலாளர் கலந்துகொண்டிருக்கவில்லை.

தேவையான நிதியும் பாதுகாப்பும் தமக்கு கிடைக்குமாக இருந்தால் தேவையான வாக்குச்சீட்டுகளை அச்சிட்டுத் தருவதாக அரச அச்சகம் தெரிவிக்கிறது. இதில் நிதிதொகையே தடைக்கான காரணியாக அமைந்துள்ளது. இதுதொடர்பில் சாதகமான நிலைப்பாடொன்றே அவசியமாக இருக்கிறது.

**ஆணைக்குழு தேர்தலை அறிவித்தாலும், அதற்கான உத்தியோகபூர்வ வர்த்தமானி அறிவிக்கப்படவில்லை என்ற ஒரு விடயத்தை அரசாங்கம் கடந்த காலங்களில் சுட்டிக்காட்டியிருந்தது. மீண்டும் தேர்தலுக்கான திகதியை அறிவித்திருந்தாலும், அதற்கான வர்த்தமானி வெளியிடப்படவில்லை. எனவே, மீண்டும் தேர்தல் காலம் தாழ்த்தப்படுவதற்கு இதுவுமொரு காரணமாக அமைந்துவிடுமா?**

வேட்புமனு தாக்கல் செய்து இரண்டு நாட்களாகியும் வர்த்தமானி வெளியிடப்படவில்லை என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருந்தது. தேர்தல் கட்டமைப்பில் இருக்கும் ஜனாதிபதி, பாராளுமன்றம், மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்கள் ஆகிய தேர்தல் முறைமைகளில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சிறிய தேர்தல் என்று கூறினாலும், இந்தத் தேர்தலிலேயே குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வேட்பாளர்களை விட அதிகளவான வேட்பாளர்கள் களமிறங்குவார்கள்.

இம்முறை தேர்தலில் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டி யிடுகிறார்கள். அவ்வாறெனில், இந்த வேட்பாளர்கள் தொடர்பில் சரியான தகவல்களை வெளியிடுவதானால் அவர்களுக்கு சிறிது காலஅவகாசம் தேவைப்படும். அந்த காலஅவகாசத்தைக் கூட வழங்காமலேயே வர்த்தமானியை வெளியிடுமாறு அழுத்தம் பிரயோகித்தார் கள். எனவே, இதுவும் தேர்தலை ஒத்திவைப்பதற்கான நோக்கமாகவே அமைந்திருந்தது.

**மேற்குறிப்பிட்டதுபோன்று உள்ளூராட்சி மன்றங்களில் இருக்கும் அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்களினால் தேர்தலுக்கான செலவுகள் அதிகமாக இருப்பதாகவும், தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டே அடுத்த எந்தவொரு தேர்தலையும் நடத்த வேண்டும் என்பது அரசாங்கத்தின் கருத்தாக இருக்கிறது. இந்த நிலைப்பாடு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும்?**

ஏற்கனவே, ஒருவருடத்துக்கு முன்பு உள்ளூராட்சி மன்றங்களுக்கான காலம் நிறைவடைந்துவிட்டது. காலம் முடிவடைந்ததன் பின்னரே உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான அமைச்சருக்கு இருக்கும் விசேட அதிகாரங்களின் மூலம் அவற்றுக்கான ஆயுட்காலம் ஒரு வருடமாக நீடிக்கப்பட்டது. அவ்வாறிருக்கையில், தேர்தல் முறைமையில் மாற்றத்தை செய்யவேண்டுமெனில் இறுதிக்கட்டத்தில் அதனை செய்யவேண்டிய அவசிய மில்லை. அதற்கான முன்னெடுப்புகளை இதற்கு முன்னரே செய்திருக்கலாம்.

இரண்டாவது விடயம் என்னவென்றால், இந்தத் தேர்தல் முறைமையினூடாக உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது, உறுப்பினர்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்தைத் தாண்டுவதால் நாட்டுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று யார் யாரெல்லாம் கூறுகிறார்களோ, அவர்களே 2018ஆம் ஆண்டு இந்தத் தேர்தல் முறைமை நடைமுறைக்கு கொண்டுவரும்போது ஆதரவு வழங்கியிருந்தார்கள். அன்று ஆதரவளித்தவர்களே, இன்று அவர்களுக்குத் தேவையான சந்தர்ப்பம் வரும்போது அதனை விமர்சிக்கிறார்கள்.

இந்த முறைமையை மாற்றியமைப்பதற்கு, 2018ஆம் ஆண்டின் பின்னர் கிட்டத்தட்ட நான்கு வருடங்கள் காலம் இருந்தது. ஐந்தாவது வருட இறுதியில் இதனை குறையென்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

**தற்போதைய நிலைமையில் தேர்தல் முறைமையில் மாற்றமொன்று ஏற்பட வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?**

தேர்தல் முறைமையில் மாற்றம் செய்ய வேண்டும் என்ற தேவை இருந்தால், இறுதி தருணம் வரை காத்திருந்து தேர்தலொன்று இடம்பெறவுள்ள சந்தர்ப்பத்தில் முறைமையை மாற்றியமைக்க வேண்டும் என்பது தவறாகும். ஏற்கனவே, இதுதொடர்பில் கலந்தாலோசித்து நன்மை, தீமை போன்ற விளைவுகள் தொடர்பில் பல மட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருக்க வேண்டும்.

**எல்லை நிர்ணயம் தொடர்பில் புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த நிலையில், அதன் அறிக்கையை இம்மாத இறுதியில் சமர்ப்பிக்கவுள்ளதாக அந்தக் குழு அறிவித்துள்ளது. அந்த அறிக்கை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தாக்கம் செலுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா?**

அந்தக் குழுவின் அறிக்கை இந்தத் தேர்தலில் தாக்கம் செலுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை. இதற்கு முன்னர் இடம்பெற்ற தேர்தல்களை பிற்போடுவதற்கு 25இற்கும் மேற்பட்ட சந்தர்ப்பங்களில் முயற்சி செய்திருந்தார்கள். அதிலொரு முறையாகவே, எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையை கையாண்டிருந்தார்கள். தற்போதைய அளவில் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளதால் இந்த அறிக்கை தாக்கத்தை ஏற்படுத்தாது.

பாராளுமன்றத்தினூடாக பெரும்பான்மையை நிரூபித்து இந்த எல்லை நிர்ணய வர்த்தமானியை அறிவித்தால், ஏற்கனவே வழங்கப்பட்ட வேட்புமனுக்களை இரத்துசெய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

ஏற்கனவே, தேர்தலுக்காக பல மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. செலவழிக்கப்பட்ட அந்த நிதியில் எந்தவொரு பயனும் இல்லாத நிலை உருவாகலாம். பாராளுமன்றத்தினூடாக அனுமதிப்பெற்றாலே சிக்கல் நிலை உருவாகும். நடைமுறையிலுள்ள எந்தவொரு பிரச்சினையும் இல்லை.

**மேற்குறிப்பிட்டதுபோன்று, நிதிப் பிரச்சினைக்கான தீர்வை அரசாங்கம் தொடர்ந்தும் வழங்காவிட்டால்?**

தபால் மூல வாக்கெடுப்புக்கான வாக்குச்சீட்டுகளை அச்சிட்டு, உரிய நேரத்தில் விநியோகிக்காமையே இந்தத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமைக்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது. வாக்கெடுப்பு திகதி மற்றும் தபால் மூல வாக்கெடுப்புக்கான திகதிகளை தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தாலும், ஏனைய பங்குதாரர்களின் வேகமும் விவேகமுமே குறைவாக இருந்தது. நிதியும், பாதுகாப்பும் கிடைத்தால் வாக்கச்சீட்டுகளை அச்சிட்டு தருவதாக அரசாங்க அச்சகம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கூட நிதி அமைச்சின் செயலாளர் பங்கேற்றிருக்கவில்லை. எது எவ்வாறாயினும், திறைசேரியின் செயற்பாடுகளினால் பல முட்டுக்கட்டைகள் வரலாம் என்று எதிர்பார்க்கிறோம்.

**தேர்தலை உரிய நேரத்தில் நடத்துதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் மீது இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொண்டிருந்தார்கள். இதுவும், ஜனநாயக ரீதியான மக்களின் கருத்துரிமையை மீறும் செயற்பாடல்லவா?**

பல்வேறு சிவில் அமைப்புகள், தேர்தல் கண்காணிப்பகங்கள் ஒன்றிணைந்து எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களையும் வரவழைத்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தவேண்டும் என்ற உறுதிப்பாட்டை வழங்கவேண்டும் என்ற பாரியளவு வேலைத்திட்டமொன்றை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தன. ஏற்கனவே, பல்வேறு ஊடகவியலாளர் சந்திப்புகளிலும் தேர்தல் கண்காணிப்பகங்கள் தொடர்பிலும் விளக்கமளித்திருந்தோம். இவ்வாறு, உள்ளக ரீதியாக செய்யக்கூடிய செயற்பாடுகளுக்கு எந்தவொரு தடையும் ஏற்படுத்தப்படவில்லை.

> **"தேர்தல் நடக்குமா நடக்காதா என்ற சந்தேகத்தால் பிரசாரங்கள் வீழ்ச்சி கண்டுள்ளன"**

வீதிக்கு இறங்கிப் போராடுவதில் பிரச்சினையில்லை. ஜனநாயக ரீதியான உரிமைகளை வென்றெடுக்கக்கூடிய அமைதிவழி ஆர்ப்பாட்டங்கள் பிரச்சினைக் குரியதல்ல. அமைதியை சீர்குலைக்கக்கூடிய வகையில் யாராவது செயற்படுகிறார்கள் என்றால், ஆர்ப்பாட்டக்காரர்கள் என்றாலும் சரி வீதியிலேயே அனைத்துக்கும் தீர்வு கிடைக்கும் என்று கருதினால் அவ்விடத்தில் கேள்விக்குறியொன்றும் தோற்றம் பெறுகிறது.

**இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் எவ்வாறான பங்களிப்பை வழங்கி வருகின்றது?**

உள்ளூராட்சி மன்ற வேட்புமனு தாக்கல் செய்த தினத்திலிருந்தே எங்களின் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். 25 மாவட்டங்களிலும் மாவட்ட அமைப்பாளர்கள், 175 நீண்டகால கண்காணிப்பாளர்களை தேர்தலுக்கு முன்பிருந்தே கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி வருகின்றோம். இதனூடாக தேர்தல் வன்முறைகள், சட்டவிரோத பிரசாரங்கள், வெறுப்பு பேச்சுகள், பெண்களுக்கு எதிரான கருத்துகள் என்பன தொடர்பில் அவதானம் செலுத்தி வருகின்றோம்.

தேர்தல் தினத்தன்று குறைந்தது 2000 வரையிலான கண்காணிப்பாளர்களை புறக்கண்காணிப்பாளர்களாக கடமையில் ஈடுபடுத்த எதிர்பார்த்துள்ளோம். உள்நாட்டுக் கண்காணிப்பாளர்களை மாத்திரமே நாங்கள் கடமைக்கு அமர்த்துவோம். இவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களிடம் உதவி கோரியுள்ளோம். இதுவரையிலும் எந்தவொரு சாதகமான முடிவுகளும் கிடைக்கப்பெறவில்லை. அவ்வாறு கிடைக்காவிட்டாலும், சிவில் சமூக ஆர்வலர்கள் 2008ஆம் ஆண்டு முதல் கெபே அமைப்பிலிருந்து ஒரு வளையமைப்பாக செயற்பட்டு வருகின்றார்கள். அவர்களின் மூலமாக இதனை முன்னெடுக்கவுள்ளோம்.

**இதுவரையில் எவ்வாறான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன?**

கெபே அமைப்புக்கு எதிராக 50 வரையான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதில், குறிப்பாக தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தொடர்பில் சிறிய சிறிய முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதுவரையில் தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் மிகவும் குறைவாகவே கிடைக்கப்பெற்றுள்ளன.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபடும்போதே வன்முறைகள் அதிகரிக்கின்றன. தேர்தல் நடக்குமா நடக்காதா என்ற சந்தேகத்தின் காரணமாக பிரசார நடவடிக்கைகள் வீழ்ச்சிக்கண்டுள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியுமே அதிகளவான தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்திருந்தன. வேட்பாளர்களின் தனிப்பட்ட பிரசாரங்கள் குறைவடைந்துள்ளன. அதன்காரணமாகவே வன்முறைகள் குறைந்துள்ளன.

சில பெண் வேட்பாளர்களுக்க எதிராக, இணையவாயிலான தவறான கருத்துக்களை பரப்பும் சம்பவங்கள் பதிவாகியிருந்தன. இதுதொடர்பிலும் 16 வரையிலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

**சட்டத்தில் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் எவ்வாறான தண்டனை ஏற்பாடுகள் இருக்கின்றன?**

தேர்தல் சட்டத்திலும் பல மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. தண்டப்பணம் உள்ளிட்ட விடயங்களில் திருத்தங்களை ஏற்படுத்த வேண்டும். அதனூடாகவே தேர்தல் தொடர்பான நம்பிக்கையை மக்கள் மத்தியில் ஏற்படுத்த முடியும்.



# நீதிமன்ற தடை உத்தரவும் நாடாளுமன்ற சிறப்புரிமை மீறல் குற்றச்சாட்டும்



எம்.எஸ்.அமீர் ஹுசைன்

மார்ச் மாதம் 09ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்த நாடாளுமன்ற நிதிக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை தடைசெய்து நிதி வழங்க மறுத்தமைக்கு எதிராக உயர் நீதிமன்றம் 2023 மார்ச் மாதம் 07ஆம் திகதி இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்தமையானது நாடாளுமன்ற உறுப்பினர்களது சிறப்புரிமை மீறும் செயலாகும் என்று ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சீ. தொடவத்தை நாடாளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்சினையொன்றை கிளப்பியுள்ளார். இவ்விடயம் கடந்த 09ஆம், 10ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கின்றது. உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை அரசாங்கம் பிற்போட எடுத்துவரும் செயற்பாடு தொடர்பாக மார்ச் 09ஆம் மற்றும் 10ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியான சமகி ஜன பலவேகயவால் சமர்ப்பித்த சபை ஒத்திவைப்பு நேர பிரேணை மீதான விவாதம் நடைபெற்றது.

ஏற்கனவே மார்ச் மாதம் 09ஆம் திகதி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெறும் என்று அறிவித்திருந்தபோதும் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை பொருளாதார நெருக்கடியை காரணங்காட்டி நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியும் நிதி அமைச்சின் செயலாளரும் வழங்க மறுத்து வருவதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அரசியல் கட்சிகளால் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த மனு மீதான தீர்ப்பின்போதே நிதியை வழங்க மறுப்பதற்கு எதிராக இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. இந்த இடைக்கால தடை உத்தரவானது நிதி அமைச்சின் செயலாளருக்கும் சட்ட மா அதிபருக்குமானதாகும்.

நீதிமன்றத்தின் உத்தரவுப்படி நிதி அமைச்சு 2023ஆம் ஆண்டிற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள 1000 கோடி ரூபாவையும் வழங்கி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது தேர்தல் ஆணைக்குழுவுக்கான உத்தரவாகும். அதன்படி தேர்தல் ஆணைக்குழு ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்திருக்கின்றது. அத்துடன், தபால் மூல வாக்களிப்பு மார்ச் மாதம் 28ஆம் திகதிமுதல் 31ஆம் திகதிவரை நடைபெறும் என்றும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருக்கின்றது. இது தொடர்பாக பொலிஸ் மா அதிபர், பிரதம அச்சகர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்ட சந்திப்பொன்றும் தேர்தல் ஆணைக்குழுவில் இடம்பெற்றிருக்கின்றது. அந்த கலந்துரையாடலின் பின்னர் உரிய முறையில் நிதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதி அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டு நீதிமன்ற உத்தரவை ஏற்றிருப்பதை அறிவித்திருக்கின்றது.

தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டு அடங்கிய பொதிகள் விநியோகம் இம்மாதம் 21ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா அறிவித்துள்ளார். ஆனாலும் உயர் நீதிமன்றத்தின் இடைக்கால தடை உத்தரவு தீர்ப்பு குறித்து ஆளுந்தரப்பு அதிருப்திகொண்டிருக்கின்றது. நாடாளுமன்ற விவகாரங்களில் நீதித்துறை தலையிடுவதாக குற்றஞ்சாட்டி வருகின்றனர். ஆனாலும் இங்கு இந்த விடயத்தை அடிப்படையாக வைத்து பல கேள்விகள் எழுகின்றன. இந்த விவகாரம் தொடர்பாக ஏன் நீதிமன்றம் வரை செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது என்பது முதலாவது வினாவாகும். அடுத்ததாக, இந்த நீதிமன்றத் தீர்ப்பானது நாடாளுமன்ற உறுப்பினர்களது சிறப்புரிமையை எவ்வாறு மீறுகின்றது என்பது இரண்டாவது வினாவாகும்.

நாட்டில் நடைமுறையிலிருந்து வருகின்ற இரண்டாவது குடியரசு யாப்பான அரசியலமைப்புக்கு பொருட் கோடல், அதில் எந்த பிரிவும் மீறப்படாமல் பாதுகாப்பது, ஜனாதிபதிமுதல் ஆட்சியாளர்களால் இதே அரசியலமைப்பு மீறப்படும்போது அதற்கு எதிராக செய்யப்படும் மனுக்களை விசாரணை செய்து நீதியை நிலைநாட்டுவது என்பன உயர் நீதிமன்றத்தின் கடப்பாடாக அமைகின்றது. அரசியலமைப்பிற்கு அல்லது நாட்டிலுள்ள ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் புதிய சட்டத்திருத்தங்களை கொண்டுவரும்போது அது அரசியலமைப்பிற்கு உட்பட்டதா அல்லது முரண்படுகின்றதா என்ற விடயத்தை கவனம் செலுத்தி அதுபற்றி நாடாளுமன்றத்திற்கு அறிவிக்கும் பொறுப்பை உயர் நீதிமன்றம் செய்துவருகின்றது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே பல முறை இந்த அரசியலமைப்பின் சரத்துகளை மீறிய சந்தர்ப்பங்களில் நியாயத்தை நீதிமன்றத்தை நாடியே நியாயத்தை பெறவேண்டி ஏற்பட்டிருக்கின்றது.

இதற்கு சிறந்த உதாரணமாக 2017ஆம் ஆண்டு அரசியலமைப்பை முன்னாள் ஜனாதிபதி அப்பட்டமான முறையில் மீறி அப்போதைய ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையை பதவிநீக்கம் செய்துவிட்டு புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவையும் அவர் தலைமையிலான அமைச்சரவை ஒன்றையும் நியமித்து புதிய அரசாங்கம் ஒன்றை நிறுவினார். அந்தச் சந்தர்ப்பத்தில் மைத்ரிபால சிறிசேனாவின் நிறைவேற்று அதிகார துஷ்பிரயோகத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தை நாடியதால் அதே ரணில் தலைமையிலான அமைச்சரவைக்கு மீண்டும் அரசாட்சி உத்தரவாதப்படுத்தப்பட்டது. அதன்பின்னர் 2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பொதுத் தேர்தல் நடக்கும் வரையில் அதே அமைச்சரவை பதவி வகித்தது.

இவ்வாறு உயர் நீதிமன்றம் இல்லாதிருந்தால் நிறைவேற்று அதிகாரம் என்ற போர்வையில் ஜனாதிபதி ஒரு சர்வாதிகாரியாக மாறுவதை தடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கும். இப்போதும் நடந்திருப்பது அதுவேதான். ஜனாதிபதியாக இருந்துவரும் இதே ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சுப் பொறுப்பையும் தன்னகத்தே வைத்திருப்பதால் தற்போதைய நிலையில் தேர்தல் ஒன்றை நடத்த முடியாது என்று விசமத்தனமான பிரசாரங்களை செய்து வந்ததோடு 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதியை திறைசேரியில் பணம் இல்லை என்ற காரணத்தைக் காட்டி வழங்க மறுத்து வந்திருக்கின்றது. அதனை எதிர்தே உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீது உயர் நீதிமன்றம் நிதி அமைச்சின் செயலாளருக்கும் சட்ட மா அதிபருக்கும் நிதி வழங்க மறுப்பதற்கு எதிராக இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்திருக்கின்றது.

அவ்வாறாயின் நிதி அமைச்சு இனி எந்தக் காரணத்தை கொண்டும் 1000 கோடி ரூபாவை வழங்க மறுக்க முடியாது. ஏற்கனவே தேர்தல் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு 50 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய 950 கோடி ரூபாவையும் வழங்கவேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு நிதி அமைச்சரும் அமைச்சின் செய்லாளரும், திறைசேரியின் செயலாளரும் தள்ளப்பட்டுள்ளனர். நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களது ஜனநாயக உரிமைகளில் ஒன்றான வாக்குரிமையை முடக்க எடுத்த முயற்சிக்கு நீதிமன்றம் வழங்கிய இந்த உத்தரவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பாக அமைகின்றது எனலாம். ஜனாநாயக வழிக்கு அரசாங்கத்தைத் தள்ளும் பாதுகாவலனாக உயர் நீதிமன்றம் இருந்துவருவதை இந்தத் தீர்ப்பு வெளிக்காட்டுகின்றது. ஏற்கனவே மாகாண சபைகளுக்கான தேர்தல் 04 வருடங்களாக நடத்தப்படாமல் பின்போடப்பட்டுள்ள நிலையில், இப்போது அரசியலமைப்பிற்கான 13ஆவது திருத்தத்தை ஒழித்துக்கட்டி மாகாண சபை முறைமையை ஒழிக்க முயற்சிகள் இதே அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்றன.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பிற்போடப்பட்டாலும் அதற்கும் அதே கதிதான் நடக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதியாக இருந்த மைத்ரிபால சிறிசேன அவ்வாறான ஒரு முயற்சியை செய்தார். அப்போதைய சூழ்நிலையில் உள்ளூராட்சி சபைகளுக்குப் பதிலாக 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைமுறையில் இருந்த கிராம சபை முறைமையை (கம் சபா) மீண்டும் ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொண்டார். உள்ளூராட்சி சபைகள் அரசாங்கத்திற்கு மேலதிக செலவினங்களாக காட்டப்பட்டது. பதவிக்கு வருகின்ற அரசாங்கங்கள் ஆட்சியாளர்களது தேவைக்கேற்ப ஏதாவது காரணங்களைக் காட்டி மக்கள் அனுபவித்து வருகின்ற உரிமைகளை முடக்க நடவடிக்கை மேற்கொண்டு வந்திருப்பது இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் கசப்பான அனுபவங்களாகும்.

அதேநேரம் சீனா, இந்தியா ஆகிய நாடுகள் அவற்றிற்கு அரசாங்கம் வழங்க வேண்டிய கடனுக்கு வட்டி சலுகையாக இரண்டு வருடங்களை வழங்க முன்வந்திருப்பதால் இலங்கைக்கு கடன் வழங்க இணக்கம் தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியம், சாதகமான பதிலை அறிவித்திருக்கின்றது. அதனால் எதிர்வரும் காலப்பகுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கம் காணப்பட்ட கடனில் ஒரு பகுதி கிடைக்கும் வாய்ப்பு இருந்துவருகின்றது. இருந்தாலும் ஆளும் கட்சிக்குள் கம்யூனிச, சோஷலிச கொள்கையை ஆதரிக்கும் முதலாளித்துவத்தையும் திறந்த பொருளாதாரத்தையும் விரும்பாத பொதுஜன பெரமுன கட்சியின் ஒரு அணியினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் போக்கு தொடர்பாக அதிருப்தி கொண்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்க முன்னர் பல நிபந்தனைகளை விதித்திருக்கின்றது. அவற்றை முதற்கட்டமாக அரசாங்கம் நிறைவேற்றி சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்த வேண்டும். அதன்பின்னரே உத்தேச கடன் வழங்குவது தொடர்பான பரிசீலனை நடைபெறுகின்றது. தற்போது இலங்கையில் செய்யப்பட்டிருக்கின்ற வரிகளின் எல்லை மீறிய அதிகரிப்பு, மின்சார கட்டண அதிகரிப்பு மற்றும் இலவச மாணி சலுகைகளின் வெட்டு, அரச ஊழியர்கள் மீதான மட்டுப்பாடுகள், அரச நிறுவனங்களில் நஷ்டத்தில் இயங்கக் கூடியவைகளை தனியார்மயப்படுத்தல் என்பன இந்த நாணய நிதியத்தின் ஆலோசனைகளாகும்.

அந்தவகையில் ஜனாதிபதியின் நடவடிக்கை தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழு 20 மற்றும் பரிஸ் கலந்துரையாடல் என்பவற்றில் திருப்தி தெரிவித்துள்ளமை இலங்கைக்கு சாதகமான நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. இணக்கம் ஏற்பட்டுள்ள கடனில் முதலாவது தவணைக்கான ஒரு தொகை அடுத்த மாதம் இலங்கைக்குக் கிடைக்கும் என்று நிதி இராஜாங்க அமைச்சத் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அறிவித்துள்ளார். அத்துடன், தற்போதைய நிலையில் உள்நாட்டில் ரூபாவின் மதிப்பு உயர்வடைந்து அமெரிக்க டொலரின் மதிப்பு சற்று குறைவடைந்திருப்பதும் மேலும் சாதகமான பொருளாதார நிலைக்குக் காரணமாக அமைவதையும் அவதானிக்க முடிகின்றது.

எதுவானாலும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது, நாட்டை சுபீட்சத்தின் பாதைக்கு இட்டுச்செல்வது என்ற பெயரில் நாட்டு மக்கள் அனுபவிப்பதற்கு இருக்கின்ற ஜனநாயக உரிமைகளை முடக்கி அவற்றுக்கு கட்டுப்பாடு விதிப்பது, பேச்சு, எழுத்து, கருத்து வெளிப்பாடு உட்பட அடிப்படை உரிமைகளை நசுக்க எடுக்கப்படும் செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கவைகளாகும்.

# தார்மீகம் புதைந்துபோன ஆட்சிகொண்டதா இலங்கை?



**அக்கினியான்**

நீதிமன்றங்களும், சட்டங்களும் வலுவிழந்த நாடாக இலங்கை ஆகிவிட்டதா என்று ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடையுமளவுக்கு வடக்கு கிழக்கு பிரதேசமெங்கும் இன, மத அழிப்புக்கான கொடூரங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதற்கு உதாரணமாகவே யாழ். மாவட்டத்திலுள்ள கீரிமலை வரலாற்றுச் சிறப்புமிக்க சிவன் ஆலயம் அழிக்கப்பட்டு அங்கு ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்ட கொடுமை இடம்பெற்றிருக்கிறது. கீரிமலை சிவன் ஆலயம் முழுமையாக இடித்து அழிக்கப்பட்டு அந்த இடத்தில் ஜனாதிபதி மாளிகை ஒன்று அமைக்கப்பட்டிருக்கும் அதிர்ச்சியான செய்தி வெளிவந்துள்ளது.

வலி. வடக்கு பகுதியிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயமான சிவன் ஆலயம் அழிக்கப்பட்டிருப்பது மட்டுமன்றி, அங்கிருந்து ஆலயத்தின் மூலவிக்கிரகமான சிவலிங்கம் களவாடப்பட்டிருக்கிறது அல்லது துவாம்ஷம் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு அருகிலுள்ள கிருஷ்ணன் கோயிலில் இருந்த முருகன் மற்றும் முருகன் சிலைகள் காணப்படவில்லை. அத்துடன், கிருஷ்ணன் ஆலயத்தின் வசந்த மண்டபம் முற்றாக இடித்துத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அதன் அரைகுறை பகுதியே எஞ்சியிருப்பதாகவும் நேரே சென்று பார்த்த கிருஷ்ணர் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். இதைவிட இடம்பெற்றுள்ள அடவடித்தனமாக வரலாற்றுப் புகழ்வாய்ந்த சிவன் ஆலயம் இடிக்கப்பட்டு மன்னர் மாளிகை கட்டியதுபோல் ஜனாதிபதி மாளிகையொன்று நிர்மாணிக்கப்பட்டிருப்பதாக ஆலய நிர்வாக சபையினர் அதிர்ச்சியான தகவலை தெரிவித்திருக்கிறார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை (03.03.2023) கடற்படையினர் கிருஷ்ணர் ஆலயத்தின் பரிபாலன சபையினரை அழைத்துக்கொண்டு வலி. வடக்கு பாதுகாப்பு வலயத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்ததன் பின்னர் சுமார் 32 வருடங்களுக்குப்பின் ஆலயத்தின் தற்போதைய நிலையை பார்க்கச்சென்ற பரிபாலன சபையினர் அங்கிருந்த ஆலயங்களான கிருஷ்ணர் ஆலயம், சிவன் ஆலயம், கதிரை ஆண்டவர் ஆலயம் ஆகியவற்றை தேடியபோது அங்கிருந்த ஆதி சிவன் ஆலயத்தையும் லிங்கத்தையும் காணாமல் அதிர்ச்சியடைந்துள்ளதுடன், இவ்விடத்தில் ஜனாதிபதி மாளிகையொன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருப்பதைக் கண்டும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இலங்கை சுதந்திரமடைந்து 75 வருடங்கள் கடந்துவிட்டன. பல தலைமுறையினரின் மாற்றங்களை இலங்கை வாழ் மக்கள் கண்டுவிட்டார்கள். என்ன மாற்றங்கள் நிகழ்ந்தபோதும் இனவாதமும் மதவாதமும் அரச பயங்கரவாதமும் ஓய்ந்துபோகவில்லை என்ற உண்மையைக் கண்டு வெட்கப்படுவதும் வேதனைப்படுவதையும் தவிர, வேறெந்த முன்னேற்றத்தையும் கண்டுகொள்ள முடியவில்லை.

ஆலயங்களை அழிப்பதும், விகாரைகளை நிறுவுவதும், மன்னர் மாளிகைகளை நிர்மாணிப்பதும் இலங்கையில் இன்று நேற்றிலிருந்து நடைபெறுகிற கொடுமைகள் அல்ல. கி.முன்பிருந்தே இச்சம்பவங்கள் இடம்பெற்று வந்திருக்கின்றன என்பதற்கு வரலாற்றில் பல ஆதாரங்கள் உள்ளன. அநுராதபுரத்தை ஆண்ட மன்னர்களில் ஒருவனான கி.பி. 3ஆம் நூற்றாண்டில் அநுராதபுர மன்னனாக இருந்த மகாசேனன் சைவ சமயத்துக்கு எதிரான போக்குடையவனாக சைவக் கோயில்களை இடித்து துவாம்ஷம் செய்தான். கிழக்கே புகழ்பெற்ற இந்து ஆலயம் ஒன்றிருப்பதை கேள்வியுற்று அதை அழித்து விகாரை நிறுவ படையுடன் வந்து புகழ்பெற்ற ஆலயமான கோணேஸ்வரத்தை நிர்மூலமாக்கி அவ்விடத்தில் கோகண்ண என்ற பௌத்த விகாரையை நிர்மாணித்தான் என்பது மகாவம்சம் தெரிவிக்கும் செய்தி.

கிழக்கின் ரோமாபுரி என்று 16ஆம் நூற்றாண்டில் புகழப்பட்ட கோணேஸ்வரத்தை அழித்து அங்குள்ள செல்வங்களை சூறையாடிய சம்பவம் 1624ஆம் ஆண்டு போர்த்துக்கீசர் திருகோணமலையை கைப்பற்றி ஆண்ட காலத்தில் இடம்பெற்றிருக்கிறது. இதேபோன்று சங்கிலிய மன்னன் யாழ்ப்பாணத்தை ஆண்ட காலத்தில் இடம்பெற்றிருக்கிறது. அந்த வரலாற்றுத் தொடராகவே கீரிமலை சிவன் ஆலயம் அழிக்கப்பட்டுள்ளது. வரலாற்று ஆசிரியர்போல் இ.பீரிஸின் வரலாற்று ஆய்வின்படி கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுகளுக்கு முன்பே இலங்கையின் வடக்கில் நகுலேஸ்வரமும், கிழக்கில் கோணேஸ்வரமும், மேற்கில் கேதீஸ்வரமும், முனீஸ்வரமும், தெற்கில் தொண்டேஸ்வரமும் புகழ்பெற்ற ஆலயங்களாக இருந்திருக்கின்றன. வடக்கிலுள்ள நகுலேஸ்வரம் கீரிமலை மண்ணில் ஆதி பூண்ட ஆலயமாகும். அந்த ஆலய பூமியில்தான் இந்த அநியாயம் நடந்திருக்கிறது.

கீரிமலை சிவன் ஆலயம் அமைந்திருக்கும் பகுதி இராணுவ கட்டுப்பாடுகொண்ட அதியுச்ச பாதுகாப்பு வலயமாக இருந்த பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் இந்த அடாவடித்தனம் நடந்துள்ளதென்றால் இதை புரிந்தவர்கள் யார்? இதற்கான அனுமதியை கொடுத்தவர்கள் யார்? என்பது அரசுக்குத் தெரியாத ஒரு விடயமாக இருக்க முடியாது. நாட்டுக்கு எதிராக நடப்பது பயங்கரவாதமெனில், குறித்த மத தொன்மைக்கும் பாரம்பரியத்துக்கும் எதிராக நடப்பது அரச பயங்கரவாதமாக ஏன் இருக்க முடியாது என்பது மக்களின் தார்மீகமான கேள்வியாகும்.

இந்த கெடுபிடிகளால் வடக்கு, கிழக்கிலுள்ள இன விகிதாசாரத்தை மாற்றியமைப்பதும் சிங்களக் குடியேற்றங்களை பெருக்குவதுமே இந்தத் திட்டங்களின் மூல மந்திரங்களாக இருந்துவருகின்றன.

வடக்கு, கிழக்கைத் தேடி வந்து சந்திகளிலும் உயர்ந்த மலைகளிலும் புத்தர் சிலைகளை நிறுவுவதும் விகாரைகளை அமைப்பதும் அரசாங்கத்தின் தொடர் நிகழ்ச்சிநிரலாகவே காணப்படுகிறது. இதேபோன்றே மலையகப் பகுதிகளை ஆக்கிரமிக்கும் நோக்கில் புத்தர் சிலை நிறுவுவதும் விகாரைகளை அமைப்பதும் தீவிரப்படுத்தப்படுகிறது. இதற்கு இராணுவமும் பொலிஸாரும் துணை நிற்கின்ற காரணத்தினால் மிக அதிகாரத்துடனும் பாதுகாப்புடனும் இச்செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு, கிழக்கிலுள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த காணிகளையும் நிலங்களையும் ஆலயங்களையும் குடிமனைகளையும் கையகப்படுத்தும் நோக்கில் பல அதிகார தந்திரோபாயங்களை அரசாங்கம் தொடர்ந்து பயன்படுத்திவருகிறது. தொல்பொருள் அமைவிடங்கள், வன பரிபாலனம், சுற்றுலா மையங்கள், பாதுகாப்பு வலயங்கள், பொருளாதார அபிவிருத்தி தானங்கள், கடல்வள பாதுகாப்பு என்ற வலையமைப்புகளை உருவாக்கி தனியாருக்குச் சொந்தமான காணிகள், வீடு வாசல்கள், தரிசு நிலங்கள், விவசாய நிலங்கள், பழமை வாய்ந்த ஆலயங்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. இந்த சதி வலைக்குள் சுடலைகளும், மையவாடிகள் கூட விட்டுவைக்கப்படவில்லை. இந்த வலையமைப்பை விரிவுபடுத்தவே கடந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ காலத்தில் கிழக்குப் பேரணி ஒன்று உருவாக்கப்பட்டு கிழக்கிலுள்ள 2000 ஆயிரத்துக்கு மேற்பட்ட இடங்கள் பௌத்த தொன்மைகளாக அடையாளப்படுத்தப்பட்டு அவற்றை பௌத்த ஆதிக்கத்துக்குள் கொண்டுவர கடுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததை யாரும் மறந்துவிட முடியாது.

எந்த அரசாங்கம், யார் ஜனாதிபதியாக வந்தாலும் இந்த நிகழ்ச்சி நிரலில் மாற்றம் இருப்பதில்லை என்பதற்கு உதாரணந்தான் அண்மையில் முல்லைத்தீவு குருந்தூர்மலை விவகாரம். முல்லைத்தீவிலுள்ள குருந்தூர் மலையிலுள்ள ஆதிசிவன் ஐயனார் ஆலய சுற்றாடலில் இராணுவத்தினர் பௌத்த விகாரை ஒன்றை கட்டுவதற்கு எடுத்த கடுமையான முயற்சி காரணமாக தொடர்ந்து அங்கு சர்ச்சை இடம்பெற்று வருகிறது. குருந்தூர் மலையில் புதிதாக எந்தவிதமான நிர்மாணப்பணிகளையும் செய்யக்கூடாது என கடந்த ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் திகதி மாவட்ட நீதவான் நீதிமன்றம் ஆணையொன்றை பிறப்பித்திருந்தது. இந்த ஆணையை வலுச்சேர்க்கும் வகையில் நவம்பர் மாதம் 24ஆம் திகதி மற்றொரு கட்டளையும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்தக் கட்டளையை சட்டை செய்யாமல் இராணுவத்தின் உதவியுடன் மேற்படி மலையில் விகாரை அமைக்கும் பணிகள் நிறைவுபடுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு நீதிமன்ற கட்டளை மீறலால் பல சவால்களை எதிர்கொள்ளவேண்டிய நிலை இரு இனத்தவர் மத்தியிலும் ஏற்பட்டிருக்கிறது என்பது சூடான விவகாரமாக மாறியிருக்கிறது. ஒன்று, புராதன சமய பண்பாடுகள்கொண்ட வரலாற்றுத் தலமான குருந்தூர் மலை விவகாரத்தால் தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் தீவிர எதிர்நிலை வாதம் தலைதூக்க வழிகாட்டி நிற்கிறது.

இரண்டாவது விடயம், நீதியின் ஆதிக்கம், சமத்துவம், ஒழுங்கு எல்லாவற்றையும் துச்சமாக மதிக்கும் நிலையொன்று உருவாக்கப்பட்டு வருகிறதென்பதை தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது. நீதிமன்றம் என்பது சட்டத்தையும் நீதியையும் அமுல்படுத்தும் ஒரு அதிகாரபூர்வமான தாபனம். எந்தவொரு விவகாரமாக இருந்தாலும் பொதுமக்கள் நாடி நிற்பது நீதிமன்றம் என்பது அனைவரும் அறிந்த விடயம். அவ்வாறானதொரு நிறுவனத்தின் கட்டளை, ஆணை மீறப்பட்டு உதாசீனப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் நீதி, சமத்துவம், அமைதி, ஒழுங்கு என்பன எவ்வாறு பாதுகாக்கப்படப் போகிறதென்பது கேள்விக்குறியாகவே காணப்படுகிறது.

நீதிமன்றின் ஆணையை மீறும் செயற்பாடுகள் இலங்கையில் குறிப்பாக, வடக்கு, கிழக்கில் ஆலய விவகாரம், காணி பிணக்குகள், விகாரை விஸ்தரிப்புகள், உயர்பாதுகாப்பு வலயங்கள் என்பவற்றில் இடம்பெற்றுவருவது சாதாரண ஒரு விடயமாக மாறிவருகிறது.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடு, மாதவனை பகுதியில் நீதிமன்ற உத்தரவை மீறிய வகையில் காணி அபகரிப்புகள் இடம்பெற்று வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது கவலையை தெரிவித்திருந்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி மற்றும் கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மேய்ச்சல்தரை பகுதியாக காணப்படும் மாதவனை பகுதிகளில் பிற மாவட்டங்களில் இருந்துவந்து அத்துமீறி குடியேறுவதாகவும் பயிர்ச்செய்கை மேற்கொள்வதாகவும் இதற்கு எதிராக நீதிமன்றம் தடை விதித்தும் அத்துமீறி சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய கெடுபிடிகள் வடக்கு, கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் தாராளமாக இடம்பெற்றுவருவது அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டபோதும் அரச இயந்திரமோ அன்றி பாதுகாப்புத் தரப்பினரோ எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத அவலநிலையொன்று வடக்கு, கிழக்கில் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்பது உயர்ந்த பாதுகாப்பு வலயம் என்று சொல்லப்படுகிறது. இதற்குள் அத்துமீறி செல்வதற்கோ அனுமதியின்றி நுழைவதற்கோ யாருக்கும் இடமில்லை. இவ்வாறிருக்கும்போது அந்த வலயத்துக்குள் இருக்கும் ஆலயங்களை இடிப்பதும், அழிப்பதும் இன்னொரு மத தலங்களை உருவாக்குவதும் எத்தகைய அநீதியின் செயற்பாடு என்பதை இலங்கை அரசாங்கமோ அன்றி படையினரோ தெரியாமல் இல்லை. போர்க்கால சூழ்நிலையில் ஆலயங்கள் மீது தாக்குதல் இடம்பெறுவதும் அழிக்கப்படுவதும் சாதாரண வழக்கமாக இருப்பதாக எடுத்துக்கொண்டாலும் ஒரு மதத்தின் தொன்மங்கள் அழிக்கப்பட்டு இன்னொரு மதத்தை குறிப்பாக, அரச அங்கீகாரம் பெற்ற மதத்தை வளர்க்க பரப்ப நினைப்பதும் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளாகும். இவ்விவகாரத்தில் படையினர் பங்கெடுத்துக்கொள்வது இன்னும் அநீதியையும் அட்டூழியத்தையும் வெளிக்காட்டும் அராஜகமாகும். வடபுலத்தில் கடந்த மாதம் இன்னொரு சம்பவம் இடம்பெற்று மக்கள் காட்டிய எதிர்ப்பின் காரணமாக அந்த முயற்சி கைவிடப்பட்டுள்ளது.

வடமாகணத்தில் விவசாய பூமியாக போற்றப்படுவது அச்சுவேலி பிரதேசம். அதன் அருகில் அமைந்திருக்கும் நிலாவறைக் குளத்தை அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. ஆழமற்ற கிணற்றுப் பகுதியில் இராணுவத்தினர் இரவோடு இரவாக புத்தர் சிலையொன்றை வைப்பதற்கும் அதற்கு சிறிய விகாரையொன்றை வடிவமைக்கும் வகையில் கொங்கீரீட் இட்டும் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டு மக்களின் கடுமையான எதிர்ப்பின் காரணமாக அம்முயற்சி கைவிடப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இது ஒரு புறமிருக்க, தொல்லியல் திணைக்களத்தின் அதிகார துஷ்பிரயோகமும் அடாவடித்தனங்களும் வடக்கு, கிழக்கு மக்களுக்கு பாரிய சவாலாகவே அமைந்து காணப்படுகிறதென்பதை யுத்தத்துக்குப்பின் உள்ள கலாசார மதப் போராட்டங்களாகவே பார்க்கப்படுகிறது. கடந்த 2021ஆம் ஆண்டுகளில் இந்தத் தொல்லியல் ஊடுருவல்கள் அதிகமாகவே காணப்பட்டதென்பதற்கு கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் ஆலயத்துக்குள் நுழைந்து தொல்லியல் ஆராய்ச்சி நடத்திய திணைக்களத்தின் பாய்ச்சல்கள் அதேபோன்று வவுனியா வெடுக்குநாறி உருத்திரபுரீஸ்வர ஆலய விவகாரம், நாவற்குழி விகாரை, முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலயத்தின் விவகாரம் என ஏகப்பட்ட இந்து ஆலயங்களை கையகப்படுத்தி விகாரைகளை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளை அரசும் அதன் பாதுகாப்பு இயந்திரங்களான படைகளும் மிகக் கச்சிதமாகவே செய்து வருகின்றன.

இந்த ஆக்கிரமிப்புகள் வடக்கில் ஒருவகை யுக்தியுடனும் கிழக்கில் இன்னொருவகை உபாயத்துடனும் மிகத் தந்திரமாகவும் நூதனத்துடனும் மேற்கொள்ளப்பட்டு வருகிறதென்பதற்கு உதாரணமாக அமைவதுதான் 2020ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட கிழக்குப் பேரணியாகும். தமிழ் மக்களின் அபிப்பிராயப்படி பௌத்த மதத்தையும் தொல்பொருள் சின்னங்களையும் பாதுகாத்தல் என்ற பெயரில் உடமையாக்கப்படும் நிலப்பரப்பில் சிங்கள மக்களை குடியமர்த்தி அதனூடாக கிழக்கு மாகாணத்தையும் இயன்றளவு வடக்கு மாகாணத்தையும் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணங்களாக மாற்றியமைக்க எடுக்கப்படும் முயற்சியே இந்த கிழக்குப் பேரணி என்று தமிழர் தரப்பினர் தமது கடுமையான எதிர்ப்பை முன்வைத்து வந்தும்கூட முன்னாள் ஜனாதிபதியால் அது பொருட்படுத்தப்படவில்லை.

இது தொடர்பில் கருத்து தெரிவித்திருந்த பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரட்ன, இன, மத குழுக்களை இலக்குவைத்து மேற்படி செயலணி கிழக்கில் அமைக்கப்படவில்லையென சமாதானம் தெரிவித்திருந்தார். இருந்தபோதிலும் இச்செயலணி அமைக்கப்பட்டதன்பின் கிழக்கு மாவட்டங்களான திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களுக்குள் நுழைந்து தொல்பொருள் ஜாலவித்தை காட்டப்பட்டது. பல இந்து ஆலயங்களின் அபிவிருத்திகள் தடுக்கப்பட்டன. அபிவிருத்திகளுக்கு தடை விதிக்கப்பட்டது. முக்கியமான ஆலயங்கள் இடிக்கப்பட்டு அவ்விடத்தில் விகாரைகள் அமைக்கும் முயற்சிகளுக்கு அரசாங்கத்தால் ஆதரவு வழங்கப்பட்டது மாத்திரமன்றி, நிதியுதவிகளும் நல்கப்பட்டதாக இந்து அமைப்புகளும் மத அபிமானிகளும் தங்கள் எதிர்ப்பை முன்வைத்த சம்பவங்கள் கிழக்கில் இடம்பெற்றுள்ளன. தொல்பொருள் பாதுகாப்பு போர்வையின்கீழ் கிழக்கை பௌத்தமயமாக்கும் இலக்குடன் அம்பாறையில் 247 இடங்களும், திருகோணமலையில் 74 இடங்களும், மட்டக்களப்பில் 28 விகாரைகள் உட்பட்ட 55 இடங்களும் பௌத்த மதத்துடன் தொடர்புடைய தொல்லியல் இடங்களாக 2020ஆம் ஆண்டு அடையாளப்படுத்தியிருந்தார்கள். துரதிஷ்டவசமாக கடந்த வருடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி கவிழக்கப்பட்டதன் காரணமாக கிழக்கு இந்த ஆபத்திலிருந்து தப்பித்துக்கொண்டு விட்டபோதும் மறைமுகமாகவும் அதிகாரபூர்வமாகவும் மேற்கூறப்பட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவே தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் அரசியல் சாசனத்தில் அத்தியாயம் 11இல் குறிப்பிட்டவாறு பௌத்த மதத்துக்கு முதன்மை ஸ்தானம் வழங்கப்படவேண்டும் என்பதோடு அதற்கிணங்க உரிமைகளை எல்லா மதங்களும் காப்புறுதி செய்யும் அதேவேளை, பௌத்த சாசனத்தை பாதுகாத்தலும் பேணிவளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டும் என்று வரையறை செய்திருப்பது என்பது ஏனைய மதங்களின் பூர்வீகத்தை அழிப்பதும் இல்லாமல் ஆக்குவதும் ஜனநாயக நாடொன்றின் தார்மீக ஆட்சியாக இருக்கமுடியாது.



# நடக்குமென்பார் நடக்காது? நடக்காதென்பார் நடந்துவிடும்!!

உள்ளூராட்சி சபைத் தேர்தல் கல்லில் நார் உரிக்கும் நிலையில் ஆமை வேகத்தில் நகர்ந்து செல்கிறது. நடக்குமா, நடக்காதா என்ற சந்தேகத்துடனேயே உள்ளூராட்சித் தேர்தலுக்காக வேட்புமனுவை தேர்தல் தெரிவத்தாட்சி காரியாலயத்தில் கையளித்த அரசியல் கட்சித் தலைவர்களும், வேட்பாளர்களும் இலகு காத்த கிளி போன்ற நிலையில் உள்ளனர்.

ஏற்கனவே தேர்தல் ஆணைக்குழு தேர்தல் இடம்பெறும் என அறிவித்த திகதி எதிர்வரும் 19ஆம் திகதி. ஆனால் நிதி நிலைமை இல்லை என நிதி அமைச்சர் கைவிரித்து அது மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்ட நிலையில், மீண்டும் கடந்த மார்ச் 7ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு கூடி மீண்டும் ஒரு திகதி 48 நாட்கள் இடைவெளியில் எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதி என நீண்ட இடைவெளிக்குப் பின்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு நாள் குறிக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் வாக்கெடுப்பு இம்மாதம் 28ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை என தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது. அஞ்சல் வாக்கெடுப்பு மட்டும் இந்த மாதமும் தேர்தல் தினம் நீண்ட இடைவெளியும் ஏன்? எதற்கு? இப்படி உடனடியாக குறுகிய காலத்தில் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பு செய்வதற்கான காரணங்களை ஆராயும்போது பல சந்தேகங்கள் இந்தத் தேர்தல் நடக்குமா என்பதில் குழப்பகரமான நிலையே எழுகிறது. அவர்கள் அறிவித்த ஏப்ரல் 25இல் கூட தேர்தல் நடக்குமா என்பதில் சந்தேகம் உள்ளது.

நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கோ, அவரை ஜனாதிபதியாக்கிய மொட்டுக் கட்சிக்கோ இந்த வருடம் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தும் எண்ணம் அறவே இல்லை.

இதற்கான மூல காரணம், நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து என்பது இல்லை. பிரதான கட்சிகளான மொட்டுக் கட்சிக்கோ, யானைக் கட்சிக்கோ, அதனுடன் இணைந்த பங்காளிக் கட்சிகளுக்கோ சிங்கள மக்களின் ஆதரவு தென்பகுதியில் வீழ்ச்சி கண்டுள்ளது.

ஜேவிபியின் செல்வாக்கு என்றுமில்லாத அளவு சிங்கள கிராமங்களில் அதிகரிக்கப்பட்டும் இரண்டாம் நிலையில் சஜீத் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பலத்த தோல்வியை சந்திக்கும் நிலை. ஜனாதிபதி ரணிலும் மஹிந்த ராஜபக்ஷ கொம்பனியும் சந்தித்தால் அடுத்த மாகாண சபைத் தேர்தலிலோ, பாராளுமன்றத் தேர்தலாலோ, ஏன் ஜனாதிபதித் தேர்தலிலோ இவர்கள் எவரும் வெற்றியீட்ட முடியாது என்ற அச்சத்தால் தற்போது வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தல் இழுத்தடித்து செயலிழக்க செய்யப்படுகிறது என்பதே உண்மை.

ஜனாதிபதி கடந்த வாரம் மார்ச் 7இல் பாராளுமன்றத்தில் ஏதோ விசேட உரை என்று கூறி பல விடயங்களைக் கூறியிருந்தார். அவர் ஜனாதிபதியாகி ஏறக்குறைய மாதம் ஒரு விசேட உரைகளை ஆற்றியிருக்கிறார் என்பதுதான் அவரின் சாதனை. அவரின் உரையை தற்போது மக்கள் கேட்பதாக இல்லை. ஏதோ கதைக்கிறார் என்ற மனப்பாங்கில்தான் பலர் அவரின் உரையை அலட்டிக்கொள்வதில்லை.

அவர் பேசும்போது, தேர்தல் விடயத்தையும் தொட்டுச்சென்றிருந்தார். இந்த நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கான பயணத்தில் எம்முடன் இணைந்துகொள்ளுமாறு எதிர்க்கட்சியை நான் கேட்டுக்கொள்கிறேன். இதனை நிறைவேற்றிய பின்னர் ஜனாதிபதித் தேர்தலா, பொதுத் தேர்தலா எது தேவை என்பதை தீர்மானிக்க முடியும். அதுவரை நீங்கள் காத்திருக்கத் தயாரா இல்லையா என்று கேட்கிறேன். உங்களுக்கு இதை ஏற்கவோ நிராகரிக்கவோ முடியும்.

குறிப்பாக, ஜூன் நடுப்பகுதிக்குள் நாட்டின் வருமான நிலைமையை குறித்து கருத்திற்கொள்ள வேண்டும். அதிலிருந்து முடிவுகளை எடுக்கலாம். குறிப்பாக, சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி கிடைத்தவுடன் ஒப்பந்தத்தை சபையில் சமர்ப்பித்து முன்மொழிவொன்றை கொண்டுவருவேன். அதை சபை ஏற்பதா, இல்லையா என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள். இன்றேல் எங்களுக்கு மாற்றுவழியைத் தாருங்கள்.

அதன் பிறகு எதிர்கால பயணம் மற்றும் திட்டங்கள் தொடர்பில் நாம் புதிய வரைவு ஒன்றை சமர்ப்பிக்க இருக்கிறோம். அதனை தேசிய சபைக்கும் வழங்குவோம். பாராளுமன்றத்தில் ஆராய்ந்து உடன்பாடு எட்டப்பட்ட பிறகு நீண்ட கால மற்றும் நடுத்தர கால திட்டத்தை முன்வைப்பேன். தற்போது, பாராளுமன்றத்தின் தேசிய சபைக் குழுக்களிடமிருந்து பல அறிக்கைகள் கிடைத்துள்ளன. அதற்கு நான் நன்றி தெரிவிக்கிறேன். ஆனால், 08 மாதங்கள் என்ற குறுகிய காலத்திற்குள் இப்பணியை எங்களால் முடிக்க முடிந்தது. அதைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறுவோம். என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த உரையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக அவர் வெளிப்படையாக கருத்து கூறாதுவிட்டாலும் ஜனாதிபதித் தேர்தலா, பொதுத் தேர்தலா என்பதை தீர்மானிக்க முடியும் என இரண்டு தேர்தல்களை மட்டுமே உச்சரித்திருந்தார். உண்மையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் பற்றியோ, அல்லது மாகாண சபைத் தேர்தல் பற்றியோ அவருக்கு அக்கறை இல்லை என்பது இதனால் ஊகித்துக்கொள்ளலாம்.

ஏற்கனவே ஒருதடவை உள்ளூராட்சி சபை தேர்தல் சட்டப்படி அறிவிக்கவில்லை என தேர்தல் ஆணைக்குழு மீது சேறு பூசியவரும் இந்த ஜனாதிபதி என்பதை நாம் உணரவேண்டும்.

தற்போது 48 நாட்களுக்குப்பின் எதிர்வரும் ஏப்ரல் 25இல் உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிப்பை தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் கடந்த 7ஆம் திகதி அறிவித்தாலும் அதற்கு இடையில் தேர்தலை முழுமையாக இல்லாமல் செய்ய இன்னும் பல விடயங்கள் உள்ளன.

அவைகளில் தற்போதைய தேர்தல் ஆணைக்குழுவை கலைத்து புதிய ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு பாராளுமன்ற அரசியல் குழுவிலும் ஆராயப்பட்டுள்ளது.

திடீரென புதிய தேர்தல் குழு ஒன்று நியமிக்கப்பட்டாலும் பழைய தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெறும் திகதி மாற்றப்படாது இருந்தபோதும் புதிய தேர்தல் ஆணைக்குழு அந்தத் திகதியை பரிசீலித்து மாறவும் சந்தர்ப்பங்கள் இல்லாமல் இல்லை. ஏனெனில், தற்போதைய தேர்தல் ஆணைக்குழுத் தலைவரால் ஒப்பமிட்ட வர்த்தமானி அறிவிப்பு செல்லாது எனக் கூறியும் யாராவது ஒருசாரார் நீதிமன்றத்தை நாடவும் வழிகள் உள்ளன.

எல்லா விடயத்தையும் உயர் நீதிமன்றுக்கு நகல் பத்திரம் தாக்கல் செய்து சட்டத்தின் மூலம் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பார்த்தே தற்போதைய இலங்கை ஆட்சிநடைபெறுகிறது என்ற கசப்பான உண்மை இங்குண்டு.

ஏன் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தக்கூடாதென ஓய்வுபெற்ற ஒரு இராணுவத் தளபதி தாக்கல் செய்த வழக்கும் எதிர்வரும் மே மாதம் நடுப்பகுதிவரை நிலுவையில் உள்ளது. அதன் தீர்ப்பும் எப்படி அமையுமென எவருக்கும் தெரியாது.

அடுத்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திபோட இன்னும் ஒரு காரணம் உள்ளது. தற்போதைய உள்ளூராட்சி சபை வட்டார எல்லைகள் மீள் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு 8000 வட்டார உறுப்பினர்களை 5000இற்குள் மட்டுப்படுத்தும் புதிய எல்லை நிர்ணய சபைத் தலைவரான முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, தற்போது இலங்கையிலுள்ள அநேகமான மாவட்டங்களின் பிரதேச எல்லைகளை மாற்றும் நடவடிக்கை பூர்த்திசெய்யப்பட்டுள்ளது இன்னும் ஓரிரு மாவட்டங்களின் எல்லை மீள் நிர்ணயமும் மார்ச் 15இல் முடிந்துவிடும் என கூறியிருந்தார். அப்படி சகல மாவட்ட புதிய எல்லை நிர்ணயம் முடிவுற்று ஏப்ரல் 25இற்கு இடையில் ஜனாதிபதியின் பணிப்பின்பேரில் வர்த்தமானி அறிவிப்பு வருமானால் தற்போதைய பழைய உள்ளூராட்சி சபை வட்டாரங்கள் இயல்பாகவே இரத்தாகிவிடும்,

அப்படி புதிய வட்டார அறிவிப்பு ஏப்ரல் 25இற்கு இடையில் வெளியிடப்பட்டால் ஏற்கனவே தேர்தல் ஆணைக்குழுவால் பெறப்பட்ட வேட்புமனுக்கள் செல்லுபடியற்றதாக்கப்பட்டு வேட்புமனு செலுத்திய அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்களின் கட்டுப்பணம் மீளவும் கையளிக்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் வேட்புமனு கையளிக்கப்பட்டு ஆறுமாதங்கள் கடக்குமானால் தானாகவே வேட்புமனுக்கள் செல்லுபடியாகிவிடும். இப்படி காலத்தை இழுத்தடித்து தேர்தலை நடத்தாமல் விடுவதற்கு தேர்தல் ஆணைக்குழுவும் நாடகம் ஆடுகின்றதா என்ற நியாயமான கேள்விகளும் மக்கள் மத்தியிலிருந்து எழாமல் இல்லை.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணைக்குழுவிற்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் மார்ச் 19ஆம் திகதிக்கிடையில் நடத்தப்படவேண்டும் என கடந்த வாரம் 6ஆம் திகதி வழங்கியபோதும் அவர்களின் காலக்கேட்டை கணக்கிற்கொள்ளாமல் தேர்தல் ஆணைக்குழு ஒரேயடியாக 48 நாட்களுக்குப் பின்னரான திகதியை குறிப்பிட்டதைப் பார்த்தால் தேர்தல் ஆணையகத்திற்கு ஆளும் தரப்பு அரசால் சாதகமான பதில் கிடைக்கவில்லை என்பதை நோக்க முடிகிறது.

பொருளாதாரச் சிக்கல், எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயு தட்டுப்பாடு, பொருட்கள் விலையேற்றம், மின்கட்டண உயர்வு, வரிகள் அதிகரிப்பு என இவற்றுக்கு எல்லாம் எதிர்ப்புத் தெரிவித்து பெருமளவான மக்கள் தொடர் போராட்டங்களை கடந்த காலங்களில் நடத்தியதுபோன்று தற்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துமாறு கோரி மக்கள் திரண்டு கவனயீர்ப்பு நடத்தும் மிகக் கேவலமான நிலையில் இலங்கை நாடு வந்துள்ளதென்றால் எந்த வகையில் ஜனநாயகம் இந்த நாட்டில் உள்ளது என்பதை சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும்.

அப்படி புரிந்ததனால்தான் அமெரிக்க இராஜாங்க செனட் சபையால் இலங்கை அரசை உள்ளூராட்சிசபை தேர்தலை நடத்துமாறு பணித்துள்ளது, இத்தாலியில் புலம்பெயர் வாழும் இலங்கையர்கள் கடந்த வாரம் இலங்கை அரசு உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தக்கோரி ஒரு கவன ஈர்ப்பு போராட்டத்தை நடத்தியதையும் காணமுடிந்தது.

அரச அமைச்சர்கள்சிலரிடம் இப்படியான கருத்தும் உள்ளது இலங்கையில் மொத்தம் 8719 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களுக்கான சாதாரண பிரதேச சபை உறுப்பினருக்கான மாதாந்த சம்பளமான 15000 ரூபாபடி வருடாந்த சம்பளமாக 1569420000 ரூபா செலவிடப்பட்டுள்ளது. இது 5 வருடமாக நீடிக்கப்பட்டுள்ள பதவிக்காலத்தில் 7847100000ரூபா செலவிடப்பட்டுள்ளது. அதாவது 7847.1 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இக்கணக்கில் சராசரி உறுப்பினருக்கான சம்பளப்பணத்தை வைத்தே கணக்கிடப்பட்டுள்ளது.ஆனால் பிரதேச சபைத்தவிசாளரின் சம்பளம் 25000ரூபா. உபதவிசாளர் சம்பளம் 20000ரூபா. நகர சபைத்தலைவர், நகர சபை உபதலைவர் சம்பளம் நகர சபை உறுப்பினர்கள் சம்பளம் மாநகர சபை உறுப்பினர்கள் சம்பளம் மாநகர சபை பிரதிமேயர் சம்பளம் மாநகர மேயர் சம்பளம் என்பன அதிகமாகும். இதைவிட இவர்களுக்கான விசேட கொடுப்பனவுகள் சபையின் பிரதானிகளுக்கான வாகன சாரதிகளின் சம்பளம் போன்றவற்றையும் சேர்த்து கணக்கிட்டு பார்த்தால் 8000 மில்லியனை கடந்து செல்லலாம்.

இந்த அளவு செலவு செய்தும் எந்த ஒரு நல்ல பெறுபேறுகளையும் நாட்டுக்கோ மக்களுக்கோ பெற்றுத்தராத பல உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இலங்கையில் உண்டு. மீண்டும் தெரிவதற்கான இன்னொரு தேர்தல் தேவையா? சபைகள் அனைத்தையும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு கீழ்ப்பட்டு செயலாளர்களின் கீழ் நிர்வகித்துக்கொண்டு இந்தளவு தொகையையும் உள்ளூராட்சித்தேர்தலுக்கு செலவு செய்யும் தொகையையும் சேர்த்து மக்களின் நலனோம்பு விடயங்களுக்கு பயன்படுத்துவதே நாடு இப்போதுள்ள நிலையில் நல்ல விடயமாகும்.என்பதை கூறி உள்ளூராட்சி சபை தேர்தலை தட்டிக்கழிக்கவும் மறை முகமான பிரசாரங்களை ஏவிவிட்டதையும் சமூக ஊடகங்கள் மூலமாக காணமுடிகிறது.

ஆனால் யார் என்ன சொன்னாலும் செவிடன் காதில் ஊதும் சங்குபோன்றும், எருமை மாட்டில் ஊற்றும் நீர்போன்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவும், அவருக்கு துணையாக உள்ள அமைச்சர்களும் உள்ளவரை உள்ளூராட்சி சபை தேர்தல் இழுபறியாகவே நடக்குமென்பார் நடக்காது நடக்கா தென்பார் நடந்து விடும் என்ற கதைகளுடனே கடந்து செல்லும்.



பா.அரியநேத்திரன்

# நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது;

## தவக்கால சிந்தனை

அக்காலத்தில் இயேசு சமாரியாவில் உள்ள சிக்கார் என்னும் ஊருக்கு வந்து சேர்ந்தார். யாக்கோபு தம் மகன் யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகே அந்த ஊர் இருந்தது. அவ்வூரில் யாக்கோபின் கிணறும் இருந்தது. பயணத்தால் களைப்புற்றிருந்த இயேசு கிணற்று ஓரமாய் அமர்ந்தார். அப்போது ஏறக்குறைய நண்பகல்.அவருடைய சீடர் உணவு வாங்குவதற்காக நகருக்குள் சென்றிருந்தனர். சமாரியப் பெண் ஒருவர் தண்ணீர் எடுக்க வந்தார். இயேசு அவரிடம், “குடிக்க எனக்குத் தண்ணீர் கொடும்” என்று கேட்டார். அச்சமாரியப் பெண் அவரிடம், “நீர் யூதர்; நானோ சமாரியப் பெண். நீர் என்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்பது எப்படி?” என்று கேட்டார். ஏனெனில் யூதர்கள் சமாரியரோடு பழகுவதில்லை.இயேசு அவரைப் பார்த்து,




“கடவுளுடைய கொடை எது என்பதையும் ‘குடிக்கத் தண்ணீர் கொடும்’ எனக் கேட்பவர் யார் என்பதையும் நீர் அறிந்திருந்தால் நீரே அவரிடம் கேட்டிருப்பீர்; அவரும் உமக்கு வாழ்வு தரும் தண்ணீரைக் கொடுத்திருப்பார்” என்றார்.அவர் இயேசுவிடம், “ஐயா, தண்ணீர் எடுக்க உம்மிடம் ஒன்றுமில்லை; கிணறும் ஆழமானது. அப்படியிருக்க வாழ்வு தரும் தண்ணீர் உமக்கு எங்கிருந்து கிடைக்கும்? எம் தந்தை யாக்கோபைவிட நீர் பெரியவரோ? அவரே எங்களுக்கு இக்கிணற்றை வெட்டித் தந்தார். அவரும் அவருடைய மக்களும் கால்நடைகளும் இதிலிருந்துதான் தண்ணீர் குடிப்பது வழக்கம்” என்றார்.இயேசு அவரைப் பார்த்து, “இந்தத் தண்ணீரைக் குடிக்கும் ஒவ்வொருவருக்கும் மீண்டும் தாகம் எடுக்கும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது; நான் கொடுக்கும் தண்ணீர் அதைக் குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும்” என்றார்.அப்பெண் அவரை நோக்கி, “ஐயா, அத்தண்ணீரை எனக்குக் கொடும்; அப்போது எனக்குத் தாகமும் எடுக்காது; தண்ணீர் எடுக்க நான் இங்கு வரத் தேவையும் இருக்காது” என்றார்.இயேசு அவரிடம், “நீர் போய், உம் கணவரை இங்கே கூட்டிக்கொண்டு வாரும்” என்று கூறினார். அப்பெண் அவரைப் பார்த்து, “எனக்குக் கணவர் இல்லையே” என்றார். இயேசு அவரிடம், “ ‘எனக்குக் கணவர் இல்லை’ என நீர் சொல்வது சரியே. உமக்கு ஐந்து கணவர்கள் இருந்தார்கள் என்றாலும் இப்போது உம்முடன் இருப்பவர் உம் கணவர் அல்ல. எனவே நீர் கூறியது உண்மையே” என்றார். அப்பெண் அவரிடம், “ஐயா, நீர் ஓர் இறைவாக்கினர் எனக் கண்டுகொண்டேன். எங்கள் முன்னோர் இம்மலையில் வழிபட்டு வந்தனர். ஆனால் நீங்கள் எருசலேமில்தான் வழிபட வேண்டும் என்கிறீர்களே” என்றார்.இயேசு அவரிடம், “அம்மா, என்னை நம்பும். காலம் வருகிறது. அப்போது நீங்கள் தந்தையை இம்மலையிலோ எருசலேமிலோ வழிபடமாட்டீர்கள். யாரை வழிபடுகிறீர்கள் எனத் தெரியாமல் நீங்கள் வழிபடுகிறீர்கள். ஆனால் நாங்கள் தெரிந்து வழிபடுகிறோம். யூதரிடமிருந்தே மீட்பு வருகிறது. காலம் வருகிறது; ஏன், வந்தேவிட்டது! அப்போது உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் வழிபடுவர். தம்மை வழிபடுவோர் இத்தகையோராய் இருக்கவே தந்தை விரும்புகிறார். கடவுள் உருவமற்றவர். அவரை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில்தான் வழிபடவேண்டும்” என்றார். அப்பெண் அவரிடம், “கிறிஸ்து எனப்படும் மெசியா வருவார் என எனக்குத் தெரியும். அவர் வரும்போது அனைத்தையும் எங்களுக்கு அறிவிப்பார்” என்றார். இயேசு அவரிடம், “உம்மோடு பேசும் நானே அவர்” என்றார்.அந்நேரத்தில் இயேசுவின் சீடர் திரும்பி வந்தனர். பெண் ஒருவரிடம் அவர் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் வியப்புற்றனர். எனினும் “என்ன வேண்டும்?” என்றோ, “அவரோடு என்ன பேசுகிறீர்?” என்றோ எவரும் கேட்கவில்லை.



# போர் முடிவுற்றும் மாறாத ரணங்கள்

**ஷாலினி**

எந்தவொரு நாட்டிலும் போரின் பின்னரான காலகட்டங்களில் ஏற்படும் சமூக விளைவுகள் தவிர்க்க முடியாதவை. உலக வரலாற்றில் போர்களின் பின்னரான காலகட்டங்களிலும் இவற்றை நாம் அவதானிக்க முடியும். இதற்கு நாம் மாத்திரம் விதிவிலக்கானவர்களல்லர். குறிப்பாக, இலங்கை உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 13 வருடங்கள் கடந்துள்ள நிலையில், பல்வேறு சமூக பிறழ்வுகளை போரின் பின்னரான சமுதாயம் சந்தித்து நிற்கின்றது.

தொடர்ச்சியான போரிலும் அதன் சூழலிலும் கட்டுண்டு கிடந்த மக்கள், கண்ணீர் மாலையும் கந்தலாடையும் தரித்தவர்களாய் உயிரைக் காப்பாற்ற காத தூரம் நடந்துவந்த வரலாற்றை மறந்து 2009ஆம் ஆண்டின் பின்னரான காலகட்டத்தில் தங்கள் வாழ்வியலை தொலைத்துத் தடுமாறும் சூழலை அவதானிக்க முடியும்.

குறிப்பாக, வடக்கின் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைப் பொறுத்த வரையில் அதிகமான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் காணப்படுகின்றன. போரின்போது கணவனை இழந்தும் கணவனை இறுதி யுத்தத்தின்போது இராணுவத்திடம் ஒப்படைத்து இன்றும் தேடிக்கொண்டிருப்பவர்களும் இவர்களில் அதிகமானவர்கள். தமது பொருளாதார தேவையைப் பூர்த்திசெய்வதற்கு பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் வழங்கப்பட்டிருப்பினும் இவை அவர்களின் தேவைகளை பூர்த்திசெய்யக்கூடியதொன்றாக இருக்கின்றதா என்றால் அது கேள்விக்குரிய விடயமாகும்.

இம்மாவட்டங்களில் அதிகமான பெண்கள் அதிகாலை 6 மணிக்கு ஆடைத் தொழிற்சாலைக்கோ மற்றும் விவசாயப் பண்ணைக்கோ சென்றால் மீண்டும் இவர்கள் வீட்டுக்குத் திரும்புவது மாலை 6 மணிக்கு. கண்டிப்பதற்கு பெரியவர்கள் இல்லாத சூழலில் பிள்ளைகள் கட்டுப்பாடற்ற நிலையில் வளரும் தன்மை காணப்படுகின்றது. வீடு வரும் தாய் தனது குழந்தைகள் எவ்வாறான சூழலில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களின் அன்றாட நிகழ்வுகள் பற்றித் தெரிந்துகொள்ள அவர்களுக்கு நேரம் போதுமானதாக இல்லை. தமது குழந்தைகள்மீது வைத்த நம்பிக்கையில் அவர்கள் அன்றாட வாழ்க்கைக்கான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்க தினமும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வேலைவாய்ப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளதே தவிர, அவர்களுக்கும் அவர்கள் குழந்தைகளுக்குமான இடைவெளியில் ஓர் ஆரோக்கிய மற்ற உறவே காணப்படுகின்றது. இந்நிலையில், பிள்ளைகள் பல்வேறு சமுதாய நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகின்றார்கள். குழந்தைகளின் பாதுகாப்பு என்பது கேள்விக்குரிய ஒன்றாகவே காணப்படுகின்றது. பாடசாலை விட்டு வரும் குழந்தை தனியாக அல்லது அயலவர் வீட்டில் தங்கி வாழும் சூழல் காணப்படுகின்றது. இந்நிலையில் அவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதுடன், தனது தாயின் அரவணைப்பை, கண்டிப்பை இழக்கின்றனர். சடுதியாக அதிகரித்துவரும் இளவயதுத் திருமணம், பாடசாலை இடைவிலகல், மாணவர்களிடையே அதிகரிக்கும் போதைப் பொருள் பாவனை என சமுதாயம் தன்னை தொலைத்துக்கொண்டிருக்கின்றது. பெற்றோர்கள் தமது குழந்தைகளின் எதிர் காலத்திற்காக வேலைக்குச் செல்லும் நிலையில் அதனை பிள்ளைகள் உணரும் நிலை அங்கில்லை.

இது ஒருபுறமிருக்க, தான் பட்ட துன்பத்தை தன் பிள்ளை அனுபவிக்கக்கூடாதென நினைத்து பெற்றோர்கள் கொடுக்கும் அதீத சுதந்திரம் மாணவர்களை தவறான வழியில் நடத்திச் செல்கின்றது. இன்று பல்வேறு காரணிகள் மாணவர்களின் கல்வியில் தாக்கம் செலுத்தினாலும் அதிகரித்துவரும் தொலைபேசி மற்றும் சமூக ஊடகங்களின் பாவனை அவர்களை கல்வியிலிருந்து வேறு வழிக்கு திசை திருப்பியுள்ளது. இணையவழி கற்பித்தல் செயற்பாடுகளுக்காக மாணவர்கள் தொலைபேசியை பாவிக்க ஆரம்பித்தபோதும் அதுதொடர்பான போதுமான விழிப்புணர்வு இல்லாமை அவர்களை தவறான வழிக்கு இட்டுச் சென்றதுடன், பெரும்பாலான பெற்றோர்கள் சமூக ஊடகங்கள் தொடர்பான விழிப் புணர்வை கொண்டிருப்பதில்லை என்பதே மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். பெற்றோர் தமது பிள்ளைகளின் செயற்பாடுகளில் கண்டிப்புடன் கூடிய கரிசனையை கடைப்பிடிக்க வேண்டிய ஒரு காலகட்டத்தில் வாழ்ந்துகொண் டிருக்கின்றோம். பாடசாலை மாணவர் களிடையே அதிகரித்துவரும் போதைப் பொருள் பாவனையும் அவர்கள் தமது இலக்கை அடைய முடியாமல் செல்வதற்கு ஓர் காரணமாகும். இவை ஒருபுறமிருக்க, போரின் விளைவுகள் இன்றும் ஏதோவொரு வகையில் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. யுத்தம் முடிவுற்றும் விடுவிக்கப்படாத நிலங்கள், தொடர்ந்து அபகரிக்கப்படும் நிலங்கள் என நிலத்துக்கான போராட்டம் ஒருபுறம், இராணுவத்திடம் கையளிக்கப்பட்டு காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் போராட்டமென இன்றும் போராட்டங்களுக்கும் கண்ணீர் சிந்தல்களுக்கும் பஞ்சமில்லாத நிலையில், இவற்றிற்கும் எமக்கும் எந்தத் தொடர்பும் இல்லாததுபோன்று வேடிக்கை பார்க்கும் சமுதாயமும் எம் மத்தியில் உருவாகியுள்ளது.

போரின் பின்னரான காலகட்டத்தில் இவ்வாறான சமுதாய மாற்றங்கள் நிகழ்ந்தாலும் கூட, மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டிய தேவையுள்ளது. இவற்றையெல்லாம் நாம் கண்டும் காணாமல் கடந்து செல்வோமானால், எமது எதிர்கால சந்ததியை நாம் தொலைத்துநிற்க நேரிடும். குறிப்பாக, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் செயற்பாடுகளில் கண்டிப்புடன் கூடிய கண்காணிப்பை மேற்கொள்ளவேண்டியது இன்றைய சூழலில் மிகவும் அவசியமான ஒன்றாகும்.

# சந்தர்ப்பவாத அரசியலை விடுத்து நாட்டை மீட்க எதிரணிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

ஜனநாயகம் எனக் கூறிக்கொண்டு, ஆட்சிக் கவிழ்ப்பு சூழ்ச்சியிலும் நாட்டை சீர்குலைக்கும் நோக்கிலும் முன்னெடுக்கப்படும் போராட்டங்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அவ்வாறான நடவடிக்கைகள் எமது நாட்டுக்கே பாதிப்பாக அமையும். எனவே, சந்தர்ப்பவாத அரசியலை விடுத்து, நாட்டை மீட்க எதிரணிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் அழைப்பு விடுத்தார்.

வெற்றிபெற்றவர்களையும், முயற்சித்து தோல்வியடைந்தவர்களையுமே வரலாறு நினைவில் வைத்திருக்கும். மாறாக, வேடிக்கை பார்ப்பவர்களுக்கு வரலாற்றில் இடமில்லை. நாளை ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால்கூட அதில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே வெற்றிபெறுவார் எனவும் அமைச்சர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் (10) நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் ஜீவன் தொண்டமான் இவ்வாறு கூறினார். அவர் மேலும்



கூறியவை வருமாறு,

“நாட்டில் கடந்த வருடம் இதே காலப்பகுதியில் உரத் தட்டுப்பாடு ஏற்பட்டது. மின்வெட்டு அமுலானது. வரிசை யுகம் ஏற்பட்டது. உணவுப்பொருட்களுக்கான பணவீக்கம் 100 வீதத்தைத் தாண்டிச்சென்றது. இவற்றுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முடிவு கட்டியுள்ளார். அதற்காக அவருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நாடு இவ்வாறு நெருக்கடி நிலையிலிருந்து மீளும்போது, எதிர்க்கட்சிகள் அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

1991ஆம் ஆண்டளவில் இந்தியாவிலும் இதேபோன்றதொரு நிலைமை ஏற்பட்டது. ஆனால், நாட்டை மீட்பதற்காக அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்தன. மக்களுக்கு சேவை செய்தன. இதனால்தான் இந்தியா இன்று 5ஆவது மிகப்பெரிய பொருளாதார நாடாக மாறியுள்ளது. எனினும், எமது நாட்டிலுள்ள அரசியல் தலைவர்களுக்கு இந்த மனநிலை இல்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

பொருளாதார ஸ்திரத்தை மறந்து, அரசியலுக்காக மக்களை திருப்திப்படுத்தும் வகையில் வரிக்கொள்கைகள் கொண்டுவரப் பட்டதாலேயே நாட்டுக்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. 2000ஆம் ஆண்டளவில் இலங்கையில் போர் இடம்பெற்ற காலப்பகுதியில்கூட ஏற்றுமதி 40 வீதமாக இருந்துள்ளது. தற்போது போர்கூட இல்லை. ஆனால், ஏற்றுமதி 20 வீதமாகவே உள்ளது. முறையற்ற சில சட்ட ஏற்பாடுகளும் பின்னடைவுக்குக் காரணங்களாக அமைகின்றன. கடன் வாங்கியே நாடு நடத்தப்பட்டுள்ளதுடன், சொந்தகாலில் நிற்பது பற்றி சிந்திக்கப்படவில்லை. சிபேட்கோ நிறுவனம் பாரிய நட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. மின்சார சபையும் இதே வழியில்தான் பயணித்துக்கொண்டிருக்கின்றது. வாங்கப்படும் கடன்களில் இவற்றுக்குத்தான் உயிர் கொடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதற்கு முடிவு கட்டப்பட வேண்டும்.

எமது நாட்டு ஜனாதிபதி தற்போது வரி அதிகரிப்பை மேற்கொண்டுள்ளார். செல்வந்தர்கள் மீதே வரிச்சுமை திணிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கான சமுர்த்தி திட்டமும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். தகுதியானவர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே சமுர்த்தி பட்டியல் மீளாய்வு செய்யப்படுகின்றது. எனவே, மலையக மக்களும் இதற்கு கட்டாயம் விண்ணப்பிக்க வேண்டும்.

அதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு 16 ஆயிரம் மில்லியன் ரூபா செலவாகும். அத்தேர்தலால் ஜனாதிபதியோ, பிரதமரோ அல்லது அமைச்சரவையோ மாறப்போவதில்லை. பொருளாதாரப் பிரச்சினைகளும் தீரப்போவதில்லை. நாம் ஜனநாயகத்துக்கு எதிரானவர்கள் அல்லர். நாளை ஜனாதிபதித் தேர்தலொன்று நடத்தப்பட்டால்கூட அதில் ரணில் விக்கிரமசிங்கவே வெற்றிபெறுவார்” - என்றார்.

# இறக்குமதி வாகனங்களுக்கு வரி விலக்கு

வெளிநாட்டு ஊழியர்களுக்கு வரிச்சலுகையுடன் கூடிய மின்சார வாகனங்களை இறக்குமதிசெய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட வாகனங்களை விடுவிக்கும் பணியை சுங்கத்துறை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

கடந்த வருட இறுதிக்குள் வெளிநாட்டுப் பணம் 475 மில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுப் பணப்பரிவர்த்தனை அதிகரிப்பதற்கு இந்த வேலைத்திட்டம் உதவியுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இலங்கையில் சட்டரீதியாக வெளிநாட்டு தொழிலாளர்கள் அனுப்பும் பணத்தின் அடிப்படையில் மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குறித்த தொழிலாளி இலங்கைக்கு அனுப்பப்பட்ட பணத்தில் பாதிக்கு சமமான CFI மதிப்புடைய மின்சார வாகனங்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

மேலும், மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு செலுத்தவேண்டிய வரியை வெளிநாட்டு நாணயத்தில் செலுத்த வேண்டும்.

இந்த வேலைத்திட்டத்திற்கு வெளிநாட்டு ஊழியர்களிடமிருந்து சாதகமான பதில்கள் கிடைத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மக்களை காலில் போட்டு மிதிக்கும் தற்போதைய அரசை விரட்டியடிப்போம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு





டீசல் முதல் எரிவாயு, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வரை அனைத்துப் பொருட்களின் விலையையும் உயர்த்தி, மின் கட்டணத்தை 250 சதவீத்தால் உயர்த்தி, வட்டி வீதத்தையும் அதிகரித்து, நாட்டு மக்களின் வாழ்க்கையை அழிக்கும் யுகத்தையே தற்போதைய அரசாங்கம் உருவாக்கி வருவதாகவும், சகலதையும் வெட்டி வீழ்த்தும் தற்போதைய அரசாங்கம் விரட்டப்பட்டு, சாதாரன மனிதனும் கோலோச்சும் யுகம் உருவாக்கப்பட வேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மாளிகாவத்தையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கம், நாட்டு மக்களைப் பற்றி சிந்திக்காமல் தங்களைப் பற்றியும் தங்களின் இருப்பு, பிழைப்பு மற்றும் தங்களின் நண்பர்களைப் பற்றி மட்டுமே சிந்திக்கின்றது. நாட்டை வங்குரோத்தாக்கி ஜனாதிபதியை நியமித்த 134 எம்.பிக்களை பற்றிதான் நினைக்கின்றது. அவர்களுக்கு சலுகைகள் மற்றும் சிறப்புரிமைகளை வழங்குவதன் மூலம் அவர்கள் தங்கள் வாழ்க்கையை சுகபோகமாக கழித்து வருகின்றனர். பதவிக்காலம் முடியும் வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்த மாட்டேன் என தற்போதைய ஜனாதிபதி மொட்டு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு இந்நாட்டின் 220 இலட்சம் மக்களை மறந்துபோனாலும் ஐக்கிய மக்கள் சக்தி இந்நாட்டின் சாதாரண மக்களை மறக்கவில்லை. பலமான திட்டத்தின் ஊடாக குழுவாக மக்கள் பிரச்சினைகளை தீர்க்கும் ஒரே மாற்று அரசாங்கம் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கமே. இந்தப் பிரச்சினைகள் அனைத்திற்கும் ஐக்கிய மக்கள் சக்தியிடம் தெளிவான பதில்கள் இருக்கின்றன.

இந்நாட்டின் 75 ஆண்டுகால ஜனநாயக வரலாற்றில் எந்த எதிர்க்கட்சியும் செய்யாத பணியை கடந்த 3 ஆண்டுகளில் ஐக்கிய மக்கள் சக்தி நிறைவேற்றியுள்ளது. அரச அதிகாரம் இல்லாமல் மக்களுக்கு சேவையாற்றிய ஒரே கட்சி ஐக்கிய மக்கள் சக்தியே - என்றார்.

# ராகமவில் 17 வயதுச் சிறுமி மீது தாக்குதல்

## சிறுமியின் மாற்றாந்தாய் கைது

ராகம குருகுலாவ பகுதியில் 17 வயதுச் சிறுமியொருவரை கொடூரமாக தாக்கி துன்புறுத்திய 39 வயதுடைய பெண்ணொருவர் ராகம பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

துன்புறுத்தலுக்குள்ளான சிறுமியின் மாற்றாந் தாயே ராகம பொலிஸாரால் கைதுசெய் யப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக சட்ட வைத்தியர் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்காக அவர் கொழும்பு வடக்கு ராகம போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். பெண் பொலிஸ் அதிகாரியின் கண்காணிப்பில் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சிறுமியின் தாய் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகவும் அதன்பின்னர் தந்தை மீண்டும் இரண்டாம் திருமணம் செய்துகொண்டதாகவும் அவருக்கு ஒன்பது வயதுடைய மகள் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் தந்தை பல வருடங்களாக கொரியாவில் வேலை பார்த்துவரும் நிலையில், குறித்த சிறுமி சித்தியுடன் வசித்து வருகிறார்.

இந்நிலையில், குறித்த சிறுமி தொடர்ச்சியாக சித்தியினால் துன்புறுத்தப்படுவதாக ராகம பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. ராகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# கல்முனை மாநகர சபையில் 2 கோடி ரூபா வரிப் பணம் ஏப்பம்

றிப்தி அலி

கல்முனை மாநகர சபைக்கு பொதுமக்களால் செலுத்தப்பட்ட வரிப் பணத்தில் சுமார் இரண்டு கோடி ரூபா களவாடப்பட்டுள்ள விடயம் வெளியாகியுள்ளது.

கல்முனை மேயர் ஏ.எம்.றகீபினால் மாநகர சபையின் நிதிப் பிரிவில் பணியாற்றுவதற்காக கடமைப் பட்டியல் வழங்கப்பட்ட வேலைத் தொழிலாளியான ஏ.ஆர்.எம்.முஜாஹித் என்பவரின் பங்குபற்றலுடனேயே இந்தப் பாரிய நிதி மோசடி இடம்பெற்றுள்ள விடயம் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது அம்பலமாகியுள்ளது.

எம்.எம்.நபார் என்பவரினால் கல்முனை மாநகர சபை எல்லைக்குள் வாகனத் தரிப்பிட சேவையை மேற்கொள்வதற்காக 2023.02.01ஆம் திகதி முஜாஹிதிடம் செலுத்தப்பட்ட 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான KMC/RE/23/056086 எனும் இலக்க பற்றுச்சீட்டு எந்தவித அனுமதியுமின்றி இரத்துசெய்யப்பட்டதன் ஊடாகவே இந்த நிதி மோசடி தெரியவந்துள்ளது.

வாகனத் தரிப்பிடத்திற்கான கோவையில் இந்த குத்தகைப் பணம் வரவு வைக்கப்பட்டு கட்டவேண்டிய தொகையிலிருந்து கழிக்கப்பட்டுள்ளது. எனினும், மேற்படி சேவைப் பெறுநருக்கு பற்றுச்சீட்டு வழங்கப்பட்டதன் பிற்பாடு அத்தொகையானது கணக்கிற்கு வரவு வைக்கப்படாமல் இரத்துசெய்யப்பட்டுள்ளமை ஆரம்பகட்ட விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

இதுபோன்று 2022.08.10ஆம் திகதி வேலைத் தொழிலாளியான முஜாஹித்தினால் தயாரித்து வழங்கப்பட்ட மொத்த வருமானம் 2 இலட்சத்து 2 ஆயிரத்து 513 ரூபாவாகும். எனினும், நாளுக்குரிய விபரமான வருமானப் பட்டியல் 2 இலட்சத்து 86 ஆயிரத்து 613 ரூபாவாகும். இதற்கமைய 80 ஆயிரத்து 100 ரூபா மாநகர சபையின் வருமானம் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

இவைபோன்று, கல்முனை மாநகர சபையின் பெயரில் 2020.01.01ஆம் திகதி தொடக்கம் 2023.02.15ஆம் திகதிவரையான 38 மாதங்களுக்குள் வழங்கப்பட்ட சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான 2,709 பற்றுச்சீட்டுகள் உரிய அதிகாரிகளின் எந்தவித அனுமதியுமின்றி TaxMan எனும் மென்பொருளின் ஊடாகவே இரத்துசெய்யப்பட்டுள்ள விடயம் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

அது மாத்திரமல்லாமல், உள்ளீடு செய்யப்பட்டு இரத்துசெய்யப்பட்ட பற்றுச்சீட்டுகளின் 830 தரவுகளில் வருமான வரிக்கோவை இலக்கங்கள் அழிக்கப்பட்டுள்ளதுடன், 892 புதிய வரிக் கோவைகள உருவாக்கப்பட்டுள்ளன.

அத்துடன், இந்த மென்பொருளில் காணப்பட்ட பல அடிப்படைத் தரவுகளில் அட்மின் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து முஜாஹித் மற்றும் நிதிப் பிரிவில் பணியாற்றிய அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.ஏ.நஸீம் ஆகிய இருவரும் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மியினால் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக கல்முனை பொலிஸ் நிலையத்தில் கடந்த பெப்ரவரி 20ஆம் திகதி முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டது. கல்முனை பொலிஸ் நிலையத்தின் அறிவுறுத்தலுக்கமைய இந்த நிதி மோசடி தொடர்பில் கடந்த பெப்ரவரி 25ஆம் திகதி அம்பாறையிலுள்ள விசேட குற்றப்புலனாய்வு விசாரணைப் பிரிவிலும் முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கல்முனை மாநகர சபையினால் பணிநீக்கம் செய்யப்பட்ட முஜாஹித் மற்றும் நஸீம் ஆகிய இருவரும் விசேட குற்றப்புலனாய்வு விசாரணைப் பிரிவினால் கடந்த வாரம் கைதுசெய்யப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகளுக்காக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக, குறித்த நிதி மோசடி தொடர்பில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் ஊடாக கிழக்கு மாகாண பிரதம செயலாளருக்கு கல்முனை மாநகர ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிதி மோசடி தொடர்பில் ஆராய்வதற்காக இரண்டு விசேட குழுக்கள் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்கவினால் நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை மாநகர சபை தொடர்பில் கிழக்கு மாகாண சபையினால் இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட பல விசாரணைக் குழுக்களின் அறிக்கைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. இந்நிலையிலேயே குறித்த நிதி மோசடி தொடர்பில் ஆராய்வதற்காகவும் விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய, கிழக்கு மாகாண திறைசேரியின் நிதி மற்றும் வருமானத்துக்குப் பொறுப்பான பிரதம கணக்காளர் டி.செந்தில்நாதன் தலைமையிலான விசேட குழு, கடந்த புதன்கிழமை (08) கல்முனை மாநகர சபைக்கு கள விஜயம் செய்து ஆரம்பகட்ட விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

"நிதிப் பிரமாணங்களின் அடிப்படையில் அரச நிறுவனமொன்றில் ஒரு பற்றுச்சீட்டு இரத்துசெய்யப்பட்டிருப்பின் அது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு கோவைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். எனினும், கல்முனை மாநகர சபையில் இரத்துசெய்யப்பட்ட பற்றுச்சீட்டுகளில் எவையும் அவ்வாறு காணப்படவில்லை" என கணக்காளர் செந்தில்நாதன் தலைமையிலான குழு இதன்போது சுட்டிக்காட்டியிருந்தது.

இதுபோன்று கிழக்கு மாகாண கணக்காய்வுத் திணைக்களத்தின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் எச்.எம்.எம்.றசீத் தலைமையிலான குழுவொன்று கடந்த 26.02.2023ஆம் திகதிமுதல் கல்முனை மாநகர சபையில் முகாமிட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

எனினும், இக்குழுவின் விசாரணைகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்ச்சியாக சமூக ஊடகங்களில் முன்வைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, ''மோசடித் தொகையைக் குறைத்துக் காட்டும் செயற்பாட்டில் இந்தக் குழு ஈடுபட்டுள்ளது. அதனாலேயே குறித்த குழுவின் விசாரணை இதுவரை துரிதப்படுத்தப்படவில்லை" போன்ற பல பதிவுகளை பேஸ்புக்கில் காணமுடிந்தது.


மேற்படி குற்றச்சாட்டுகளை நிராகரித்த கணக்காய்வாளர் றசீத், "எமது விசாரணைக் குழுவின் இறுதி அறிக்கை நாளை திங்கட்கிழமை (13) கிழக்கு மாகாண பிரதம செயலாளரிடம் கையளிக்கப்படும்" என உறுதியளித்தார்.


அதுவரை இந்த விசாரணை தொடர்பில் ஊடகங்களுக்கு எந்தவித கருத்தும் கூற முடியாது என அவர் மேலும் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், மாகாண கணக்காய்வுத் திணைக்களத்தினால் கல்முனை மாநகர சபைக்கு மாதம் இரு முறை கணக்காய்வுக்காக வந்தும், கடந்த பல வருடங்களாக இடம்பெற்றுவந்த இந்த நிதி மோசடியைக் கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 2018.04.02ஆம் திகதி கல்முனை மாநகர மேயராக சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவுசெய்யப்பட்டதையடுத்து மருதமுனையைச் சேர்ந்த முஜாஹித் கல்முனை மாநகர சபையின் வேலைத் தொழிலாளியாக நியமிக்கப்படுகின்றார்.

நிதிப் பிரிவின் வருமானப் பகுதி பொறுப்பு உத்தியோகத்தருக்கு உதவியாக இருத்தல், நிதிப் பிரிவின் முகப்பு அலுவலகத்தில் துப்புரவாக இருப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல், வருமானம் அறவிடும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான அறவீட்டுப் பட்டியலை பொறுப்பு உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் முறையாக வழங்குதல் போன்ற பொறுப்புகளை உள்ளடக்கிய கடமைப் பட்டியல் மேயர் றகீபினால் 2018.08.15ஆம் திகதி முஜாஹித்திற்கு வழங்கப்படுகின்றது.

இந்த வேலைப்பட்டியலை மீறி முகாமைத்துவ உதவியாளரொருவர் மேற்கொள்ளவேண்டிய கடமையான நிதிகளை நேரடியாகக் கையாளும் செயற்பாட்டை கடந்த பல வருடங்களாக முஜாஹித் மேற்கொண்டு வந்துள்ளார். அது மாத்திரமல்லாமல், வேலைத் தொழிலாளியான இவருக்கு மடிகணினியொன்றும் கல்முனை மாநகர சபையால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




கடமைப் பட்டியலை மீறி முஜாஹித் செயற்பட்டதை மேயரோ, முன்னாள் ஆணையாளர் எம்.சீ.அன்சாரோ, முன்னாள் கணக்காளர் ஏ.எச்.தஸ்தீகோ தற்போதைய கணக்காளார் கே.எம்.றியாஸோ கணக்கிலெடுக்காமல் இருந்துவந்துள்ளனர்.

இவ்வாறான நிலையில், கல்முனை மாநகர சபையின் புதிய ஆணையாளராக அஸ்மி நியமிக்கப்பட்ட பின்னர், முஜாஹித்தை நிதிப் பிரிவிலிருந்து இடமாற்ற மேற்கொண்ட முயற்சி மேயரின் எதிர்ப்பையடுத்து கைவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கல்முனை மேயராக றகீப் நியமிக்கப்பட்ட பின்னர் பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் குப்பை வரி போன்ற பல புதிய வரிகளை அறிமுகம்செய்து கல்முனை மாநகரில் வாழும் பொதுமக்களை நெருக்குதலுக்கு உள்ளாக்கினார்.

இந்த வரிப் பணத்தை கணினிமயப்படுத்துவதற்காக விசேட மென்பொருள் ஒன்றைக் கொள்வனவுசெய்யுமாறு கல்முனை மேயருக்கு வேலைத் தொழிலாளியான முஜாஹித் கோரிக்கையொன்றை முன்வைக்கின்றார்.

இதற்கமைய, கல்முனை மாநகர சபைக்கான TaxMan எனும் மென்பொருளொன்று மருதமுனையைச் சேர்ந்த Titum எனும் நிறுவனத்திடமிருந்து 2019ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டு 2020 ஜனவரி 01ஆம் திகதியிலிருந்து செயற்படுத்தப்படுகின்றது.

எந்தவித பகிரங்க விலைமனுக்கோரலும் மேற்கொள்ளப்படாமலேயே இந்த மென்பொருள் பொதுமக்களின் பணத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ள விடயம் தெரியவந்துள்ளது.

இதுபோன்ற மென்பொருளொன்றை இலவசமாக வழங்குவதற்காக ஆசிய மன்றத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை கல்முனை மாநகர சபையினால் நிராகரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

Titum நிறுவனத்தின் சார்பில் ஏ.கே.காமிஸ் கலீஸ் என்பவரே இந்த மென்பொருளுக்குப் பொறுப்பாக இருந்துள்ளார். மேற்படி காமிஸ் கலீஸ், Titum நிறுவனத்திலிருந்து தற்போது விலகியுள்ளார்.

இவ்வாறான நிலையில், Titum நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட மென்பொருளுக்கான விளக்கத்தை Syndaks எனும் நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் நிதி மோசடி தொடர்பாக தற்போது இடம்பெறும் விசாரணைகளின்போது காமிஸ் கலீஸ் வழங்கியுள்ளார்.

கல்முனை மாநகர சபைக்கு பொதுமக்களால் செலுத்தப்படுகின்ற வரிப் பணத்தைக் கொள்ளையடிக்கும் நோக்கிலேயே இந்த மென்பொருள் கொள்வனவு செய்யப்பட்டுள்ள விடயம் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளின்போது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், "மக்களிடமிருந்து இலகுவாகவும், முறையாகவும் வரிப் பணத்தை அறவீடுசெய்யும் நோக்கிலேயே இந்த மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டதே தவிர, கொள்ளையடிக்கும் நோக்கிலல்ல" என கல்முனை மேயர் றகீப் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபைக்கான தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள நிலையில், தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கில் இந்த நிதி மோசடியுடன் தான் இணைக்கப்படுவதாக குறிப்பிட்ட கல்முனை மேயர், "குறித்த நிதி மோசடிக்கும் எனக்கும் எந்தவிதத் தொடர்புமில்லை" என்றார்.

''இந்த நிதி மோசடி தொடர்பில் கிழக்கு மாகாண சபையால் முன்னெடுக்கப்படும் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றேன்" என அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த 2006ஆம் ஆண்டுமுதல் இன்றுவரை கல்முனை மாநகர சபையை ஆட்சிசெய்து வருகின்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் இதுவரை எந்தவித அறிக்கையையும் வெளியிடாமை தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இவ்வாறான நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமை தொடர்புகொண்டு வினவியபோது, "எமது கட்சியின் உறுப்பினர்கள் யாராவது இந்த நிதி மோசடியுடன் தொடர்புபட்டிருந்தால் எந்தவித பாரபட்சமுமின்றி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நிதி மோசடி தொடர்பில் நீதியான விசாரணைகளை முன்னெடுக்க அனுமதியளிக்குமாறு கல்முனை மேயருக்கு உத்தரவிட்டுள்ளேன்" என்றார்.

எவ்வாறாயினும், இந்த நிதி மோசடியுடன் சம்பந்தப்பட்ட பலர் இன்னும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. அவர்களை பாதுகாப்பதற்காக தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளை பிரதேசவாத மற்றும் அரசியல் அடிப்படையில் திசைதிருப்ப முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 'வெழ்'மணியம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*இன்று தெற்கில் நிகழும் அரசுக்கெதிரான போராட்டங்களை எப்படி இரும்புக்கரம் கொண்டு அடக்குகிறார்களோ;*

*அதைவிட பலமடங்கு அடக்குமுறைகளை வடக்கில் போராட்டம் நிகழும்போது சிறிலங்கா அரச எந்திரங்கள் பிரயோகித்தன!*

*அந்த நேரத்தில் வடக்கு, கிழக்கில் இருந்து சனநாயக வழியில் போராடிய மாணவர்களும் பொது அமைப்புகளும் தங்களுக்கு நிகழ்ந்த கொடுமைகளை மிகச் சத்தமாக "கத்திச்சொன்னார்கள்".*

*ஆனால் அந்த நேரத்தில் தெற்கு மக்களும் இன்று வீதிகளில் இறங்கிப் போராடும் தரப்பும் அதை " கண்டும் காணாமலுமே" இருந்தார்கள்.*

*ஆனால் அவர்களுக்கு இன்று அதே "அடக்குமுறை" பிரயோகிக்கப்படும்போதுதான் அதன் கொடுமைகளை உணர்கிறார்கள்.*

*இதுவே யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் ஒண்டுதிரண்டு இந்த அரசுக்கெதிராக குரல் கொடுத்தால்; நிச்சயம் பலர் "பயங்கரவாத தடுப்பு" சட்டத்தில் கைதுசெய்யப்படுவார்கள்.*

*பலருக்கு மேல் பொலிஸார் நீண்ட கால வழக்குகளை போட்டு அவர்களை மன உளைச்சலுக்கு ஆளாக்குவார்கள்.*

*புலனாய்வாளர்களின் கண்காணிப்பிலும் விசாரணையிலும் பலர் நாலாம் மாடிக்கு ஏறி இறங்க வேண்டி வரும்.*

*இப்படியே அடுக்கிக்கொண்டே போகலாம்.*

*ஆனால் இவை அனைத்தும் தெற்கில் போராடும் பல்கலைக்கழக மாணவர்கள் மீது முழு அளவில் பிரயோகிக்கப்படுவதில்லை.*

*ஆக;*

*"அரசுக்கெதிராக போராடினால் அரச வேலை இல்லை" என்ற அச்சுறுத்தல் பெரும்பாலும் தெற்கில் வாழுவோரை பயப்பிடுத்தப்போவதில்லை.*

*ஆனால் இந்த "எச்சரிக்கை" நிச்சயம் வடக்கு, கிழக்கில் உள்ளவர்களை மேலும் அச்சுறுத்தும்.*

*"பயங்கரவாதத் தடைச்சட்டம்" உள்ளிட்ட நடைமுறையில் இருக்கும் பல கொடுமையான சட்டங்கள் ஒருதலைப்பட்சமாக வடக்கு, கிழக்கில் வாழும் மக்களைத்தான் அச்சுறுத்துகின்றன. இது கசப்பான உண்மை மட்டுமல்ல, இதுதான் கடந்த கால வரலாறு.*

*எனவே, இப்படியான கொடுமையான சட்டங்களை இல்லாதொழிக்க வடக்கும் தெற்கும் இணைந்து குரல் கொடுக்கவேண்டும் என்ற தேள்வை எழுந்துள்ளது.*

*இத்தனை ஆண்டு காலமாக "பயங்கரவாத தடைச்சட்டத்தால்" பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் குரலெடுத்து "குழறிய"போது;*

*சர்வதேச நாடுகள் உட்பட தெற்கும் கண்களையும் காதுகளையும் இறுக மூடியிருந்தன.*

*இண்டைக்கு ஐக்கிய நாடுகள் சபை சிறிலங்காவில் உள்ள "கடுமையான" சட்டங்களை ஆராய்ந்து அவை அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிரானவை எண்டு புறுபுறுக்கினமாம்.*

*இந்தளவு காலமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை கண்காணிப்பகத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் நாங்கள் போட்ட "கூக்குரல்" கேட்காமல் இருந்தது ஆச்சரியமாக் கிடக்கு.*

*ஐக்கிய நாடுகள் சபை அமர்வில் சிறிலங்காவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் மீளாய்வு நடந்துகொண்டிருக்கிறது.*

*இதில் முக்கிய விடயம் சிறிலங்காவுக்கு அனுசரணை வழங்கும் நாடுகளின் பட்டியலில் இருந்து ஜேர்மனி வெளியேறிவிட்டது.*

*ஆக;*

*ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் இருந்த ஒரே ஒரு நாடும் விலகியிருப்பது தமிழ்மக்களின் நீதிக்கான போராட்டத்தில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய பின்னடைவு.*

*ஆனாலும் சிறிலங்காவின் மனித உரிமை விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் சபை இன்னும் பல "இறுக்கங்களை" கொண்டுவருவதற்கான முன்னேற்பாடுகளை செய்துகொண்டிருப்பதாக அவதானிக்க முடிகிறது.*

*அந்தவகையில் மனித உரிமை விவகாரத்தில் சிறிலங்கா இறுக்கமான நடைமுறைகள் சிலவற்றை தளர்த்தியே ஆகவேண்டும் எனும் இக்கட்டான நிலையில் இருக்கிறது.*

*அப்படியான நிலையில் கொழும்பில் அரசுக்கு எதிராக போராடும் பல்கலைக்கழக மாணவர்கள் மீது கடுமையான சட்டங்களை பிரயோகிப்பது என்பது;*

*ஆளும் ரணில் - ராஜபக்ஷ அரசு வேண்டுமென்றே ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையை சீண்டிப்பார்க்கும் வேலையாகும்!*

*சர்வதேச நாணய நிதியம் பல நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இலங்கைக்கு உதவி செய்ய முன்வந்துள்ளது.*

*இலங்கையில் உள்ள இன முரண்பாடுகளை களைந்து முன்னகர்ந்து செல்லவேண்டிய கடப்பாடு இந்த அரசுக்கு உள்ளது.*

*அந்த நிலையில் தெற்கில் மேலெழும் போராட்டங்களை கண்மூடித்தனமாக "ஒடுக்க" நினைத்தால்;*

*அது மீண்டும் ஒரு அரசியல் பேரழிவை சிறிலங்காவில் ஏற்படுத்திவிடும் ஆபத்துகள் இருக்கின்றன.*

*எனவே;*

*கண்ணாடி வீட்டுக்குள் இருந்துகொண்டு ரணிலும் ராஜபக்ஷவும் "உதைபந்தாட்டம்" விளையாடுவதை நிறுத்திவிட்டு;*

*நாட்டில் ஒரு அரசியல் அமைதியை ஏற்படுத்தி சர்வதேச நாணய நிதியம் தரப்போகும் "உதவிகளை" வினைத்திறனோடு பயன்படுத்தவேணும்.*

*இல்லையேல் மீண்டும் ஒரு "பிரளயம்" காலிமுகத்திடலில் நிகழப்போவதை யாராலும் தடுக்கமுடியாது.*



# நாங்கள் அத்தனை பேரும் உத்தமர்தானா சொல்லுங்கள்!

இலங்கையின் இன்றைய பெரும் பொருளாதார வீழ்ச்சிக்கு இனவாத அரசுகளின் இனவாதம் மேலோங்கிய ஆட்சியும், இனவெறிச் செயற்பாடுகளுமே காரணமென யாராவது கூறினால் அதை நாம் மறுத்துவிட முடியாது. இன்று இலங்கை தேசம் இவ்வளவு சீரழிந்து இருக்கக் காரணம், இலங்கையை ஆட்சிசெய்த மன்னர்கள், அதன் பின்னர் நாட்டை ஆண்ட வெள்ளையர்கள், வெள்ளையர்கள் நாட்டை ஒப்படைத்துவிட்டு சென்ற கொள்ளையர்கள் என்பதே காலம் துல்லியமாக எமக்கு எடுத்துரைத்திருக்கும் உண்மை.

இலங்கை நாட்டில் நிலவிவரும் பெரும் பொருளாதார வீழ்ச்சியும், அத்தியாவசியப் பொருட்களின் கட்டுக்கடங்காத விலையுயர்வும் எமது நாட்டு மக்களை வாட்டி வதைத்து வருகிற செய்தி இலகுவில் யாராலும் கடந்து செல்லும் செய்தியல்ல. இந்த நிலைக்கான காரணம் என்ன என்பதை நாம் அமைதியாக இருந்து சிந்திக்க வேண்டிய காலம் வந்துள்ளது. அடித்தட்டு உழைக்கும் மக்களும், அன்றாடங்காய்ச்சிகளும் உணவுக்கே அல்லல்படுகிற நிலைக்குத் தள்ளப்பட்டு, வறுமையும், ஏழ்மையும் எமது நாட்டில் தலைவிரித்தாடி வறுமையால் சிறுவர்கள் இறந்தார்கள், பசி பொறுக்க முடியாமல் திருடினார்கள், பசி போக்கவே சட்டவிரோத செயலில் இறங்கினார்கள், தற்கொலை செய்துகொண்டார்கள் எனும் செய்திகள் தினமும் இலங்கைர்களுக்கு கவலையைத் தரும் செய்திகளாக வந்துகொண்டிருக்கின்றன.

இறைவனால் ஆசிர்வதிக்கப்பட்ட சகல வளமும், சீரான காலநிலையும், அழகும், அறிவும் நிரம்பிய உலகின் இயற்கை தேசமான எமது நாட்டின் நலன், மக்களின் பொருளாதார மேம்பாடு போன்றவற்றில் துளியும் கவனம் செலுத்தாது, தமிழர்கள் மீதான இனவெறிச் செயற்பாடுகளிலும், முஸ்லிம்களுக்கு எதிரான இனவெறிச் செயல்பாடுகளிலும், இன அழிப்பு வேலைகளிலுமே நாடு சுதந்திரமடைந்த தினம் முதல் கவனம் செலுத்திவந்த கொடுங்கோல் ஆட்சியாளர்களின் கோர முகங்கள் இன்றைக்கு முழுவதுமாகத் தோலுரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. வில்லியம் கோபல்லாவ, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ரணசிங்க பிரேமதாச, டீ.பி.விஜயதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்ரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க என்று நாட்டை ஆண்ட எல்லோரும் இனவாத போக்குடனையே தமது ஆட்சியை கொண்டுநடத்தினர். அதில் சிலர் கூடுதலாகவும், சிலர் மத்திய வரிசையிலும், சிலர் கொஞ்சமாகவும் தமது இனவாத முகங்களைக் காட்டினர் என்பதே யதார்த்தம்.

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் 1964ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது. நாடற்றவர்கள் என்று இந்திய வம்சாவளித் தமிழர்கள் பிரகடனம் செய்யப்பட்டனர். இந்திய வம்சாவளித் தமிழர்களை அடையாளம் காண்பதற்காகவேதான் தேசிய அடையாள அட்டை முறைமை கொண்டுவரப்பட்டது என்பது மறைக்க முடியாத வரலாறு. ஜனாதிபதிகள் மட்டுமன்றி பிரதமர்கள், அமைச்சர்கள், எம்.பிக்கள் என எல்லோரும் இனவாதத்தை வைத்து ஆட்சி நடத்தினர்

இப்படியான சிறுபான்மை மக்கள் மீதான இன வெறுப்பையும், இன ஒதுக்கல் கோட்பாட்டையும் சிங்களவர்கள் மத்தியில் தினம் தினம் விதைத்து, அதன்மூலம், அரசியல் பிரதி பயனும், இலாபமுமடைந்து, அதிகாரத்தைச் சுவைத்த ஆட்சியாளர்களை சிறுபான்மை மக்களை விட சிங்கள மக்களே இன்றைக்கு மோசமான நிர்வாகச் செயற்பாடுகளினால் எதிர்க்கத் தொடங்கியிருப்பதும், இனவாத கோரமுகங்களைக் கொண்டவர்களை சிங்கள மக்களே முன்வந்து ஓட வைத்ததும், ஆட்சியிலிருந்து இறக்கியதுமாக வரலாற்றை இலங்கை தாய் பதிந்துகொண்டுள்ளால். துர நோக்கற்ற அல்லது இலங்கை தேசத்தின் மீது பற்று குறைந்த சிங்கள ஆட்சியாளர்களின் தவறான ஆட்சி முறையினால் எமது நாட்டு மக்கள் இப்போது கடும் பொருளாதார நலிவைச் சந்தித்து, பாதிக்கப்பட்டதால் வீதியில் நின்று போராடுகிற நிலைக்கு கடந்த காலங்களில் தள்ளப்பட்டோம். இன்றும் அந்த நிலை தொடர்கிறது.

தன் நாட்டின் குடிகள் மீது இனஒதுக்கல் பாகுபாட்டைச்செய்து, அவர்களை அந்நியப்படுத்தும் வகையிலான பிரித்தாளும் சூழ்ச்சிகளைக் கையிலெடுத்து, ஒட்டுமொத்த மக்களையும் உள்ளடக்கிய வளர்ச்சியில் கவனம் செலுத்தாது, இனவெறிக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் ஒரு நாடு வீழும் என்பதற்கு சமகாலத்தில் இலங்கை ஒரு சாட்சியாகத் திகழ்கின்றது எனலாம்.

முறைகேடான அரச நிர்வாகத்தினால் பாரிய அளவிலான தொகையில் கடன்களைப் பெற்று, எந்தந்த நாடுகளுக்கெல்லாம் ஓடோடிச்சென்று கடன்களைப் பெற்றார்களோ, இன்றைக்கு அந்த நாடுகளுக்கெல்லாம் கடனாளியாக மாறி அவர்களின் அஜந்தாக்களுக்கு செவி சாய்ப்பவர்களாகவும், செய்வதறியாது திக்குத்திசை தெரியாமல் நிற்கிறார்கள். பங்களாதேஷைக்கூட விட்டுவைக்காமல் கடன்வாங்கித் திண்டாடும் நாடாக இலங்கை இருந்துவருவதும், சர்வதேச நாணய நிதியத்தின் நிதிக்காக "இலவுகாத்த கிளிபோல" காத்திருப்பதும் இலங்கையின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும். உலக நாடுகளுக்கெல்லாம் கடனாளியாக மாறிய மெக்சிகோவின் கொடிய நிலை இலங்கைக்கும் விரைவில் ஏற்படலாமென எச்சரிக்கிறார்கள் பொருளாதார வல்லுநர்கள்.

உள்நாட்டின் அந்நியச்செலாவணி கையிருப்பு குறைந்துவிட்டதால், பெற்றோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்கள், உணவுப்பொருட்கள், அத்தியாவசியப்பொருட்கள், மருந்துகள் என யாவற்றிற்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு, அவை இன்று கட்டுக்கடங்காத அளவில் விலையுயர்ந்துள்ளன. மின்சாரத் தட்டுப்பாட்டால் நாளொன்றுக்கு 7 மணிநேரம் வரை மின்வெட்டு நடைமுறையில் இருந்தமையும், இப்போது மின் கட்டணம் கடுமையாக உயர்த்தப்பட்டுள்ளதும் இலங்கையின் பிழையான பொருளாதார கொள்கையும், அரசியல் காய்நகர்த்தல்களும், இனவாத போக்குகளுமே என்பது தான் உண்மை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் பிழையான அரசியல் முன்னெடுப்புகளினாலும், இலங்கைக்கு உதவும் நாடுகளுடன் இனவாத முகத்துடன் பகைத்துக்கொண்டமையினாலும் பொருளாதார நெருக்கடியுடன் கூடிய இலங்கை பணமதிப்பு வீழ்ச்சி ஏற்பட்டது. விவசாய நடவடிக்கைகளுக்கு இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் விற்பனை தடை செய்யப்பட்டதால் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அண்மைய காலத்தில் நாட்டின் கடன் சுமை அதிகரித்ததால் நாட்டின் பொருளாதாரம் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியது

இலங்கையில் நிலவும் மாபெரும் பொருளாதார வீழ்ச்சிக்கு இன, மத உணர்வுகளைத் துண்டும் அரசின் கொள்கையும் ஒரு காரணம் என்று பிரபல இந்திய பொருளாதார நிபுணர் ஆனந்த் ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ள கருத்து இங்கு கவனிக்கப்பட வேண்டியது. எமது நாட்டில் தற்போது வரலாற்றில் இல்லாத அளவிற்கு மிக கடுமையான பொருளாதார நெருக்கடி நிலவி வருகிறது. இந்த பொருளாதார நெருக்கடி பற்றி எளிதாக சொல்ல வேண்டுமென்றால் டொலருக்கு நிகரான இந்திய ரூபா மதிப்பு 82.00 தற்போது போர் காரணமாக பொருளாதாரத் தடையை எதிர்கொண்டு இருக்கும் ரஷ்யாவின் ரூபேல் மதிப்பு 75.80



J.R. Jayewardene　Ranasinghe Premadasa　D B Wijetunga

Chandrika Kumaratunga　Mahinda Rajapaksa　Maithripala Sirisena

ஆனால் எந்தப் போரையும், உள்நாட்டு மோதலையும் எதிர்கொள்ளாத இலங்கை ரூபாயின் மதிப்பு 324.92.

இன்றைய நிலையில் மிக மோசமான நிலையில் இலங்கை இருக்கிறது. உணவுக்கும், மருந்துக்கும் அல்லாடும் மக்களும், ஐ.எம்.எவ்விடம் கையேந்தும் அவலநிலையில் மிக மோசமான நிலையில் இலங்கை இருக்கிறது. இதனுள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் நடத்தத் தயாராகிறது தேர்தல்கள் ஆணைக்குழு. தேர்தலும் நடந்து முடிந்தால் மரத்தால் விழுந்தவனை யானை ஏறி மிதித்தது போன்றாகிவிடும் இலங்கையின் நிலை. அந்தளவிற்கு இலங்கையின் பொருளாதாரம் கடுமையாக வீழ்ந்துள்ளது. 1970இல் இலங்கையில் நிலவிய பஞ்சத்தை விட மிக மோசமான பஞ்சமாக இப்போது இருக்கும் நிலை பார்க்கப்படுகிறது.

இலங்கை பொருளாதாரம் கொரோனாவிற்கு பின்பாகத்தான் முழுமையாக வீழ்ச்சியடைந்தது என்றும் கூட சொல்ல முடியாது. ஏனென்றால், கடந்த சில வருடங்களாகவே அதாவது கொரோனாவிற்கு முன்பே நாட்டின் பொருளாதாரம் கொஞ்சம் கொஞ்சமாக வீழ்ச்சியை நோக்கித்தான் சென்றுகொண்டு இருந்தது. முக்கியமாக சீனாவிடம் வாங்கிய கடன், சீனாவின் பல்வேறு ரோட் அண்ட் பெல்ட் திட்டத்திற்காக வாங்கப்பட்ட நிதி உதவிகள், அதற்கான வட்டி எல்லாமே இலங்கையின் பொருளாதாரத்தை முடக்கி போட்டது. அதன்பின் வந்த கொரோனா காரணமாக இலங்கையின் பொருளாதாரம் பாதாளத்திற்கு சென்றது. கோட்டா அரசின் ஜனாஸா எரிப்பு விவகாரம், நல்லாட்சி அரசின் சில வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்களின் தடை போன்றவற்றின் மூலம் இன்னும் பலமாக பொருளாதார நிலை வீழ்ச்சியை சந்தித்தது. வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களுக்கும், நாடு கடந்த இலங்கையர்களுக்கும் இலங்கை அரசின் மீதும், அரசின் அனுசரணையுடன் இடம்பெற்ற இனவாத செயற்பாடுகளின் மீதும் இருந்த அதிருப்தியால் அந்நிய செலவாணிகள் பின்கதவால் உண்டியலாக நாட்டை வந்தடைந்தமை இன்னுமொரு காரணமாக நாம் கொள்ளலாம்.

முக்கியமாக கொரோனா சமயத்தில் இலங்கையின் பொருளாதாரம் படுவீழ்ச்சி அடைந்தது. உலக நாடுகள் பல பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொண்ட நிலையில், சுற்றுலாத்துறையை கணிசமாக நம்பி இருக்கும் இலங்கை படுமோசமான வீழ்ச்சியை சந்தித்தது. அதிலும் டொலருக்கு நிகரான இலங்கையின் ரூபாவின் மதிப்பு நாளுக்கு நாள் வீழ்ச்சி அடைந்துகொண்டே சென்றது. கடந்த வருடம் 190 ஐ தாண்டிய இலங்கை ரூபா மதிப்பு இப்போது 340 ரூபாவை தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது. மத்திய வங்கி இதை சரிப்படுத்த பல்வேறு திட்டங்களை அறிவித்தும் எதுவும் கைகொடுக்கவில்லை. வரலாற்றில் கடந்த 75 வருடங்களில் இல்லாத நிலைக்கு பொருளாதாரம் நலிவடைந்துள்ளது. இதனால் ஒரே வாரத்தில் இரண்டு முறை சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை உதவி கேட்டு கையேந்தும் நிலைக்கு சென்றுவிட்டமை கவனிக்கவேண்டிய அம்சமாகும் மட்டுமன்றி ரஷ்யப் போர் காரணமாக இன்னொரு பக்கம் இலங்கையில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் விலை உச்சத்தை தொட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் விலைப்பட்டியலை பார்த்தால் சாதாரண மக்களுக்கு மட்டுமல்ல, பணக்கார மக்களுக்கே தலைசுற்றும் நிலை உருவாகியுள்ளது. இந்த விலைவாசி உயர்வு காரணமாக நிறையபேர் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர். அரச உத்தியோகத்தர்கள் பலரும் விடுமுறை பெற்றுக்கொண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக பறக்கிறார்கள்.



இலஞ்சம், ஊழல் அதிகரிக்கிறது. தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் முக்கிய நகரங்கள் பலவற்றிலும் மக்கள் கடுமையான போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். ஆட்சியாளர்களின் போக்கைக் கண்டித்து அரசின் மக்கள் இனவாதிகளுக்கு சரி நிகரான இனவாதிகளைக் கொண்டுள்ள எதிர்க்கட்சினரும் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். இந்நிலையில்தான் இந்திய பொருளாதார நிபுணரும், எழுத்தாளருமான ஆனந்த் ஸ்ரீனிவாசன் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினையின் இன்னொரு கோணத்தை அணுகி இருக்கிறார். அதாவது, பொருளாதார சரிவு என்பதையும் தாண்டி, எமது நாட்டு அரசின் கொள்கை குறித்தும் அவர் விமர்சனம் செய்துள்ளார். பொருளாதாரம் மீது கவனம் செலுத்தாமல் மத – இனவாதம் மீது கவனம் செலுத்தியதே இந்த சரிவிற்கு முக்கிய காரணம் என்று அவர் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார். இது தொடர்பாக அவர் கருத்து வெளியிட்டபோது, வெகுஜனத்தின் வாழ்வாதார- பொருளாதார மேம்பாடுகளை விட்டு, இன-மத உணர்வுத் துண்டுதலை மட்டுமே பிரதானமென ஓர் அரசு இயங்கினால் இந்நிலையை தவிர்க்கவே முடியாது என்பதற்கு, இலங்கையின் தற்போதைய சூழல் ஓர் எச்சரிக்கை என்று குறிப்பிட்டிருக்கிறார். இலங்கையில் உள்நாட்டுப் போர் நிலவிய போதும், அதற்கு பின்பாகவும் பெரும்பாலும் இனவாதம்தான் அதிக கவனம் பெற்றது. மக்கள் பிரச்சினைகளை பிரசாரத்தில் தலைவர்கள் பேசவே இல்லை என்று தெரிவித்துள்ளார். இது மறுக்கமுடியாத உண்மையாகும்.

இலங்கையில் 2005இலும் மீண்டும் 2019இலும் ராஜபக்ஷ குடும்பம் ஆட்சிக்கு வர இனவாத, மதவாத ரீதியான செயற்பாடுகளும், பிரசாரங்களும் பிரதான காரணமாக இருந்தது. சிங்கள மக்களும் பொருளாதாரத் திட்டங்களை பற்றி யோசிக்காமல் அங்கு இனவாதத்திற்கு வாக்களித்ததன் விளைவு, அவர்கள் ரொட்டிக்கும், தக்காளிக்கும் கையேந்தும் நிலை ஏற்பட்டுள்ளது. இதைத்தான் ஆனந்த் ஸ்ரீனிவாசன் போன்ற பலரும் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். 2005இல் தமிழீழ விடுதலைப் புலிகளை காரணங்காட்டி ஆட்சியைக் கைப்பற்றிய மஹிந்த குடும்பம் மீண்டும் 2010இல் அதே தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்துவிட்டதாகக் காட்டி ஆட்சியைப் பிடித்தது. மஹிந்தவின் 2010-2015 காலத்தில் தமிழ் மக்களின் வெறுப்புக்கு மேலதிகமாக கலகட அத்தே ஞனசார தேரர் தலைமையிலான பொதுபல சேனாவும், இன்னும் பல பேரினவாத இயக்கங்களும் முஸ்லிம்களை தாக்கிக்கொண்டிருந்தன. அதனால் சிறுபான்மையினரின் நன்மதிப்பை மஹிந்த அரசு இழந்து நல்லாட்சி உருவானது. அதில் முஸ்லிம்கள் நேரடியாக பகடைக்காய்களாக பயன்படுத்தப்பட்டதும் ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்றதும் விசாணைகளில் அம்பலமாகி வருகிறது. மீண்டும் இனவாதத் தீயைக் கையிலெடுத்து நாட்டை இனவாதத்தால் பொசுக்கி மீண்டும் 2019இல் ராஜபக்ஷக்கள் ஆட்சிபீடம் ஏறியது வரலாறு. இந்தக் காலப்பகுதியை எடுத்து நோக்கினால் இனவாத வீச்சை பரவலாக அறியலாம்.

இலங்கையர்களாகிய நாம் ஒன்றித்து இதயத்தின் நான்கு அறைகளைப்போல் சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் ஒன்றுபட்டு வாழவேண்டும். இதயத்தின் அறைகளைப்போல் சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் ஒன்றுபட்டு வாழ்ந்த காலம் இலங்கையில் இருந்தது. பிரிக்கப்பட முடியாத அளவுக்கு எல்லோரும் ஒன்றித்து வாழ்ந்தார்கள். ஆனால், தேங்காய்ப்பூவும், பிட்டும் போல் என்று பிழையான உதாரணத்தை அரசியல்வாதிகள் கையாண்டதன் பலனோ என்னவோ இன்று பிரிந்து நிற்கின்றார்கள். அதனால் இலங்கை தீவு இன்று படுகுழியில் வீழ்ந்து கிடக்கிறது. எமது நாட்டில் வாழ்ந்த மூதாதையர்கள் இனங்களுக்கு இடையில் கட்டிக் காத்துவைத்திருந்த ஒற்றுமை இன்றைய சந்ததியினருக்கு இடையில் கட்டி எழுப்பப்பட வேண்டும். அப்போதுதான் நாம் பொருளாதார மேம்பாட்டையும் நினைத்துப் பார்க்க முடியும். இல்லாது போனால் கனவாகவே அது கடந்து போகும்.

மதத்துக்காக வாதாடுகிறார்கள், மதத்துக்காக அடிபடுகிறார்கள். ஆனால், மதங்கள் காட்டுகின்ற பாதையில் நடக்கிறார்களா? எல்லா மதங்களுமே நல்லிணக்கத்தையும், சகவாழ்வையும்தான் போதிக்கின்றன. தென்னிலங்கையில் அழிவு நடந்தது. முள்ளிவாய்க்காலின் அழிவு நடந்தது, ஈஸ்டர் தாக்குதல் நடந்தது, காத்தான்குடி, ஏறாவூர் பள்ளிகளில் படுகொலை நடந்தது அவற்றின் பின்னால் இருந்த வலியை நம்மவர்கள் புரிந்துகொள்ள முடியாமல் இருந்தது. நமக்கு நமக்கு என்று வருகிறபோதுதான் வலி புரிகின்றது. இந்நிலை மாற வேண்டும்.

நாம் இன, மத, பிரதேச ரீதியான சிந்தனையிலிருந்து விடுபட வேண்டும். இலங்கையர்களாக ஒன்றுபட வேண்டும். இன ரீதியாக தேசிய நல்லிணக்கம் ஏற்பட்டாலன்றி எமது நாடு வளர்ச்சியடைய முடியாது. கடந்த காலங்களில் பிரிந்து நின்றதன் பலன்களையே இன்று நாம் பொருளாதார ரீதியாகக்கூட அனுபவிக்கின்றோம். பிரித்தானியாவிடமிருந்து இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரமடைந்தது. ஆனால், நாம் 75 வருடங்களாக பின்னடைந்து காணப்படுகின்றோம். இந்நிலை மாற வேண்டும். இந்நிலையை மாற்ற வேண்டும். ஒற்றுமை எனும் கயிற்றை பலமாக பிடிக்கவேண்டும்.

மத சார்பில்லாத இலங்கையர்களாக ஒன்றித்தால் நாட்டைக் கட்டியெழுப்பி நாளைய நாளை வெற்றியுடன் எதிர்கொள்ளலாம்.

உமர் அலி உஸ்மான்

# காணாமலாக்கப்பட்டோரது உறவினர்கள் சங்கத்தின் தலைவி வவுனியாவில் கைது





தமிழர் தாயக காணாமலாக்கப்பட்டோரின் சங்கத்தின் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா கடந்த வியாழக்கிழமை (09) மாலை வவுனியா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியா ஏ9 வீதியிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு முன்பாக 2210ஆவது நாளாக காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கோரி தாய்மாரால் சுழற்சிமுறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கடந்த 2017ஆம் ஆண்டுமுதல் குறித்த போராட்டம் அப்பகுதியில் கொட்டகை அமைத்து நடைபெற்று வருகின்றது.

குறித்த கொட்டகை அமைந்துள்ள வீதி மின் கம்பத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்விளக்கு இணைப்பு மூலம் மின்சாரம் பெறப்பட்டு போராட்ட கொட்டகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கொழும்பிலிருந்து வந்த மின்சார சபையினர் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதாக தெரிவித்து குறித்த போராட்ட கொட்டகையில் இருந்த தமிழர் தாயக காணாமலாக்கப்பட்டோர் சங்கத் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதாவுக்கு எதிராக பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து, அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் வாக்குமூலம் பதிவுசெய்த வவுனியா பொலிஸார், அவரை கைதுசெய்து பொலிஸ் நிலைய தடுப்புக் காவலில் தடுத்து வைத்துள்ளதுடன், நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, வடக்கு மாகாண சபை இயங்கிய காலத்தில் மின்சார சபையின் அனுமதியுடனேயே தாம் மின்சாரத்தைப் பெற்றதாகவும், திருத்த வேலைகளும் மின்சார சபையாலேயே மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்துள்ள காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தாம் சட்டவிரோதமாக மின்சாரம் பெறவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

# காலதாமதமான 36 ஆயிரம் மின்சார இணைப்புகளையும் 6 வாரங்களுக்குள் பெற்றுக்கொடுக்க விரைந்து நடவடிக்கை

## மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர



இலங்கை மின்சார சபையில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக காலதாமதமான 36 ஆயிரம் புதிய மின்சார இணைப்புகளையும் 6 வாரங்களுக்குள் பெற்றுக்கொடுக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுமென மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கடந்த வியாழக்கிழமை (09) பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதுள்ள நிதிப்பிரச்சினை காரணமாக புதிய இணைப்புகளை வழங்குவதற்கு உபகரணங் களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அண்மைக்காலமாக மின்சாரக் கட்டணத்தை அதிகரித்திருப்பதால் மின்சார சபையின் நிதிப் பிரிவைப் பலப்படுத்தியதன் மூலம் புதிய இணைப்புகளை வழங்கமுடியும்.

புதிய மின்சார இணைப்புகளைப் பெறுவதற்கு பெருமளவிலானவர்கள் பதிவுசெய்துள்ள போதிலும் இணைப்புகளை வழங்குவதில் பாரிய காலதாமதம் ஏற்படுவதாக உறுப்பினர்கள் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், இலங்கை மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட அமைச்சின்கீழ் காணப்படும் நிறுவனங்களின் செலவீனங்களை முடியுமானளவு கட்டுப்படுத்துவதற்கு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

QR குறியீட்டின் மூலமான எரிபொருள் கோட்டாவைப் புதுப்பிப்பதற்கான தினம் செவ்வாய்க்கிழமையாக மாற்றப்பட்டிருக்கின்றது. சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பணியாற்றும் எரிபொருள் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்படும் மேலதிக கொடுப்பனவான 20 மில்லியன் ரூபாவை சேமிக்கும் நோக்கிலேயே இந்த மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளோம்.

அத்துடன், இந்த நிறுவனங்களுக்குப் புதிதாக பணியாளர்கள் நியமிக்கப்பட மாட்டாது. தற்போது பணிபுரியும் ஊழியர்களின் நிர்வாகத்தினூடாக செலவுகள் முடிந்தவரை குறைக்கப்பட்டுள்ளது.

ஸ்மார்ட் மின்மானி வாசிப்பு விரைவில் அறிமுகப்படுத்தப்படவிருப்பதாகவும், தெஹிவளை - கல்கிஸை மாநகரசபை பகுதியில் இதன் முன்னோடித் திட்டத்தை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 31,000 வாடிக்கையாளர்களுக்கு ஸ்மார்ட் முறையில் மின்சாரச் சிட்டைகள் வழங்கப்படும். அதன்படி, வாடிக்கையாளர் மின்சாரச் சிட்டைகளை குறுஞ்செய்தி மூலம் பெற்றுக்கொள்வார்கள்.

மேலும், 2021ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரால் வெளியிடப்பட்ட 2313/47ஆம் இலக்க மற்றும் 2313/47ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்களுக்கும் இங்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர்களான சந்திம வீரக்கொடி, நாலக பண்டார கோட்டேகொட மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# பெரும்போக நெற்செய்கைக்குத் தேவையான நீரை மார்ச் 20 முதல் விநியோகிக்கத் தீர்மானம்

2023ஆம் ஆண்டுக்கான பெரும்போகத்தில் நெல் மற்றும் மேலதிக பயிர்ச்செய்கைகளுக்காக மார்ச் 20ஆம் திகதிமுதல் ஏப்ரல் 20ஆம் திகதிவரை மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசனத்துக்கான நீரை வெளியிட முடியுமென நீர்ப்பாசனத் திணைக்களம் விவசாய அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

தற்போது மகாவலி அதிகாரசபையின் கீழுள்ள நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவு 77 வீதமாக உள்ளதாகவும், 66 வீதம் வரை பயிர்ச்செய்கைக்கு தண்ணீர் விடுவதற்குத் தயாராக இருப்பதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள தண்ணீர் வசதியின்கீழ், நெற்செய்கைக்கு 75 சதவீதமும், மேலதிக பயிர்ச்செய்கைக்கு 25 சதவீதமும் தண்ணீர் வழங்க முடிவுசெய்யப்பட்டது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க, இராஜாங்க அமைச்சர்களான டி.பி.ஹேரத், காதர் மஸ்தான், மொஹான் பிரியதர்ஷன் டி சில்வா, ஷசீந்திர ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன. அனைத்து மாவட்ட விவசாயப் பிரதிநிதிகளும் இதில் பங்கேற்றனர்.

# வெட்டுக்காயங்களுடன் இளைஞரின் சடலம் மீட்பு

## பூவரசங்குளத்தில் சம்பவம்



வவுனியா பூவரசங்குளம் மணியர்குளம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை (09) இரவு வெட்டுக்காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மணியர்குளத்தின் அணைக்கட்டினை அண்மித்த பகுதியில் கழுத்து பகுதியில் வெட்டுக்காயங்களுடன் சடலம் காணப்படுவதாக பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பூவரசங்குளம் பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் நித்தியநகர் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய சக்திவேல் யசோதரன் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மர்மமான முறையில் மரணங்கள் அதிகரித்து செல்வதுடன் மூன்று நாட்களுக்கு முன்னர் வவுனியா கற்குழி பகுதியில் ஒரே குடும்பத்தினை சேர்ந்த நால்வர் உயிரிழந்த முறையில் சடலமாக மீட்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ். மாநகர சபையின் இடைக்கால முதல்வர் தெரிவு கூட்டத்துக்கான நிறைவெண் இன்மையால் ஒத்திவைப்பு



யாழ்ப்பாணம் மாநகர சபையின் எஞ்சியுள்ள பதவிக் காலத்துக்குப் புதிய இடைக்கால முதல்வரைத் தெரிவுசெய்வதற்கான கூட்டம் நேற்று முன்தினம் (10) காலை 10.00 மணிக்கு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் தலைமையில் ஆரம்பமாகியது.

எனினும், கூட்டத்துக்குத் தேவையான நிறைவெண் இல்லாத காரணத்தால் கூட்டம் 10.30 மணிக்கு ஆரம்பமாகும் என்று உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மணிவண்ணன் தரப்பு உறுப்பினர்கள் சிலர் சபா மண்டபத்தினுள் வராமல், பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்தனர். ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் சபா மண்டபத்துக்கு வெளியே உறுப்பினர் அறையில் அமர்ந்திருந்தனர்.

உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்தபடி மீண்டும் 10.30 மணிக்குக் கூட்டம் ஆரம்பமாகிய நேரத்தில் 19 உறுப்பினர்கள் மட்டுமே சபா மண்டபத்தினுள் பிரசன்னமாகியிருந்தனர்.

இந்நிலையில், கூட்டத்துக்கான நிறைவெண் இல்லாத காரணத்தால் கூட்டம் ஒத்திவைக்கப்படுவதாகவும், தெரிவுக்கான புதிய திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்றும் குறிப்பிட்ட வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் கூட்டத்தை ஒத்திவைத்தார்.

யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட், கடந்த 28ஆம் திகதி சமர்ப்பித்த 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பிலும் அது பெரும்பான்மை இல்லாமல் தோற்கடிக்கப்பட்டதன் காரணமாக பதவி இழந்திருந்துள்ளார்.

அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் கடந்த வெள்ளிக்கிழமை (10ஆம் திகதி) கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

45 உறுப்பினர்களைக்கொண்ட யாழ். மாநகர சபையில் ஒரு உறுப்பினர் உயிரோடு இல்லாத காரணத்தினால், மீதமுள்ள 44 உறுப்பினர்களில் 22 பேர் கூட்டத்துக்கு வந்தால் மட்டுமே கூட்டத்தை நடத்தி, புதிய முதல்வர் ஒருவரைத் தெரிவுசெய்ய முடியும்.

புதிய முதல்வர் பதவிக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாநகர சபை உறுப்பினருமான சொலமன் சூ.சிறிலை நியமிப்பதற்காக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பிரேரிக்கவுள்ளதாகக் கடந்த வாரம் கட்சி முடிவு செய்திருப்பதாக அதன் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா அறிவித்திருந்தார்.

இன்றைய கூட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்கள் 9 பேரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் 3 பேரும், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் 2 பேரும், ரெலோ, புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றில் ஒவ்வொரு உறுப்பினர்களுமாக 19 பேர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளைப் பூரான் கடிப்பதால் ஆபத்து; மன்னார் மாவட்ட மக்களுக்கு எச்சரிக்கை

வெள்ளைப் பூரான் கடிப்பதால் ஏற்படும் விஷம் உயிராபத்தை ஏற்படுத்துவதில்லை. எனினும், வெள்ளைப் பூரான் தொடர்பில் அவதானம் தேவை - என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெள்ளைப் பூரான் கடிப்பதால் ஏற்படும் விஷம் உயிராபத்தை ஏற்படுத்துவதில்லை. அண்மையில் வெள்ளைப் பூரானால் கடிக்கப்பட்ட சிறுகுழந்தை ஒன்று வைத்தியசாலையில் சேர்க்க தாமதமாகியமையால் உயிரிழந்தார். மற்றொரு குழந்தை ஆபத்தான நிலையில் உள்ளது.

இதன் விஷம் நரம்பு, இதயம், சிறுநீரகம், குருதி என்பவற்றில் பாதிப்புகளை ஏற்படுத்தும். பரிவு, பராபரிவு நரம்பு மண்டலங்களை மிகையாக தொழிற்பட வைக்கும். இதய அதிர்ச்சியை ஏற்படுத்தும். யாழ்ப்பாணத்தின் வலி. வடக்கு, கிழக்கு பகுதிகளில் அதிகளவில் கண்டறியப்பட்ட இந்த உயிரினம் முதன்முறையாக நானாட்டான், வங்காலை பகுதிகளில் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, வெள்ளைப் பூரான் அல்லது இனந்தெரியாத ஜந்துகளால் கடியுண்டவர்களை தாமதிக்காமல் அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்ப்பதன் மூலம் உயிரிழப்புகளை தவிர்த்துக் கொள்ள முடியும் - என்றார்.

## பிதுருதலாகல சரணாலயத்திலிருந்து நபரொருவரின் சடலம் கண்டெடுப்பு

நுவரெலியா, பிதுருதலாகல சரணாலயத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த நபர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது இந்த நபரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

குறித்த நபர் நேற்று காலை பிதுருதலாகல காட்டுப்பகுதிக்கு விறகு வெட்டச்சென்று வீடு திரும்பாத நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் 72 வயதுடையவர் எனவும், சடலம் நீதவான் விசாரணைக்காக பொலிஸ் பாதுகாப்பில் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

# சவுக்கடி பகுதியில் 50 கிலோ கஞ்சா மீட்பு



வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் - சவுக்கடி பகுதியிலிருந்து 50 கிலோ, 463 கிராம் எடையுடைய கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், இந்த கஞ்சா பொதிகள் சவுக்கடி காட்டுப் பகுதியில் ஓலைகளால் மறைத்துவைக்கப்பட்ட நிலையில் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. எனினும், சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

மீட்கப்பட்ட கஞ்சா பொதிகள் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளன. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போலி நாணயத்தாள்களுடன் புதுக்குடியிருப்பில் ஒருவர் கைது

புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

போலி நாணயத்தாள்கள் அச்சிடப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேகநபரிடம் பணம் கையிருப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

700 போலி 5000 ரூபா நாணயத்தாள்களுடன் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

போலி நாணயத்தாள்களை அச்சிட பயன்படுத்தப்பட்ட இயந்திரமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட 40 வயதுடைய சந்தேகநபர் திருகோணமலை பகுதியைச் சேர்ந்தவர் எனவும் அவர் இன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# தலைமன்னாரில் 3 கிலோ கஞ்சாவுடன் மூவர் கைது



தலைமன்னார் பகுதியில் கடற்படையினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது 03 கிலோவுக்கும் அதிகமான (ஈரமான எடை) கேரள கஞ்சாவை வைத்திருந்த 03 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

புலனாய்வுப் பிரிவினரின் தகவலின் அடிப்படையில் தலைமன்னார் பகுதியில் சந்தேகத்திற்கிடமான 03 நபர்களை சுற்றிவளைத்த தரப்பினர், அவர்களிடமிருந்து சுமார் 03 கிலோ 295 கிராம் (ஈரமான எடை) கேரள கஞ்சாவை கண்டுபிடித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா விற்பனைக்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டு 02 பொதிகளில் இருந்தது.

இதற்கிடையில், பிடிபட்ட கேரள கஞ்சாவின் மொத்த பெறுமதி மில்லியன் ரூபாவாகும். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தலைமன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள். கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு கல்வி கற்பதற்கான கட்டடம் ஒன்றை அமைத்துத் தரக் கோரி ஆர்ப்பாட்டம்

## கெம்பியன் நகரப்பகுதியில் முன்னெடுப்பு





(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

பொகவந்தலாவை, கெம்பியன் நகரப்பகுதியில் கல்வி கற்பதற்கு ஆரம்பப்பிரிவு கட்டடம் ஒன்றை அமைத்துத் தரக் கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, ஏற்பட்ட அமைதியின்மையினால் இரண்டு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் (10) காலை பொகவந்தலாவை கெம்பியன் நகரில் குறித்த பகுதிக்கு ஆரம்பப்பிரிவு கட்டடத்தை கோரி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தில் 200இற்கும் மேற்பட்ட பெற்றோர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதில் ஒருசாரார் ஆர்ப்பாட்டத்தினை நடத்த வேண்டாமென இடையூறு விளைவித்திருந்த சந்தர்ப்பத்தில் ஆர்பாட்டக்காரர்களுக்கும் குறித்த ஒரு நபருக்கும் இடையில் அமைதியின்மை ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து தாக்குதல் சம்பவங்களும் பதிவாகியதோடு, பொகவானை உப மின் உற்பத்தி நிலையத்தில் தொழில்புரியும் நபர் ஒருவர் கத்தி ஒன்றை எடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நபர் ஒருவரை குத்துவதற்கு முயற்சித்தபோது பொலிஸார் இருவரையும் மடக்கிப்பிடித்து கைதுசெய்துள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், கெம்பியன் தமிழ் மகா வித்தியாலயத்திற்கு நாம் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரைக்கும் எமது பிள்ளைகளை அனுப்பினோம். ஆனால், கெம்பியன் தமிழ் மகா வித்தியாலயம் ஆயிரம் பாடசாலை வேலைத்திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டதன் பின்னர் ஆரம்பப்பிரிவு இடைநிறுத்தப்பட்டதால் நாம் பிள்ளைகளை கூடியளவிலான பணம் செலவுசெய்து தூரபிரதேசத்திற்கு அனுப்பவேண்டிய நிலையிலுள்ளோம்.

கெம்பியன் பகுதியில் ஆரம்பப்பிரிவு பாடசாலைக்கான கட்டடம் இருக்கின்றபோதிலும் குறித்த கட்டடத்தினை புனர்நிர்மாணம் செய்து தருமாறு மத்திய மாகாண ஆளுநர் மற்றும் ஹட்டன் வலயக்கல்விப் பணிமனைக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளபோதிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வெகுவிரைவில் குறித்த கட்டடத்தினை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர்.

# மலர்களைப் பறிக்காதீர்!




தங்கராஜா யுவராஜ்

அன்பு என்ற ஒற்றை சொல்தான் இந்த முழு உலகத்தையும் ஆட்கொண்டுள்ளது. இந்த ஒற்றை வார்த்தைக்குள் ஆயிரம் அர்த்தங்கள் ஒழிந்து கிடக்கின்றன. இந்த வார்த்தை சிலருக்கு அளவுக்கு அதிகமாக கிடைப்பதால் அதன் பெறுமதி தெரியாமல் இருக்கும். அதேவேளை, மறுபுறம் அதற்கு அலைந்துத் திரியும் ஒரு கூட்டமும் இருக்கத்தான் செய்கிறது.

ஆனால், இந்த நவீன உலகில் இந்த அழகான வார்த்தையை சிலர் அர்த்தமற்றதாய் ஆக்கிவிட்டனர். அன்பாய் பழகுவதாக, பார்த்துக்கொள்வதாக கூறி பணம் படைத்தவரிடம் பணமும் இன்னும் சிலரிடம் மனம், உடல் ரீதியான துன்புறுத்தல்களும் ஏற்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு அன்புக்காய் ஏங்குவோரிடமே அல்லது அவர்களை இலக்கு வைத்தே பல முறைகேடான சம்பவங்கள் நடந்து வருகின்றன. ஆனால், இந்தச் சம்பவம் சற்று வித்தியாசமானதும் கொடூரமானதுமாகும்.

ஆம்.. இது அன்புக்காய் ஏங்கும் சில சிறார்கள் பற்றியதானது. இரத்தினபுரி நகரம் இலங்கையின் எழில் கொஞ்சும் மலையகத்தின் சிவனொளிபாதமலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. இதன் ஒரு பிரதேசமான இறக்குவானை பகுதியில் கடந்த 2018ஆம் ஆண்டு செப்டெம்பர் 16ஆம் திகதி அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் திறந்து வைக்கப்பட்ட சிறுவர் இல்லம் ஒன்று இயங்கி வருகின்றது.

அந்த சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டுவரும் சிறுவர், சிறுமிகளில் 10 பேரை தொடர்ச்சியாக பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில், குறித்த சிறுவர் இல்லத்தின் காப்பாளரின் கணவரான 53 வயதான இறக்குவானை பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியராக பணியாற்றும் ஒருவர் கடந்த மாதம் 24ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின்போது சந்தேகநபர் சிறுவர் இல்லத்தில் வைத்து பத்து சிறுமிகளை தொடர்ச்சியாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அத்தோடு, அந்த சிறுவர் இல்ல காப்பாளர் இல்லாத நேரத்தில் அவரது கணவரான குறித்த நபர் இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட அவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து, இம்மாதம் 8ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

அத்தோடு, அந்த சிறுமிகளில் ஒரு சிறுமிக்கு 18 வயது நிரம்பியதையடுத்து, அவர் அந்த சிறுமியை தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளமையும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ள நிலையில், குறித்த சிறுமிகள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார்களா என்பது தொடர்பிலான வைத்திய பரிசோதனைகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் நடத்திச் செல்லப்படும் இந்த சிறுவர் இல்லத்தின் காப்பாளராக கடமையாற்றிய பெண், சம்பவத்தை அடுத்து பணிநீக்கம் செய்யப்பட்டதையடுத்து அவர் கடந்த 01ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, அதே இறக்குவானை பகுதியிலிருந்து 15 வயதுடைய சிறுமியை முச்சக்கர வண்டியில் கடத்திச்சென்று பாழடைந்த வீட்டிற்கு அழைத்துச் சென்று, பலவந்தமான முறையில் மது அருந்த வைத்துவிட்டு பாலியல் பலாத்காரம் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட நபரை பொலிஸார் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இறக்குவானை பொலிஸ் பிரிவில் வசிக்கும் 24 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையாவார். சந்தேக நபர் சிறுமியை பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்திய பின்னர், அவரது இரண்டு நண்பர்களும் குறித்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக கூறப்படும் ஏனைய இருவரையும் கைது செய்தனர். முதலில் கைது செய்யப்பட்ட 24 வயதுடைய சந்தேக நபருடன் குறித்த சிறுமி காதல் உறவில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் காதலன் என்று கூறிக்கொண்ட 24 வயது இளைஞன், முதலில் சிறுமிக்கு பலவந்தமாக மது வழங்கிவிட்டு, பாலியல் பலாத்காரம் செய்ததாகவும் பின்னர் அவரது இரண்டு நண்பர்களும் அந்த சிறுமியை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேபோன்று அன்மையில், யாழ்ப்பாணம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி, 5ஆம் திட்ட பகுதியில் ஆபாச காணொளியை காண்பித்து தனது 6 வயதான மகளை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 33 வயதான குடும்பஸ்தர் ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கூலி வேலை செய்து வரும் இந்த சந்தேகநபர், ஹெரோயின் போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனக் கூறப்படுகிறது. இது குறித்து அவரது மனைவி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டில், தனது 6 வயதான மகளுக்கு கையடக்க தொலைபேசியில் ஆபாச காணொளிகளை காண்பித்து, துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயற்சித்துள்ளதாக தெரிவித்தார்.

இதையடுத்து, சிறுமி மருததுவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது, அந்த சிறுமியின் உடலில் சிறு காயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அதற்கமைய, சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, வட்டவளை – ரொசெல்ல பகுதியில் உள்ள விகாரையொன்றின் பிக்கு ஒருவர் அதே பகுதியில் வசிக்கும் 13 வயது சிறுவனை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுவனின் தந்தை பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் தன்னை விகாரைக்கு அழைத்து துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக சிறுவன் தந்தையிடம் கூறியதையடுத்து, இதனை தொடர்ந்து பாதிக்கப்பட்ட சிறுவனின் தந்தையால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட சிறுவனை டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதித்து மருத்துவ அறிக்கை பெறப்பட்டதையடுத்து, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பிக்குவை ஹட்டன் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்வாறான சம்பவங்கள் இலங்கை மாத்திரம் அல்ல, இந்த உலகம் முழுவதிலும் அன்றாடம் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இதில் சில சம்பவங்கள் வெளிச்சத்திற்கு வந்தாலும் இது போன்ற பல சம்பவங்கள் இந்த சமூகத்தாலும் சிலரின் அடக்குமுறையாலும் மறைக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் விடுகின்றன.

குறிப்பாக, இலங்கையில் இதற்கு முன்னரும் பாரதூரமான சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்று அதற்கான தண்டனைகள் வழங்கப்பட்டே வருகின்றன. சிறுவர் துஷ்பிரயோகங்கள் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில், அந்த துஷ்பிரயோகத்திற்கு அமைய பல ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்படக்கூடிய சாத்தியம் உள்ளதாக சட்டத்தரணிகள் தெரிவிக்கின்றனர்.

சிறுவர் துஷ்பிரயோகமொன்று உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் 5 வருடங்களுக்கு குறையாமல் 10 வருடங்களுக்கு அதிகமாகாமல் அபராதத்துடன் தண்டனை வழங்கப்படும். எனினும், பாரதூரமான சிறுவர் துஷ்பிரயோகமாக இருக்கும் பட்சத்தில், 7 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரையான தண்டனை வழங்கப்படும் வாய்ப்புகளும் உள்ளன.

அந்த வகையில், திருகோணமலை - மல்லிகைத்தீவு பகுதியில் இடம்பெற்ற இரு சிறுமிகள் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதையடுத்து, அந்த குற்றவாளிக்கு நீதிபதி இளஞ்செழியனினால் 20 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டமை இதற்கு சிறு உதாரணம். இலங்கை வரலாற்றில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் அதிகபட்சமாக வழங்கப்பட்ட சிறைத்தண்டனை இதுவாகும்.

எனினும், நபர் ஒருவரினால் துஷ்பிரயோகம் செய்யப்படும் சிறார்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இத்தண்டனை காலம் அதற்கேற்ற வகையில் அதிகரிக்கப்படும் சாத்தியமும் இலங்கை சட்டத்தில் காணப்படுகிறது.

இவ்வாறான சம்பவங்களுக்கு ஒரே தடவையில் தண்டனை அனுபவிக்கும் வகையில் தண்டனை வழங்கப்படாது. தனி தனி சிறார்களின் எண்ணிக்கைக்கு அமைய, தண்டனையும் தனித்தனியாக வழங்கப்படும்.

அதேபோன்று, சிறுவர் துஷ்பிரயோகத்தை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டில் கைதாகும் சந்தேகநபர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில், அந்த நபருக்கு 5 முதல் 7 வருடங்கள் வரையான சிறைத் தண்டனை விதிக்கப்படும் சாத்தியம் காணப்படுகிறது.

மறுபுறம், நாட்டில் சிறுவர்களுக்கு பாடசாலை வேன்கள் மற்றும் பஸ்களில் பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

மாணவர்களை ஏற்றிச் செல்லும் வேன் மற்றும் பஸ்களின் சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் மேற்கொள்ளும் பல்வேறு பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளாக அதிகார சபையின் தலைவரான சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

சில சிறிய மாணவர்கள் பாடசாலை முடிந்த பின்னரும், மேல் வகுப்பு மாணவர்கள் வரும் வரை பாடசாலை வாகனங்களில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. அந்தச் சூழ்நிலைகளில் சிறார்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் சம்பவங்கள் சமீபகாலமாக அதிகரித்துள்ளதாகவும், எனவே, பெற்றோர்கள் பிள்ளைகள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று இலங்கையில் பல்வேறு காரணங்களால் சுமார் 3,43, 000 இற்கும் மேற்பட்ட சிறார்கள் பாதுகாப்பற்ற முறையில் வாழ்வதாக ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள மொத்த சிறார்களின் 10 வீதமானோர் இவ்வாறு பாதுகாப்பற்ற முறையில் வசிப்பதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. பொருளாதார மற்றும் பல்வேறு சமூக காரணங்களால் சிறுவர்கள் பாதுகாப்பற்ற சூழலை எதிர்கொண்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான சிறுவர்கள் அநாதை இல்லங்களுக்கு செல்வதைத் தடுப்பதற்கும் வேறு மாற்று முறைகள் மூலம் அவர்களை பராமரிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், தேசிய மாற்று பாதுகாப்பு அமைப்பின் கீழ் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும்இ இவ்வாறு சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவோருக்கு சட்டத்தின் பிரகாரம் உயர்ந்த பட்சத் தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என சிறுவர்கள் நலன் தொடர்பான ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையிலேயே தற்போதைய சிறுவர்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றார்கள். சிறுவர்களுக்கு வீட்டுச்சூழல், பாடசாலை சூழல் உள்ளிட்ட பல இடங்களில் இவர்களுக்கு தீங்கு விளைவிக்கப்படுகின்றது. தனது பெற்றோர், பாதுகாவளர்களுடன் இருக்கும் சிறுவர்களுக்கே பாதுகாப்பு இல்லை என்ற நிலை உறுவாகியுள்ள நிலையில், எவரின் பாதுகாப்பும் இல்லாது வாழும் சிறுவர்களின் நிலை குறித்து பொறுப்பேற்கப் போவது யார்?






## (கொழுந்து மலையு டொய்லட் வசதியு)

**கலை :** சரசக்கா போன கெழம மகளீர்தினம் வந்துச்சி தெரியுமா?

**சரசு :** அட போ புள்ள.. வருசோ முன்னூத் தறுவத்தஞ்சி நாளு அந்த தினோ இந்த தினோனு வந்துகிட்டுத்தா இருக்கு. நம்பலு இப்புடியே பொளம்பிக்கிட்டுத்தா இருக்கோ. ஆனா விடிவுத்தா வரமாட்டேங்கிது.

**கலை :** அது தெரிஞ்ச கதத்தானே... அது இல்லக்கா நம்ப எஸ்டேட்டுலத்தா ஒன்னு இல்ல. ஆனா மத்த மத்த எஸ்டேடுல அத பெருசா செஞ்சிருக்காங்க. என்னானமோ போட்டியல்லா வச்சி பரிசலா குடுத்துருக்காங்க புள்ள..

**சரசு :** எங்க புள்ள ஒவ்வரு கொம்பனியும் ஒவ்வருமாதி அதலா நடத்துனா அத வச்சி பலவிதமா சொல்லி காட்டுவாங்களே.. நம்ப எஸ்டேட்டுல நடக்காம இருக்கதே நல்லோ புள்ள.. எங்க நம்ம மல கங்காணிய காணோ?

**கலை :** கங்காணி பனிய மலயில போல.. நீ சொல்றது சரித்தாக்கா சும்மாவே அதசெஞ்சோ இதசெஞ்சோனு சொல்லிகாட்டுவாங்க, அதவச்சி நல்லா வேலவாங்கலாந்தானே..

**கங்காணி :** "ஏ புள்ளங்கலா கொழுந்து கொறவு நாளக்கி மேக்கணக்குக்கு எஸ்டேட்டுக்கு போய்த்தா எடுக்கனுபோல" கரட்டெல இல்லாம பாத்து கிள்ளி எடுங்கடி..

**கலை :** கொழுந்து இல்லனு தெரியுந்தானே.. இதுல பாத்துகிள்ளி எடுக்கனுனா எங்க போறது? என்ன நெனச்சிகிட்டு இருக்காங்களோ தெரியல..

**கங்காணி :** என்னா புள்ள கலை மொனங்குற?

**கலை :** அது ஒன்னு இல்லங்கய்யா.. கொழுந்து கொறவுத்தானே றாத்த எப்புடி போட்றதுனு கேட்டேங்கய்யா..

**கங்காணி :** ஆமா.. ஆமா.. கொழுந்து பொலப்பொலனு இருந்தா அப்புடியே றாத்தய போட்டுட்டுத்தா மறுவேல.. ஏன்டி சும்மா வாயகிண்டிக்கிட்டு நானே கொழுந்து கொறவுனு யோசிச்சிக்கிட்டு இருக்கே..

**சரசு :** ஆமாங்கயா.. எங்களுக்கு யோசனையாத்தா இருக்கு. றாத்த கொறஞ்சா அடுத்தமாச சம்பளமு இருக்காது.. சோத்துக்கு சிங்கியடிக்கனுமோ தெரியல..

**கலை :** அதாப்புள்ள நாடு போற நெலமயில வெலவாசிய நெனச்சாலே பயமா இருக்கு இதுள பலப்பிரச்சன..

**கங்காணி :** இந்தா புள்ளங்களா ஒங்ககிட்ட கதகுடுத்தாலே இதுத்தா.. பொளப்ப பாருங்கடி.. நாளக்கி மூனுவேள திங்கனுந்தானே? கதய விட்டுட்டு வேலய பாருங்கடி..

**கலை :** சரிதாங்கய்யா என்னத்தா செய்ய நம்ப. வாங்கிவந்த வரோ அப்புடி.. பெரிய பெரிய ஒப்பிசுலயிலா என்னான்ன சலுக குடுக்குறாங்க.. பொம்பள ஆளுங்களுக்கு விசேசமா நெறய சலுக கெடக்குதாமே..

**கங்காணி :** ஆமா.. மெடத்துக்கு குடுக்குற சலுக பத்தாதோ? நம்ப எஸ்டேட் கம்பனி பரவாலனு சொல்லு.. வேற வேற எஸ்டேட்டுக்கு போய்பாருங்க.. ஒழக்கிறவங்களுக்கு கெடக்க வேண்டிய சலுகயெல்லா யார் யாரோ அனுபவிச்சிக்கிட்டு இருக்கானுங்க..

**கலை :** என்னாங்கயா பெரிய சலுக? அவசியமான எதுவுமே இங்க இல்ல. சும்மா எம்மனக்கி செய்றாங்க. நீங்க எப்பயாவது யோசிச்சி இருக்கிங்களா? இந்த வெட்டவெளியில பொம்பலாளுங்க வேல செய்றோ.. பொம்பலாளுங்களுக்கு எவ்வளவோ ஒடம்புசாந்த பிரச்சன இருக்கு.. அவசரத்துக்கு ஒதுங்குறதுக்கு டொய்லட்வசதி இருக்கா?

**சரசு :** சரியா கேட்டப்போ... அவங்களு மனுசங்கதானுங்களே? பாதிநேரோ இந்த மலக்காட்டுலத்தா கெடக்குறோ.. இந்த வெட்டவெளியில பொம்பலாளுங்க.. நாங்க என்னாங்கய்யா செய்வோ.. சொல்றதுக்கு கூச்சமா இருந்தாலு ஒவ்வரு பொம்பலாளுங்க மனசுலயு சொல்லமுடியாத பல கத இருக்குதுங்கய்யா.. இந்த புள்ளசரி பயப்புடாம கேக்குதுங்கய்யா..

**கலை:** அதுமட்டுமா, எத்தன பொம்பலாளுங்க. மாசாமாசம்வார வயித்துவலியில வெளியில காட்டிக்காம சொல்ற கிலோவ தூக்கிக்கிட்டு காடு மல ஏறிவாராங்க? அதுக்குசரி, கொஞ்சம் நிம்மதியா இருக்க எதாவது சலுக இருக்குதுங்களா? நீங்க ஆம்பலாளு.. ஏ அப்பா மாதி.. அதுதாங்கய்யா சொல்றே.. உங்க வீட்டுலயு பொம்பலபுள்ளங்க இருக்குதுங்கதானேங்கய்யா? எவ்வளோ வயித்தெரிச்ச தெரியுமாங்கய்யா? இதலா ஏங்கயா கொம்பனிகாரவுங்க நம்ப ஓட்டுபோட்ட சாமிமார்களுக்கு வெளங்கமாட்டேங்கிது?

**கங்காணி :** என்னாபுள்ளங்க புதுசு புதுசா ஒவ்வனு சொல்றீங்க? கேக்கும்போது எனக்கு யோசனையாதா இருக்குது புள்ளங்க.. எங்கபோய் இதப்பத்தி நா சொல்றது? நா பொய்சொன்னா என்னான்ன கதகட்டுவாங்களோ தெரியுந்தானே?

**கலை :** ஐயா இதப்பத்தி எங்கயு போய் சொல்ல தேவலங்கய்யா.. இது எல்லாருக்கு தெரிஞ்ச விசயோந்தானே. ஆனா.. எங்களுக்கு தேவையான விசயங்களப்பத்தி எங்கயுமே கண்டுக்க மாட்றாங்க.. மனுசங்களா எங்கள மதிச்சாத்தானேங்கய்யா புரியு.. இதே பெரிய பெரிய ஒப்பிசுலயிலா இதுக்குனு தனி ரூம்லா இருக்கு. டொய்லட் வசதியலா இருக்குதானேங்கய்யா.. முழு நாட்டுக்கு நாங்க ஒழக்கிறதுலத்தா கூட காசு கெடக்கிறது.. நம்பளமட்டு ஏயா இப்புடி வச்சிருக்காங்க.. என்னவோ போங்கய்யா.. நம்ப மலயில பொளம்பி என்னா பெரயோசனோ? பேச வேண்டியவுங்க நல்ல சலுகயோட இருக்காங்க..



**கங்காணி :** என்னா புள்ளங்க செய்ய.. எல்லா விதி.. நம்பளா பெரியெடத்து விசயத்துல மூக்கனொழக்க ஏலாது.. நம்ப பொளப்ப பாப்போ புள்ளங்க.. கொழுந்தேத்த லொறிவருதுபோல சத்தோங்கேக்குது..

ம.அகிலேஸ்

# மகளிர் தினம்

என்னவள் அழகும்
இயற்றமிழ் மொழியும்
சிந்திடும் சிரிப்பும்
சிறுமலை பனியும்
என்னவள் புரியும்
இன்பத்தின் அழகே

பிறைநுதல் வடிவும்
பின்னிய கூந்தலின்
பிசகிய சுருளும்
திலகத்தின் ஒளியும்
சிமிடிடும் விழியும்
தேனிதழ் அழகும்
அன்பின் வடிவாய்
அடைந்த நற்பேறே

கன்னத்தின்
செழுமையும்
கருமச்ச அழகும்

கைகளின் வனப்பும்
கார்ந்திடும் சிரிப்பும்
என்னவள் எனக்கு
ஈன்றிடும் சிறப்பே

தாங்கிடும் மனமும்
தவித்திடும் உள்ளமும்
ஏங்கிடும் உறவும்
ஏமாறும் நிலையும்
என்னவள் சிறப்பே
இதனவள் பிறப்பே

செய்திடும் பணியும்
தேடியும் பெயரும்
வானத்து நிலவாய்
வசந்தத்தின் வரவாய்
பேசிடும் வார்த்தை
பெருமித பொருளே

ஆசைகள் நீக்கி
அன்பினை வழங்கி
தேடிய பொருளை
சிற்றெரும்பென
சேர்த்து
காத்திடும் அழகும்
கடமையின் சிறப்பே

என்னவள் எனக்கு
இன்பத்தின் பொருளே
இல்லத்தின் விளக்காய்
எரிந்திடும் சுடரே
கண்ணிவள் எனக்கு
கலித்திடும் விருந்தே..

*- வே.இராமர்*
*இலங்கை-*

# சர்வதேச மகளிர் தினம்

மங்கையே உன்னை
மலரென இனி
வர்ணிக்கப்
போவதில்லை....

நீ முள்ளாக இரு.....

வீர மங்கை வேலுநாச்சியார்
என் நினைவில் வருகிறாள்
சிவகங்கை சீமையிலே
காளியாக சீரியவள்....

ஆயிரத்தெட்டு ஆண்மகனின்
அத்தனை துணிச்சலையும்
துயிலாக கொண்டிருந்தாள்
தீயான அவள்........

உன் அவிழ்ந்த கூந்தலில்
வாசனை திரவியத்தோட
கொஞ்சம் கோபத்தை சேரு...

பெண்ணே நீ
இல்லை என்றால்
இங்கு எதுவும் இல்லை
எல்லாம் நீயே....

புரட்சி பூச்செடியில்
நீ முள்ளாக இரு
முள்ளின் அடியில் மட்டும்
சதை இருக்கட்டும்....

தீக்குளித்த சீதை வேண்டும்
என்றால் மடிந்து போயிருக்கலாம்
மதுரையை எரித்த கண்ணகி
இன்னும் மடியவில்லை.....

கண்ணகியின் கறுத்த
கருவிழியின் வீர பார்வை
நவீன மங்கையரே உங்கள்
நேத்திரத்தில் பதியட்டும்....

வெட்டுடை காளியம்மா
உன் வீரத்தை மங்கையரின்
மனம் எங்கும் விதைத்து செல்
விதையட்டும்.....

கோதையே
துஷ்பிரயோகங்களை
நீ துஷ்பிரயோகம் செய்து.
துவம்சம் செய்துவிடு.....

கோபத்தோடு அன்பு
செய்
அப்போது அது
புறக்கணிக்கப்படாது....

கோபமும் தாபமும்
நீ கொள்ளும் ஆடையாய்
மாறட்டும்
அன்பும் பாசமும்
அதற்குள்ளே இருக்கட்டும்.....
மங்கையே உன்னை
மலரென இனி
வர்ணிக்கப் போவதில்லை....

நீ முள்ளாக இரு.....

(என் பத்திரகாளியின்
வம்சத்தில் வந்த
அத்னை மகளிரிற்கும்
மகளிர் தின
நல்வாழ்த்துகள்)
(என் நெஞ்சம் கொண்ட ஈரம்)

*- எம் ராமதாஸ்*
*இறம்பொடை-*

# எப்போதும் பயமில்லை...

வேதியலாகிறாய்
வருத்தப்படுகையில்
மனதாலும்
இதத்தாலும்

விரல் பிடிக்கிறாய்
தடுமாறுகையில்
விழியாலும்
மொழியாலும்

வானமாகிறாய்
இடமாறும்
பொழுதுகளில்
நிழலாகவும்
மழையாகவும்

நிலமாகிறாய்
புதைந்து அழுகையில்

வளர்வதற்கும்
மலர்வதற்கும்

வனமாகிறாய்
புன்னகைக்க
மறக்கையில்
பூக்களாகவும்
புள்ளினமாகவும்

ஒளியாகிறாய்
இருளச்சம்
துரத்துகையில்

மின்மினிகளாகவும்
மின்னலாகவும்

எப்போதும்
பயமில்லை....
என்னுள்ளே
நீயிருக்கிறாய்!

*- Dr ஜலீலா முஸம்மில்*
*ஏறாவூர்*
*இலங்கை-*

## தூறல்கள்

# ‘பா’ மொழிகள்

| | |
|---|---|
| மரபுக் கவிதை புனிதம் | கல்யாண கவிதை சிகரம் |
| புதுக் கவிதை மனிதம் | மக்கள் கவிதை எரிமலை |
| புரட்சிக் கவிதை பாவிதம் | ஊடகக் கவிதை பூமழை |
| பாப்பாக் கவிதை பூவிதம் | தமிழர் கவிதை கண்ணீர் |
| காதல் கவிதை வைரம் | |

*பூபதிராஜா*
*கொழும்பு*

# இளம்பிறை ஏந்தி வரும் ரமழானே வாராய்

கரடு முரடான
கனதியான
இதயங்களையும்
கதிமோட்சம் தந்து
கனியவைக்க

இளம் பிறை
ஏந்திவரும்
இறையளித்த
மாண்புமிகு
நோன்பே வாராய்

மாந்தருக்கு
மோட்சம்
தர மாண்புமிகு

ரமழானை
ஏந்திவரும்
ஏந்திழையே
இளம் பிறையே
வாராய்

மான்புடனே
நோன்பிருந்து
மகிழ்ச்சியுடன்
மனங்களினால்
எண்ணி
முப்பதென
முடிக்குமுன்னே

இறுதிவரும்
ஒன்றிரண்டை

எடுத்துக்கொண்டு
பிரிந்திடாதே
முழுவதையும்
தந்திடவே
இறையோனை
முழுமனதாய்
பிரார்த்திக்கின்றேன்

*- மருதூர்*
*மௌஜுன்-*

# சிறுத்தையின் சாணக்கியம்!



நாய்க்கும் சிறுத்தைக்கும் இடையில் எந்த விலங்கு வேகமாக ஓடுகிறது என்று ஒரு போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.

வானை நோக்கி துப்பாக்கி சுடப்பட்டு போட்டி ஆரம்பமானது...

நாய் ஓட ஆரம்பித்தது..

ஆனால், சிறுத்தை தன் கூண்டை விட்டு வெளியே வரவே இல்லை.

போட்டியை பார்க்கக் கூடியிருந்த அனைத்து மக்களுக்கும் தாள முடியாத ஆச்சரியம். “என்ன நடந்தது? ஏன் சிறுத்தை ஓடவில்லை?” என்று போட்டி ஒருங்கிணைப்பாளரிடம் கேட்டார்கள்.

அதற்கு அவர் சொன்ன விடை –

“சில சமயங்களில் நீங்கள் சிறந்தவர் என்பதை மற்றவர்களுக்கு நிரூபிப்பது ஒரு அவமானம்”.

சிறுத்தை அதன் வேகத்தை வேட்டையாடுவதற்கு மட்டுமே பயன்படுத்தும். அதன் வேகத்தையும் வலிமையையும் சில நாய்களுக்கு நிரூபிக்க வேண்டியதில்லை.

ஆகவே, நம் வாழ்வில் பல சூழ்நிலைகளில், நாம் சிறந்தவர்கள் என்பதை எல்லோருக்கும் நிரூபிக்க முயற்சி செய்யவேண்டிய அவசியமில்லை.

அப்படி செய்வது நமக்குத்தான் காலம், பொருள், ஆற்றல் விரயம்.

தேவையில்லாதவர்களிடம், தகுதியற்றவர்களிடம் நாம் யார் என்பதை நிரூபிக்காமல் இருப்பதே சிறந்த சாணக்கியதனம்.

‘எனக்கு பட்டுக்கோட்டை பக்கத்துல ஆத்திக்கோட்டைதான் சொந்த ஊர். எங்க அண்ணன் சின்னையனும் ‘அவுக’ளோட அண்ணனும் சிங்கப்பூர்ல வேலை பார்க்கும்போது சிநேகிதமானவங்க. ‘எனக்கு ஒரு தங்கச்சி இருக்கா. அவளுக்கு கல்யாணம் பண்ணணும்னு எங்க அண்ணன்தான் சொல்லிருக்காக. அப்ப அவுக அண்ணன் ஒண்ணும் சொல்லலையாம்.

சிங்கப்பூர்லேர்ந்து லீவுல ஊருக்கு வரும்போது, தம்பியைக் கூட்டிட்டு என்னைப் பொண்ணு பார்க்க வந்துட்டார். அப்ப அவுக, ‘அண்ணனுக்குதான் பொண்ணு பார்க்கப் போறோம்’னு நினைச்சுக்கிட்டு வந்தாகளாம். பொண்ணு பார்த்துட்டு ஊருக்குத் திரும்பும்போது, ‘பொண்ணு எப்படிடா இருக்கு’ன்னு அண்ணன் கேட்க, ‘அழகாதான் இருக்கு’ன்னு இவுக சொல்லிருக்காக. ‘உனக்குத்தான்டா இந்தப் பொண்ணு’னு அண்ணன் சொன்னதும், இவுகளுக்கு ரொம்ப சந்தோஷமாப் போச்சாம்.



அப்போ வீட்டுல வந்து எழுதுனதுதான், ‘‘ஆடை கட்டி வந்த நிலவோ, கண்ணில் மேடைகட்டி ஆடும் எழிலோ’’ பாட்டு. இப்போ தெரிஞ்சுக்கோங்க நாந்தான் ஆடைகட்டி வந்த நிலவு, என்று மலர்ந்து சிரிக்கிறார் கௌரவம்மாள்.


‘அன்னைக்கு அவுக அண்ணன் பொஞ்சாதிக்கு வளைகாப்பு. அப்போ நான் கிண்டலா, ‘அக்காளுக்கு வளைகாப்பு. அத்தான் மொகத்துல பொன் சிரிப்பு’ன்னு சொன்னேன். இதை, ‘கல்யாணப் பரிசு’ படத்துல, அவுக பல்லவியா போட்டு பாட்டா எழுதிட்டாக. ‘இது நீ எழுதுன பாட்டு. இந்தா பிடி சன்மானம்’னு அந்தப் பாட்டு எழுதுனதுக்குக் கிடைச்ச பணத்தை என் கையில கொடுத்தாக.

பட்டுக்கோட்டையார் குறித்து அவரது மனைவியார் கௌரவம்மாள்.


# தமிழன் தர்பார்



## இது எங்க ஏரியா



வீட்ல ஃப்ரிட்ஜ் வாங்குன பிறகு தினமும் நாலு வகையான சட்னி கிடைக்குது! நேத்து வச்சது, முந்தா நாள் வச்சது, காலைல வச்சது...



இந்த உலகில் விலை மதிப்பில்லாதது ‘அன்பு’ மட்டும்தான். ஏனோ அது விலையில்லாமல் கிடைப்பதால் தான், அதன் மதிப்பை யாரும் உணர்வதில்லை...




ஹெல்மெட்
உங்கள்
தலைக்கு மட்டுமல்ல...
உங்களை
நம்பி வாழும்
குடும்பத்துக்கும் பாதுகாப்பு!



எல்லாருக்குள்ளும் ஒரு மிருகம் தூங்கிட்டிருக்குன்னு சொல்றாங்களே, அது எந்த மிருகம்னு ஜெயித்தவர்களைக் கேளுங்கள். அந்த மிருகம்தான் ‘முயல்’. முயற்சி செய்.



எப்பவும் தோத்துக்கிட்டே இருக்கவனுக்கு தோல்வி மீது பயம் கிடையாது... எப்பவும் ஜெயித்துக் கொண்டிருப்பவனுக்குத்தான் தோல்வி பயம்!



நாலு பேரைக் கேள்வி கேட்கும் நிலையிலுள்ள எவனும், வேறு யாராவது நாலு பேருக்கு பதில் சொல்லியே ஆக வேண்டும்!











முப்பத்துமூணு வருஷங்களுக்கு முன்பு எடுத்த புகைப்படம். எடுத்தவர் மறைந்த பழம் பெரும் புகைப்படக்காரர் சுபா சுந்தரம் – என்றார் இந்த அபூர்வமான படத்தை நமக்குத் தந்த ஞானம். இப்படிப்பட்ட அற்புதப் படங்களை நீண்ட காலமாக சேகரித்து வருபவர்.

“ஒரு சினிமா இதழில் வாரம் ஒரு பிரபலத்துடன் ஒருநாள் முழுக்க இருப்பதுபோல ஒரு சீரியல் வந்தது. ‘தோட்டம் முதல் கோட்டை வரை’ என்று எம்.ஜி.ஆரை வைத்து ஒரு வாரம் செய்தனர். அடுத்த வாரம் நடிகர் திலகம் சிவாஜியுடன் ஒரு நாள். அப்போது சிவாஜி ஏகப்பட்ட பிஸியாக இருந்த நேரம். கமல் வளர்ந்துவரும் நடிகர். சிவாஜி விஜயா வாஹினியில் ‘கவரிமான்’ ஷூட்டிங்கிலிருந்தார். அடுத்த ஃப்ளோரில் ‘சட்டம் என் கையில்’ படப்பிடிப்பில் கமல் நடித்துக் கொண்டிருந்தார். (சத்யராஜ் வில்லனாக அறிமுகமான படம் இதுவே!) சம்பந்தப்பட்ட நிருபருக்கு சட்டென்று கமலை அழைத்து சிவாஜியை போட்டோ எடுக்க வைக்கலாம் என்று ஐடியா தோன்ற, உடனே கமலிடம் விஷயத்தைத் தெரிவித்தார்.

அந்த சமயத்தில் ஸ்ரீப்ரியாவுடன் “சொர்க்கம் மதுவிலே” பாடல் காட்சி படமாக்கப்பட்டுக்கொண்டிருந்ததால், ‘‘காட்சி முடியட்டும் வருகிறேன்” என்று கமல் சொன்னதோடு, சொன்னபடி நடிகர் திலகம் நடித்துக்கொண்டிருந்த செட்டுக்கு வந்திருக்கிறார். ‘‘என்னப்பா, பெரிய மனுஷா... ஹீரோவாயிட்ட” என்று சிவாஜி ஜாலியாக கமலின் தோளைத் தட்டி உற்சாகப்படுத்தினாராம். அப்புறம் உலக நாயகன் தனது சினிமா குருவை படமெடுக்கப் போகிறபோது சுபா சுந்தரம் அந்த அற்புதக் காட்சியை விட்டு விடுவாரா...? இந்தத் தகவல் முழுவதையும் சுபா சுந்தரம் என்னிடம் சொல்லியே புகைப்படத்தைத் தந்தார் என்று பூரித்தார் ஞானம்..

நன்றி: குமுதம்.





காரைக்கவி



# சீத்துவக்கேடு 230

உன்னாண பெட்டையள் உப்பிடிக் கன விளையாட்டுகள் விளையாடி இருக்கினம். உதிலை ஒரு விளையாட்டுத்தான் செம்மூதாயாட்டு எண்டது. செம்மூதாய் எண்டது தம்பலப்பூச்சி. மழைபெஞ்ச பிறகு பாத்தம் எண்டால் நல்ல சிவப்புச் சிவப்பாய் பஞ்சுத் துண்டுமாதிரி நிலத்தில ஓடித்திரியும். அதுகின்ரை முதுகு சிவப்பு வெல்வெற் மாதிரி இருக்கிறதால சனங்கள் பட்டுப்பூச்சி எண்டும் சொல்லுறவை.

முந்தி சங்ககாலப் பெட்டையள் என்ன செய்வினம் எண்டால், உந்த செம்மூதாய்க்கு பின்னால் ஓடி விளையாடுவினம். ஏன் நாங்களே முந்தி உதுகளுக்குப் பின்னால ஓடித்திரிஞ்சனாங்கள் எல்லே எண்ட ஆச்சி, நற்றிணையில நல்ல சுவாரசியமான கதை இருக்கெண்டு சொல்லத் துடங்கினா.

ஒருத்தரை ஒருத்தர் விரும்பின பெடியும் பெட்டையும் களவாக் கலியாணம் செய்யவேணும் எண்டு போட்டு ஒருத்தருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு வெளிக்கிட்டுக் காட்டுப்பாதையில போகினம். அவை அப்பிடிப் போகேக்கை நல்ல மழை பெஞ்சு ஓயவும் உந்த மூதாய்ப்பூச்சியள் நிலத்தில அங்கயும் இஞ்சையுமா ஓடித்திரிஞ்சிருக்குதுகள்.

அந்த நேரம் பாத்து அந்தப் பெட்டை சரியாக் களைச்சுப் போச்சு. அவளைப் பாக்கப் பாவமாக் கிடக்க, அவன் அவளிட்டை நீ வேணுமெண்டால் கொஞ்ச நேரம் உந்த மூதாய்ப்பூச்சியளைப் பிடிச்சு விளையாடு. உன்ரை களைப்பு எல்லாம் தீர்ந்திடும் எண்டு சொன்னானாம். உந்தக் கதையை மதுரை மருதன் இளநாகனார் நற்றிணையில சொல்லுறார் எண்ட ஆச்சி அந்தப் பாட்டையும் சொன்னா.

**"தலைநாட் கெதிரிய தண்பெயல் எழிலி**
**அணிமிகு கானத்து அகன்புறம் பரந்த**
**கடுஞ்செம் மூதாய் கண்டும் கொண்டும்**
**நீ விளை யாடுக சிறிதே"** (நற்றிணை 362 )

உதைமாதிரி அப்ப அந்தக் காலத்தில பெட்டையள் முந்தி நான் சொன்ன மாதிரி குரவை ஆடுற விளையாட்டும் விளையாடினவை. குரவை எண்டது என்னவெண்டால் பெட்டையள் ஒருத்தரோடை ஒருத்தர் கைகோத்து ஆடி விளையாடுறது.

உதைப்பற்றி சங்ககாலப் பாட்டு களிலை நிறையக் கிடக்குது எண்ட ஆச்சி உனக்கு ஒரு விஷயம் தெரியுமோ கன இடங்களிலை விதம் விதமா உவளவை குரவை விளையாட்டு விளையாடினாலும் ரெண்டு குரவை விளையாட்டுகள் முக்கியம். ஒண்டு போர்க்காலக் குரவை எண்டு சொல்லுறது. சண்டைக்காலத்தில விளையாடுற உந்தக் குரவையில கோபமும், வீரமும் இருக்கும்.

உதை புறநானூறு சினமாந்த வெறிக்குரவை எண்டு சொல்லுது எண்டவ

***"சினமாந்தர் வெறிக்குரவை***
***ஓதநீரில் பெயர்புபொங்க"*** (புறநானூறு 22, குறுங்கோழியூர் கிழார்) எண்ட பாட்டு வரிகளைச் சொன்னா.

உதமாதிரி சண்டை இல்லாத காலங்களிலை அமைதியான முறையிலையும் பெட்டையள் குரவை விளையாட்டு விளையாடுவினம் அதை தண்குரவை எண்டு சொல்லுறவை எண்ட ஆச்சி,

***"வெப்பு உடைய மட்டு உண்டு***
***தண் குரவைச் சீர் தூங்குந்து"*** ( புறநானூறு 24, மாங்குடி கிழார் ) எண்ட பாட்டு வரிகளைச் சொன்னா.

உதமாதிரி அவளவை துணங்கை எண்டு ஒரு விளையாட்டு விளையாடினவை. துணங்கை எண்டால் பெட்டையள் குரவை மாதிரித்தான் வட்டமாக நிண்டு கைகளை இடுப்பிலை கோத்துக்கொண்டு ஆடுற ஒரு பொழுதுபோக்கு விளையாட்டு எண்டா. உந்த துணங்கை விளையாட்டைப் பற்றி ஒளவையார்

***"வணங்கிறைப் பணைத்தோள் எல்வளை மகளிர்***
***துணங்கை நாளும் வந்தன அவ்வரைக்***
***கண்பொர மற்றதன் கண் அவர்***
***மணம்கொளற்கு இவரு மள்ளர் போரே"***
(குறுந்தொகை 364)

எண்ட பாட்டிலை பாடியிருக்கிறா எண்டா ஆச்சி.

காப்புகளைப் போட்டிருக்கிற பெட்டையள் துணங்கைக் கூத்து விளையாடும் நாள் வர போய் விளையாட உவளவையில கண் வைச்சிருக்கிற பெடியள் கொஞ்சம் தள்ளி நிண்டுகொண்டு உவளவையைப் பாத்தபடி தாங்களும் விளையாடிக்கொண்டு நிண்டாங்களாம் எண்டது உந்தப் பாட்டின்ரை பொருள் எண்டா ஆச்சி.



தம்பலப்பூச்சி

(இன்னும் ஆடுவம்)

# இவ்வார இராசி பலன்கள்



**வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்**

**மேஷ ராசி அன்பர்களே!**

குடும்பத்தில் உற்சாகத்துக்குக் குறைவிருக்காது. உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். பொருளாதார வசதிக்கு குறைவு எதுவும் இருக்காது. புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் மேம்படும். கணவன் - மனைவிக்கிடையே மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக மனஸ்தாபம் ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அவர்களைக் கண்டிக்காமல் விட்டுப்பிடித்துச் செல்வது நல்லது. வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு லாபம் கிடைக்காது. போட்டிகளைச் சமாளிக்க கடுமையாகப் பாடுபடவேண்டி வரும். புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம். கணவரின் அன்பும் ஆதரவும் உற்சாகம் தரும்.

**ரிஷப ராசி அன்பர்களே!**

பொருளாதார வசதிக்குக் குறைவில்லை. செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். நெருங்கிய உறவினர்கள் மூலம் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்களை சாமர்த்தியமாக சரிசெய்துவிடுவீர்கள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். நீண்டநாட்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்வதைத் தவிர்க்கவும். கடையை வேறு இடத்துக்கு மாற்றம் செய்வதையும் தவிர்க்கவும். பங்குதாரர்களின் ஆதரவு மனதுக்கு ஆறுதலாக இருக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு அதிக பொறுப்புகளால் உடல் அசதி உண்டாகும்.

**மிதுன ராசி அன்பர்களே!**

நீங்கள் நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்த நல்ல தகவல் வந்துசேரும். உடல் ஆரோக்கியம் மேம்படும். பணவரவு அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். குடும்ப விடயத்தில் மற்றவர்கள் தலையிடுவதை அனுமதிக்காதீர்கள். சிலருக்கு நீண்டநாட்களாக நிறைவேற்றாமல் விடுபட்ட குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். தந்தைவழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் இணக்கமான உறவு ஏற்படும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு செலவுகள் கூடுவதால் சற்று சிரமப்பட்டே சமாளிக்கவேண்டி வரும். உறவினர்கள் அனுசரணையாக இருப்பார்கள்.

**கடக ராசி அன்பர்களே!**

வார முற்பகுதியில் எதிலும் பொறுமையாக இருக்கவேண்டிய வாரம். பணவரவைப் பொறுத்த வரை திருப்திகரமான போக்கே காணப்படுகிறது. செலவுகளும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். சிலருக்கு வெளியூர்ப் பயணமும் அதனால் ஆதாயமும் ஏற்படும். திருமணம் தொடர்பான முயற்சிகளில் குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டுச் செய்யவும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வருகை செலவுகளை ஏற்படுத்துவதுடன் மகிழ்ச்சியும் தருவதாக இருக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்தவும், வாடகை இடத்திலிருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றவும் வாய்ப்பு உண்டாகும். புதிய முதலீடுக்கான பண உதவி கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்து கொள்ளவும்.

**சிம்ம ராசி அன்பர்களே!**

வருமானம் திருப்திகரமாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். வீண் செலவுகள் இருக்காது. பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்புண்டு. அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். தந்தைவழி உறவினர்களால் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். நண்பர்களின் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். புதிய முயற்சிகள் தொடங்குவதற்கு உகந்த வாரம். வியாபாரத்தில் இலாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். கடையை புதிய இடத்துக்கு மாற்றவோ அல்லது விரிவுபடுத்தவோ நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதில் அவ்வப்போது இலேசான சோர்வு ஏற்படும். கணவரிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**கன்னி ராசி அன்பர்களே!**

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. வெளியூர்ப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. பழைய கடன்களைத் தந்து முடிப்பீர்கள். கொடுத்த கடனும் திரும்பக் கிடைக்கும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்கவேண்டாம். அவசியம் முடிவு எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், அனுபவமிக்கவர்களிடம் ஆலோசனை கேட்டுச் செய்யவும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சந்தோஷமும் நிம்மதியும் தரும் வாரம்.

**துலா ராசி அன்பர்களே!**

கணவன் - மனைவிக்கிடையே இருந்துவந்த கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்யம் ஏற்படும். எதிர்பாராத பயணங்களும் அதனால் உடல் அசதி உண்டாகும். உங்களைப் பற்றித் தவறாகப் புரிந்துகொண்ட நண்பர்கள், தங்கள் தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்பார்கள். அவர்களால் ஆதாயமும் உண்டாகும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். அவருடன் சுமுகமான உறவு ஏற்படும். செலவுகள் ஏற்பட்டாலும் பணவரவு இருப்பதால் சிரமம் எதுவும் இல்லை. வியாபாரத்தின் காரணமாக சிலர் தொலைதூர பயணங்களை மேற்கொள்ள நேரும். பணியாளர்கள் நல்லமுறையில் ஒத்துழைப்பு தருவார்கள். சக வியாபாரிகளிடையே இணக்கமான சூழ்நிலை உண்டாகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உறவினர்கள் வருகையால் பொறுப்புகள் அதிகரிக்கும்.

**விருச்சிக ராசி அன்பர்களே!**

செலவுகள் அதிகரித்தாலும் கடன் வாங்காமல் சமாளித்துவிட முடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்ப விடயமாக குறுகிய தொலைவுப் பயணம் மேற்கொள்ள வேண்டி வரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். இதுவரை ஏற்பட்டு வந்த மருத்துவச் செலவுகள் குறையும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மகன் அல்லது மகளின் திருமண முயற்சிகளில் ஈடுபட சாதகமான வாரம். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கும். வாடகை இடத்திலிருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றி விரிவுபடுத்துவீர்கள். சக வியாபாரிகள் அனுசரணையாக இருப்பார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம் இது. கணவர்வழி உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**தனுசு ராசி அன்பர்களே!**

வருமானம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும் என்றாலும் உரிய சிகிச்சையின் மூலம் உடனே நிவாரணம் கிடைத்துவிடும். வீண்செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. மற்றவர்களின் தலையீடு காரணமாக குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். கணவன் - மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வியாபாரத்தில் சற்று கூடுதலாக உழைக்கவேண்டி வரும். பற்று வரவு சுமுகமாக நடக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பிரச்சினை இல்லாத வாரம். கணவருடன் ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்.

**மகர ராசி அன்பர்களே!**

பணவரவுக்கு குறைவிருக்காது. ஆனாலும், எதிர்பாராமல் ஏற்படும் செலவுகளால் கையிருப்பு குறைவதுடன், சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும். சிலருக்கு தெய்வப் பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். தந்தையுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளதால் சற்று பொறுமையுடன் இருப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். கூடுமானவரை அவர்களைக் கண்டிக்காமல் அனுசரித்துச் செல்வது நல்லது. வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் நல்ல முறையில் பணி செய்வார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு புகுந்தவீட்டு உறவினர்களிடையே ஏற்பட்டிருந்த அவப்பெயர் நீங்கும். மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும்.

**கும்ப ராசி அன்பர்களே!**

பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகள் குறைவு என்பதால் சிறிது சேமிக்கவும் முடியும். பிள்ளைகள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தைவழி உறவினர்கள் வருகையால் வீட்டில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பது சாதகமாக முடியும். நீண்டநாட்களாக செலுத்த முடியாமல் இருந்த குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் சுமுகமான போக்கு ஏற்படும். பங்குதாரர்கள் அனுசரணையாக இருப்பார்கள். விற்பனையைப் பெருக்குவதில் பணியாளர்கள் உற்சாகமாக ஈடுபடுவார்கள். குடும்ப நிர்வாகத்தை கவனிக்கும் பெண்களுக்கு உற்சாகமான வாரமாக இருக்கும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மீன ராசி அன்பர்களே!**

எதிர்பார்த்ததைவிடவும் வருமானம் கூடுதலாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். சிலருக்கு உறவினர்களால் சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. சிலருக்கு பிள்ளைகள் வழியில் நீண்டநாட்களாக எதிர்பார்த்த சுபச் செய்தி கிடைக்கக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் அதிகமாக வரும் என்றாலும் அதற்காக கூடுதலாக உழைக்கவேண்டி வரும். வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்குத் தேவையான கடன் கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதுக்கு நிம்மதி உண்டாகும். புகுந்தவீட்டு உறவினர்கள் உதவியுடன் தடைப்பட்ட சுபநிகழ்ச்சி ஒன்று நடைபெறக்கூடும்.

## கண்டியில தும்பறையில்....
### (0 12-080 )

கோப்பிக்காட்டு
தேசமெல்லாம்
தொற்று நோயா
மாறியது
பேதியோட சேர்ந்து
இன்னும் எத்தனையோ
வியாதிகளும்
மக்கள வருத்தியது...

பதுளையில தொங்கு
தோட்டம்
கொலராவின்
பிடியதிலே..
சிக்கி சீரழிய....
கோப்பிக்காடு
சுடுகாடாய்..
மாறியேபோகிறது....

இப்படி இருக்கையிலே..
கொலரா கொடும்
வியாதி காத்துவாக்கில
திடீர் திடீருன்னு...
எங்கும் தீயாய் பரவியது
ஆட்கொல்லி பெரும்
நோயி....

கண்டியில தும்பறையில்
தீகன என்று சொல்லி
ஊரு ஒன்னு கோப்பி
செழுசெழுப்பா
வளர்ந்த மண்ணு...

இங்கே ஆங்காங்கே
சத்திரங்கள் சந்தியென்று
நிறைய மண்டபங்கள்
அமைத்தார்கள்.

மன்னாரில்
இருந்து வந்து
களைப்பில் வரும்
மக்களுக்கு இந்த
சத்திரங்கள்
பெரியதொரு
வரமே தான்...

அந்த சத்திரத்து
மத்தியில
மண்ணப்போல
தேகங்கொண்டு
சுருண்டு
கிடக்கானய்யா..
அப்பாவி
பயலொருவன்...

பையனென்றா நானும்
சொன்னேன் தலநரச்சி.
தொங்கும் சதையாகி
உடல் தளர்ந்த
தோற்றமையா...

அம்மணத்த மறைச்சிலிட
இடையிலொரு
துண்டுவொன்னு...
பறட்ட தலையாகி
கஞ்சிக்காக ஏங்கும்
முகம்....

யாருன்னு பாத்தமின்னா
ஐயோ நம்ம பூசாரி
முருகையா
கிழவன் தானே...

அப்போ கப்பலில
வரும் நேரம்
பொண்டாட்டி
புள்ளயெல்லாம்
கடலோட போனதால
பித்து புடிச்ச மாதி
புலம்பி திரிஞ்சிவிட்டு
இப்போ அநாதி
மனுசனாட்டம்
வீதியில கிடக்குறாரே...

புலம்பி திரிஞ்சிகிட்டு
பித்தான மனுசனால
ஆவதொன்றும்
இல்லை என்று
சர்காரும் கண்டுக்கல...

சோறு தண்ணி ஏதுமின்றி
மெலிந்த தேகமாகி.
பாவப்பட்டு நிக்கிறாரு
பாசக்கார அந்த ஆளு...

அந்த தோட்டத்து
தொறக்காரை
உயிர் பறிக்கும்
எமன் மாறி
பொல்லாத
பேயொருத்தன்...

வேலைக்கி போலன்னு
ஒருநாளு
நின்னுவிட்டா...
கூலி வேணும் என்று
சொல்லி
கூப்பாடு போட்டு நின்னா
முதுகு பழுக்கும் படி
கொடுத்திடுவா
கசையடிகள்...

துப்பாக்கி
கையில் வெச்சி
சுட்டு பொசுக்குவேனு
மெரட்டும் ஆளு அவே...

(சொல்ல மறந்த கதை
இன்னும் சொல்லப்படும்)

தொடரும்..
எம் ராமதாஸ்
இறம்பொடை

---

# தமிழன் சிறுகதை

# நாமொன்று நினைக்க...

**எஸ் ஏ கப்பார்**

சலீம் ஹாஜியார் புதிய இடத்திற்கு வந்து நாலைந்து வருடங்களாகின்றன.

இதற்கு முன் இதே இடத்தில் சமது ஹாஜியாருடைய ஒரே மகன் றமீஸ் செல்பேசி மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் கடையொன்றை நடத்திவந்தார். வியாபாரம் அவ்வளவு பெரிதாக எதிர்பார்த்தபடி நடைபெறாததால் வருமானம் போதியளவு கிடைக்கவில்லை. அதனால் அக்கடையைக் கைவிட்டு வெளிநாடு சென்றுவிட்டார்.

"பூட்டிக்கிடக்கிற உங்க மகன்ட கடையிலே என்ட சில்லறைக் கடையை கொண்டுவந்து நடத்தலாமென்று நினைக்கிறேன். மாதா மாதம் வாடகையைக் கரக்டா தந்திடுவேன். நீங்க சம்மதிச்சா சரிதான்."

"இப்ப கடை இருக்கிற இடமும் நல்ல இடம்தானே."

உரையாடலைத் தொடர சமது ஹாஜியார் வினவினார்.

"இல்ல ஹாஜி. இப்ப அவடத்தில சனப் புழக்கம் குறைவு. வியாபாரமும் போதாது."

சலீம் ஹாஜியார் ரொம்ப கறாரான மனிதர் என்பதால் சமது ஹாஜியார் சிறிது யோசித்துவிட்டு,

"மகனிடமும் ஒரு வார்த்தை கேட்டுவிட்டு சொல்றேன்" என்றார்.

இரண்டொரு வாரங்களில் சமது ஹாஜியாரின் மகனிடமிருந்து அனுமதி கிடைத்ததும் சலீம் ஹாஜியார் தனது சில்லறைக் கடையை இடம்மாற்றிவிட்டார். திறப்பு விழாவும் ஒரு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சலீம் ஹாஜியார் கடை திறந்து ஓரிரு வாரங்களில் கொரனாவின் தாக்கம் உலகை ஆட்டிப்படைத்தது. நமது நாடும் அதற்கு விதிவிலக்கில்லை. ஆரம்பத்தில் சலீம் ஹாஜியார் கவலைப்பட்டாலும் நாட்கள் செல்லச் செல்ல கொரனாவின் அதிகரிப்பு அவருக்கு அதிர்ஷ்டத்தைக் கொண்டுவந்தது.

பொருட்களின் விலைகள் கிடுகிடுவென ஏறியதும் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதும் பொருட்களைக் கூடுதலான விலைக்கு விற்பதற்கு ஒரு வாய்ப்பாகப் போய்விட்டது சலீம் ஹாஜியாருக்கு. கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்த நினைத்தவர், தான் விரும்பியவாறு விலைகளைக்கூட்டி தனது வியாபாரத்தை வளப்படுத்தினார். நல்ல வருமானமும் கிடைத்தது.

அதைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி சலீம் ஹாஜியாரை மேலும் மேலும் அதிர்ஷ்டசாலியாக்கியது. தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுப்பதாக எண்ணி மகிழ்ந்தார். பொருட்களின் விலைகள் இரண்டு மூன்று மடங்குகளாக உயர்ந்தபோது சலீம் ஹாஜியாரின் காட்டில் நல்ல மழை பெய்யத் தொடங்கியது.

இந்த அதிர்ஷ்டம் சலீம் ஹாஜியாருக்கு நீண்டகாலம் நீடிக்கவில்லை.

தொடர்ந்து மக்களிடையே ஏற்பட்ட மனமாற்றங்களும் தொழில் இல்லாப் பிரச்சினைகளும் சலீம் ஹாஜியாரின் வியாபாரத்தில் ஓரளவு தளர்வை ஏற்படுத்தியது என்னவோ உண்மைதான். ஹாஜியாரின் கடையில் பொருட்களுக்குக் கூடுதலான விலை எனவும் வேண்டுமென்றே பொருட்களைப் பதுக்கிவைத்து விற்கிறார் எனவும் மக்கள் பேசிக்கொண்டனர்.

ஒரு நாள் சமது ஹாஜியார் வழமைபோல் சாமான்கள் வாங்க கடைக்கு வந்தார்.

"என்ன சலீம் ஹாஜியார், வியாபாரம் எல்லாம் நல்லா போகுதுதானே? நம்மட சாயிவுத் தம்பிட மகன் றசாக் வெளிநாட்டிலிருந்து வந்திருக்கான். நானும் போய் பார்த்தேன். நல்ல வசதியோடதான் வந்திருக்கான் போல தெரியுது. அவனும் அவன்ட மாமாட கடையில பெரிய சில்லறைக் கடைதான் போடப்போறானாம். இனி வெளிநாடு போய் உழைச்சது போதும் என்கிறான்."

சமது ஹாஜியார் சொன்னதைக் கேட்டதும் சலீம் ஹாஜியாருக்கு என்னவோ போலாகிவிட்டது. நமது தொழிலுக்குப் போட்டியாக ஒருவன் முளைத்துவிட்டான் என



நினைத்துக் கவலைப்பட்டவர், தொடர்ந்து,

"முன்னையப் போல இப்பவெல்லாம் வியாபாரம் இல்லை ஹாஜி. நானும் நல்லா உழைச்சதான். இப்ப சனங்களுக்கிட்ட காசு இல்ல. இலாபமும் மிகக் குறைவு. விட்டுட்டு வேற ஏதாவது தொழிலைச் செய்யச் சொல்லுங்க.கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேணும்தானே. அவனுக்கு அமைச்சது அவனுக்கு. நமக்கு அமைச்சது நமக்கு."

பதிலளித்துவிட்டு எழுந்து தான் வாங்க வந்த பொருட்களை வாங்கிக்கொண்டு சென்றார், சமது ஹாஜியார்.

இரண்டு மூன்று வாரங்களில் புதிய கடை வெகு விமரிசையாகத் திறக்கப்பட்டது. சலீம் ஹாஜியாரும் திறப்பு விழாவிற்குச் சென்று வந்தார்.

கடந்த இரண்டு மூன்று நாட்களாக சலீம் ஹாஜியாரின் கடை பூட்டிக்கிடந்ததை அவதானித்த றசாக் தனது கடைக்கு வந்தவர்களிடம் விசாரித்ததில் சலீம் ஹாஜியாருக்குச் சில நாட்களாகச் சுகமில்லை என அறிந்துகொண்டான். கடையினை அடைத்ததும் அவரது வீட்டுக்குப் போய் பார்த்துவர வேண்டுமென எண்ணிக்கொண்டான்.

இரவு ஒன்பது மணியளவில் கடையைப் பூட்டிவிட்டு சலீம் ஹாஜியாரின் வீட்டையடைந்து, "ஹாஜியார்... ஹாஜியார்..." என கூப்பிட்டபடி கதவைத் தட்டினான். கதவு பூட்டப்பட்டிருந்தது. மீண்டும், "நான் றசாக் வந்திருக்கேன்" என சத்தமிட்டான். உள்ளேயிருந்து அவரது மனைவி வந்து கதவைத் திறந்து வரும்படி அழைத்ததும் அவரது மனைவியின் பின்னால் றசாக் சென்று அமர்ந்தான்.

இரண்டொரு வருடங்களுக்குள் புதிதாக கட்டிய மாடி வீடு. கீழ்ப்பகுதி மட்டும் பூரணப்படுத்தப்பட்டிருந்தது. மேற்பகுதியின் வேலைகள் ஆரம்ப நிலையில் காணப்பட்டன. வீடு அழகாகவும் அமைதியாகவும் இருந்தது.

"ஹாஜியாரைப் பார்க்கத்தான் வந்த நான்."

அமைதியைக் கலைக்க எண்ணி ஆரம்பித்தான்.

"ரெண்டு மூணு நாளா அவங்களுக்கு நெஞ்சு நோவு. ஆஸ்பத்திரிக்குப் போங்க எண்டு சொன்னேன். பாப்பம் பாப்பம் எண்டு இருந்தாங்க. பின்னேரம் நோவு அதிகமா இருக்கெண்டு சொல்லிக் கொண்டிருந்தாங்க. அவங்கள பாக்கவந்த நம்மட சமது ஹாஜியார்தான் கட்டாயப்படுத்தி ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டு வாட்டில வச்சிருக்காங்க. நானும் மகளும் இப்பதான் சாப்பாடு கொண்டு குடுத்திட்டு வந்திருக்கோம். நானும் மகளும் தனியே இருக்கதாலேதான் கதவைப்பூட்டி வைச்சிருக்கோம்."

சலீம் ஹாஜியாரின் மனைவி மிக வேதனையோடு கூறினார்.

" இஞ்ச பாருங்க தம்பி. மூணு நாலு வருஷமா நல்ல வியாபாரம்தான். ஒன்றையும் செய்றதுக்கு நம்மட ஊர் உடமாட்டா. எல்லாரும் எல்லாத்தையும் செய்யனுமென்டா எப்படி? நூல் கடை போட்டா எல்லாரும் நூல் கடைதான். நகைக் கடை போட்டா எல்லாரும் நகைக் கடைதான். சில்லறைக் கடை போட்டா எல்லாரும் சில்லறைக் கடைதான். அதாலதான் ஒருவரும் ஒண்டும் செய்ய ஏலாது."

றசாக்கிற்கு பொறியில் தட்டியதுபோல் இருந்தது.

"நாங்களும் எப்படியோ வீட்ட முடிச்சு மகளுக்கு ஒரு கலியாணத்த பண்ணிடலாமென்டுதான் நினைச்சோம். நாம் ஒண்ணு நினைக்க படைச்சவன் ஒண்ணு நினைக்கான்."

பெருமூச்சுடன் றசாக்கை நிமிர்ந்து பார்த்த சலீம் ஹாஜியாரின் மனைவியின் முகத்தை அவனால் ஏறிட்டுப்பார்க்க இயலவில்லை.

"உம்மா, இந்தாங்க ரீ"

மறைவிலிருந்து தேநீர் தட்டை நீட்டிய மகளிடமிருந்து தேநீரைப் பெற்று றசாக்கிடம் வழங்கினார், ஹாஜியாரின் மனைவி.

குழம்பிப்போயிருந்த றசாக் தேநீரைப் பெற்று அருந்திவிட்டு,

"நீங்க ஒன்றுக்கும் பயப்பட வேணாம். நான் காலைல கடை திறக்கிறதுக்கு முன் ஆஸ்பத்திரி போய் ஹாஜியாரைப் பார்த்து வாறேன். வருத்தத்தைப் பற்றி கவலைப்பட வேணாம். கொழும்புக்குக் கூட்டிப்போய் செக் பண்ணுவம். கடையையும் திறக்கச் சொல்றேன். என்ன உதவி எண்டாலும் செய்றேன். நீங்களும் எங்கட வாப்பாவோட சொந்தம்தான்."

குற்ற உணர்வோடு விடைபெற்றுக்கொண்டு வெளியேறிய றசாக் எப்படியும் நாளை வைத்தியசாலை சென்று ஹாஜியாரைப் பார்த்து அவரை தைரியப்படுத்த வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் வீட்டையடைந்தான்.

அடுத்த நாள் அதிகாலை எழுந்து ஆஸ்பத்திரிக்குச் சென்று ஹாஜியாரைப் பார்த்துவிட்டு கடையைத் திறக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் வீதிக்கு வந்தான் றசாக்.

"தம்பி, நம்மட சலீம் ஹாஜியார் ஆஸ்பத்திரியில மௌத்தாகிட்டாராமே. இன்னும் வீட்டுக்கு கொண்டு வரல்லயாம்." பக்கத்து வீட்டு மாமா சொல்லிவிட்டு நகர்ந்தார். மரணச் செய்தி கேட்ட றசாக் செய்வதறியாது விக்கித்துப்போய் சிலையாக நின்றான்.

---

# தமிழன் தொடர்கதை

# அசுரன்

**அத்தியாயம்**

**பாலா சங்குப்பிள்ளை**

இரவு 8 மணி. திருவிழா எந்தப் பிரச்சினையும் இல்லாம அதிகளவு மக்கள் கூட்டத்துடன் சிறப்பாக நடந்துகொண்டிருந்தது. முனிசாமி பட்டு உடைகளால் அலங்கரிக்கப்பட்டு உலா வருவதற்குத் தயார்நிலையில் இருந்தார். மணிகண்டன் கோயிலுக்கு முன்னால் இருந்த கூட்டத்துடன் கூட்டமாக தரையில் அமர்ந்திருந்தான். பூஜைகள் நிறைவடைந்து முனிசாமி ஊர்வலம் போகும் நேரம் நெருங்கியது. மணிகண்டன் மெதுவாக கண்களை மூடினான். அவன் காதருகே அந்த ஓசை கேட்டது.

"மகனே.. நான் இன்னமும் உன்னுடன் உன்னைப் பாதுகாக்க இருக்கேன். நான் நினைத்தது நடக்கக்கூடிய காலமும் நேரமும் வந்துவிட்டது. தர்மயுத்தம் மூலமாக அதர்மம், அக்கிரமம் செய்பவர்களை வதம்செய்யும் நேரம் நெருங்கிவிட்டது. என்னுடைய பாதுகாப்பும் முனியின் பலமும் உனக்குத் தீங்கு வராமல் பாதுகாக்கும். அழைப்பு வந்தவுடன் தைரியத்துடன் நீ செல்லலாம்.."

மணிகண்டன் திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தான். அவன் பக்கத்தில் ஒருவரும் இல்லை. அனைவரும் முனியை சுற்றிக் குழுமியிருந்தார்கள். அவன் உடலில் ஏதோ மாற்றம் ஏற்பட்டிருந்தது. உடலுக்குள் இன்னொருவர் உட்புகுந்ததைப்போல் தைரியம் ஏற்பட்டிருந்தது. அவன் சட்டென எழுந்தான். அம்மாவை நினைத்தான். எதிரே கம்பீரமாக நின்றிருந்த முனிசாமியை வணங்கினான். இப்போது கோயிலை விட்டு வெளியேறியவன் தூரத்தில் நிற்க வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிளை நோக்கி நடந்தவண்ணம், குறிப்பிட்ட அந்த நபருக்கு கைபேசியில் இணைப்பை ஏற்படுத்த முயன்றான். சில விநாடிகளில் இணைப்பு கிடைக்க மணிகண்டன் அவனிடம் பேசினான். பின்பு இணைப்பைத் துண்டிக்க கைபேசி சிணுங்கியது.

"ஹலோ நான்தான். உன் பயணத்தைத் தொடரலாம். அதோட அந்த துரோகி இருக்குமிடத்தை சொல்வதாகக் கூறினாய். இப்போது சொல்லலாமே.."

"மிஸ்டர் பார்த்திபன்.. அவனை யாருக்கும் தெரியாமல் உன்னிடம் ஒப்படைக்க சொன்னாய். நான் சரியென்று சொன்னேனே தவிர, எங்கே, எப்போது என்று சொல்லவில்லையே.. நம்முடைய விஷயங்கள் முடியும்போது உனக்குக் கட்டாயம் சொல்வேன். அதற்குள் என்ன அவசரம்..?"

"அவசரம் ஒன்றுமில்லை. உன்னுடைய வேலை முடிந்தபின் நீ யாரோ.. நான் யாரோ.. இடையில் அநாவசியமாக செந்தில் உனக்குத் தேவைப்பட மாட்டான்தானே.. அதற்காகத்தான் சொன்னேன்.. சரி நீ வரவேண்டிய இடத்துக்கான குறியீட்டை உன்னுடைய கைபேசிக்கு அனுப்பியுள்ளேன். அதைப் பின்பற்றி நீ சரியாக 10 மணிக்கு குறிப்பிட்ட இடத்துக்கு வந்துவிடு. வரும்போது தங்கயானை உன் கையில் இருக்கவேண்டும். உள்ளே வாயில் கதவை சி.சி.ரி.வி. கெமராவில் அதைக் காட்டினால்தான் கதவு திறக்கும்.."

இணைப்பு அத்துடன் துண்டிக்கப்பட, மோட்டார்சைக்கிளின் வேகத்தைக் கூட்டினான். அவன் மனம் முழுவதும் பண்பரசியைப் பற்றியே நினைத்தது.



உண்மையில் அவன் வெளிநாடு போவதை பண்பரசி விரும்பவில்லை. இருக்கும் வசதிகளை வைத்துக்கொண்டு இங்கேயே வாழ முடியாதா என்று கேட்டபோது மணிகண்டன் சிறிதுநேரம் எதுவும் பேசவில்லை.

"பண்பரசி.. உனக்குத் தெரியாது. எனக்கென்று சில இலட்சியக்கனவுகள் இருக்கு. அதை நிறைவேற்ற எனக்கு அதிகளவான பணம் தேவை. இப்ப நாம இருக்கிற தோட்டப் பாடசாலைக்கு ஒழுங்கான கூரை இல்லை. மலசலகூடம் இல்லை. வீடுகள் கட்டினதுக்கு என்ன இன்னும் அடிப்படை வசதிகள் இல்லை. இதுக்கு அரசியலும் ஒரு காரணம். தோட்டத்துல பிறந்து படிச்சி பட்டம் வாங்கின நிறைய பேர் வாழ்ந்த இடத்தை மறந்து கண்டி, கொழும்பு இல்ல வெளிநாடு போய் செட்டில் ஆயிடுறாங்க. தான் பிறந்த மண்ணுக்கு எந்த உதவியும் செய்ய மாட்டேன்னுறாங்க. அவங்க செய்ய மறந்ததை நான் செய்வேன். அதுக்காகத்தான் வெளிநாடு போக முடிவு செஞ்சேன்.."

பண்பரசி அவனைப் பெருமையுடன் பார்த்தாள். இப்போது அவனுடைய மோட்டார் சைக்கிள் நுவரெலியாவை அடைந்திருந்தது. ஆனால், தொடர்ந்து அவன் பயணம் செய்யவேண்டிய பாதையை அவன் கைபேசி காட்டியது.

மணிகண்டன் நேரத்தைப் பார்த்தான். இன்னும் தாராளமாக நேரம் இருந்தது. ஏதாவது அருந்தினால் நல்லது போலிருந்தது. மோட்டார்சைக்கிளை பதுளை பாதையை நோக்கி செலுத்தினான். எங்கும் கடைகள் மூடியிருந்தன. அவனுக்கு பசி வயிற்றைக் கிள்ளியது. அப்போது சீதையம்மன் கோயிலை அண்மித்தபோது அங்கே கூட்டமாக இருந்தது. அவன் மோட்டார்சைக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு கோயிலினுள்ளே சென்றான். அங்கே மண்டபத்தில் அன்னதானம் நடந்துகொண்டிருந்தது. இதில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் அதிகளவில் கலந்துகொண்டிருந்தனர். அனைவர் நெற்றியிலும் விபூதியும் சந்தனமும் இருந்தது. மிக பக்திமயமாக வேஷ்டி சட்டையுடன் அன்னதானத்தில் கலந்துகொண்டிருந்தனர். அவனும் கை, கால்களை சுத்தப்படுத்திக்கொண்டு அவர்களுடன் அமர்ந்து சாப்பிடத் தொடங்கினான். அவனுக்கு சந்தோஷமாக இருந்தது. இந்து மதத்தின் அருமையையும் பெருமையையும் அவர்கள் அறிந்துகொண்ட அளவிற்கு நாம் அறியவில்லையே.. அப்போது அவன் கைபேசி சிணுங்கியது.

**(தொடரும்)**



# கிரிக்கெட் உலகின் சுழலுலக ஜாம்பவான்

## மறைந்து ஓராண்டு நிறைவு



தனது குழந்தைகளுடன் ஷேன் வோர்ன்

கிரிக்கெட் உலகின் சுழலுலக ஜாம்பவான் என அழைக்கப்படும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்துவீச்சாளர் ஷேன் வோர்ன் இந்த மண்ணை விட்டு பிரிந்து கடந்த சனிக்கிழமை (04) ஓராண்டு கழிந்து விட்டது. பல துடுப்பாட்ட வீரர்களின் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்த வோர்ன் கடந்த ஆண்டு மார்ச் மாதம் 4ஆம் திகதி தாய்லாந்தில் இதயக்கோளாறு காரணமாக காலமானார். அந்தக் காலத்து வானொலி ரசிகர்கள் முதல் இந்தக் காலத்து ஐ.பி.எல். ரசிகர்கள் வரை அனைவருக்கும் ஷேன் வோர்னைத் தெரியும். அவரின் சாதனைகள் என கூகுளில் தட்டினால் அலுமாரியைத் திறந்ததும் மடித்து வைக்கப்படாத துணிகள் கொட்டுவது போல் பல விடயங்கள் கொட்டும்.

லெக் ஸ்டம்புக்கு வெளியே பிச் ஆன பந்து துடுப்பாட்ட வீரரின் கால்களுக்கு பின்னால் சென்று ஸ்டம்பில் அடிக்கும் காணொளிகள் எல்லாம் இக்கால இளம் தலைமுறைகள் மத்தியிலும் அதிகம் பரிச்சயம்தான். ஆனால், வோர்ன் வெறும் லெக் ஸ்பின்னுக்கான அடையாளம் மட்டும் இல்லை. வோர்ன், ''வாழ்க்கை வாழ்வதற்கே'' என்ற சொற்றொடரில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். வாழ்க்கைக்காகவும் அதன் மகிழ்ச்சிக்காகவும் எதையும் எப்போதும் தியாகம் செய்வதில்லை என்ற கோட்பாடு வோர்ன் உடையது. கேட்பதற்கு மிகவும் எளிதாக இருந்தாலும், இதை பின்பற்றுவது மிக மிகக் கடினம்.

உதாரணத்திற்கு இந்தியாவின் பிரித்வி ஷாவை எடுத்துக் கொள்ளுங்கள். ஏதோ உட்கொள்ளக் கூடாத மருந்துப் பொருள் ஒன்றை எடுத்துக் கொண்டதாக பல ஆண்டுகள் அணியிலிருந்து தள்ளி வைக்கப்பட்டு இருக்கிறார் அவர். ஆனால், வோர்னின் முக்கால்வாசி புகைப்படங்களில் அவர் கைகளில் பியர் இருக்கும். அவரின் கடைசி ஆட்டங்களில் எல்லாம் சிறிய தொப்பையுடன்தான் பந்து வீசினார். ஊக்கமருந்து சோதனையில் சிக்கித் தடைபெற்றவர். பல பெண்களுடன் தொடர்பிலிருந்து அத்தனையும் பத்திரிகைகளில் கசிந்தன.

இந்தக் காலத்தில் இப்படி ஒரு கிரிக்கெட் வீரர் இருந்தால் அவரை எந்தவோர் அணியும் சேர்த்துக் கொள்ளுமா? இங்கிலாந்து அதிரடி வீரர் அலெக்ஸ் ஹேல்ஸை இங்கிலாந்து நிர்வாகம் எத்தனை ஆண்டுகள் வனவாசத்தில் வைத்திருந்தது என்பது தெரிந்ததே. இதுதான் தற்கால கிரிக்கெட். பந்துவீச்சு, துடுப்பாட்டம் என்று எதில் வித்தைக்காரனாக இருந்தாலும், இந்த உலகம் கட்டி வைத்திருக்கும் ஒழுக்கம் என்ற வரையறைக்குள் வராத வீரரை கிரிக்கெட் தற்போது ஏற்றுக் கொள்ளாது.

ஆனால், வோர்ன் எப்படி இத்தனை ஆண்டு காலம் விளையாடினார்? எப்படி இத்தனை துடுப்பாட்ட வீரர்களின் உறக்கத்தைக் கலைத்துப் போட்டார்? ஒருவேளை அணியில் இருக்கும் அத்தனை பேரும் வோர்னுக்கு நல்ல பழக்கமா என்றால், விக்கெட் கீப்பர், பயிற்சியாளர் என்று பலரிடம் வோர்னுக்கு தகராறுகள் இருந்தன.

இப்படியொரு வாழ்க்கை முறை இருந்தும் கிரிக்கெட்டில் வோர்ன் சாதித்துக் காட்டியதற்கு முக்கிய காரணம் அவரின் தன்னம்பிக்கை. தற்கால இருபதுக்கு 20 ஆட்கள் போல் வோர்னின் பந்துவீச்சில் அத்தனை 'வேரியேஷன்கள்' எல்லாம் இருக்காது. ரவி பிஷ்னோய் இரண்டு இருபதுக்கு 20 போட்டிகளில் வீசும் கூக்ளியைத்தான் வோர்ன் தனது மொத்த கிரிக்கெட் வாழ்க்கையிலேயே வீசியிருப்பார். பாரம்பரியம் மிக்க லெக் ஸ்பின் மற்றும் ஃப்ளிப்பர் வகை பந்துவீச்சுதான் அவரின் ஆயுதங்கள். சச்சின் போன்ற வீரர்கள் இறங்கி வந்து அவரது தலைக்கு மேல் சிக்ஸர்களைப் பறக்க விட்டாலும் ''அடுத்த பந்தில் நீ சிக்கிவிடுவாய் பார்'' என்ற விதத்தில்தான் வோர்னின் எண்ணங்கள் இருக்கும்.

பந்து வீசும் திசையை உடனே மாற்றுவது, வேறு மாதிரியான பந்துகளை முயற்சி செய்வது எல்லாம் வோர்னுக்கு அறவே ஆகாது. தனக்கு எது வரும் என்பதைவிட தனக்கு எது வராது என்பதை தெளிவாகப் புரிந்து வைத்திருந்தவர் வோர்ன்.

எத்தனையோ வீரர்கள் இது போன்ற வாழ்க்கை முறையில் இருந்தாலும் அவர்களால் கிரிக்கெட்டில் சாதிக்க முடியாமல் போயிருக்கிறது. இங்குதான் வோர்ன் வேறுபடுகிறார். அவரது சொந்த வாழ்க்கை, பழக்கங்கள், அதிலிருக்கும் பிரச்னைகள் எந்த விதத்திலும் தனது கிரிக்கெட்டை பாதிக்காமல் கடைசி வரை பார்த்துக் கொண்டார். ஓராண்டு காலம் கிரிக்கெட் விளையாடாமல் தடையிலிருந்தாலும் அடுத்த இரண்டு ஆண்டுகளில் டெஸ்ட் போட்டிகளில் மட்டும் 166 விக்கெட்டுகளை வீழ்த்த அவரால் முடியும். அதுதான் வோர்ன்!

கிரிக்கெட்டுக்காக வாழ்க்கையையும் சரி, வாழ்க்கைக்காக கிரிக்கெட்டையும் சரி, எதையுமே விட்டுக் கொடுக்காதவர். தனது 51ஆவது வயதில் பிரபல நடிகை மார்கெட் ராபியுடன் கிசுகிசுக்கப்படும் அளவுக்கு உல்லாசமான வாழ்க்கை வோர்ன் உடையது. அவர் மறைந்து ஓராண்டு கடந்துவிட்டது. ஒவ்வொரு இளம் வீரரும் வோர்ன் தன்னை எந்தளவு உற்சாகப்படுத்தினார் என்பதை கூறிக் கொண்டே இருக்கிறார்கள். ரஷித் கான், ஸ்கொட் போலண்ட், ரேஹான் அஹமத் போன்றோரே அதற்கான உதாரணங்கள். 2005 ஆஷஸ் தொடரில் பீட்டர்சன், வோர்னை அவ்வளவு எளிதாக சமாளித்து ஓட்டங்கள் எடுத்தார்.

2007 ஆஷஸ் தொடருக்கு முன்பாக பீட்டர்சன் எழுதிய புத்தகம் ஒன்றில், ''வோர்னால் என்னை மற்றவர்களுக்கு செய்வது போல் காலுக்கு பின் பந்து வீசி ஆட்டமிழக்க செய்ய முடியாது'' என எழுதியிருந்தார். பீட்டர்சன் அப்போது இளம் இரத்தம். வோர்ன் தனது கிரிக்கெட் வாழ்க்கையின் கடைசித் தொடரில் விளையாடப் போகிறார். ஆனால், அந்தத் தொடரின் இரண்டாவது டெஸ்டில் சொல்லி வைத்தது போல முதல் பந்திலேயே அதுவும் கால்களுக்கு பின் வழியாக பீட்டர்சனை அவுட் ஆக்கினார் வோர்ன். இதுதான் வோர்ன். கடைசிவரை தோல்வியை ஒப்புக் கொள்ளாமல் போராடிச் சாதிப்பவர்.

தற்காலத்தில் உலக சாதனை படைத்த வீரர் ஒருவரிடம் ஒலிவாங்கி நீட்டப்படுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். எனக்காக என் தந்தை அதைச் செய்தார், என் பயிற்சியாளர் இதைச் செய்தார், நான் இதற்காக இவ்வளவு தியாகங்கள் செய்தேன்... இப்படித்தான் அந்தப் பேட்டிகள் இருக்கும். ஆனால் 700 விக்கெட்டுகள் என்ற மிகப்பெரிய சாதனையை வோர்ன் படைத்த போது, ''எனக்கு ஒரே நேரத்தில் 55 வோட்கா குடித்தது போல் இருக்கிறது'' என்று கூறினார். தற்கால ஒழுக்க யுகத்தில் இது போன்ற வார்த்தைகளை எல்லாம் உதிர்க்க முடியுமா? இப்படிச் சொல்ல வேண்டும் என்று நினைத்தாலும் பின் விளைவுகளை நினைத்து யாரும் கூற மாட்டார்கள். ஆனால் வோர்ன் கூறுவார். அதுதான் வோர்ன்!

கடைசிவரை மகிழ்ச்சியாக இருந்தார். கடைசிக் காலங்களில் கூட தன்னோடு ஐ.பி.எல். ஆடிய கம்ரான் கான் என்ன ஆனார் என விசாரித்தார். தாய்லாந்தில் மரணித்தார் என்பதால் மரணிக்கும் போது கூட மகிழ்ச்சியாகவே இருந்திருப்பார். மரணித்த பின்னும் ராஜா போல அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டார் வோர்ன்.

**கிரிக்கெட்டுக்காக வாழ்க்கையையும் சரி, வாழ்க்கைக்காக கிரிக்கெட்டையும் சரி, எதையுமே விட்டுக் கொடுக்காதவர் வோர்ன். கடைசிவரை தோல்வியை ஒப்புக்கொள்ளாமல் போராடி சாதிப்பவர். வோர்னின் வாழ்க்கை முறை அனைவருக்கும் பிடிக்கும். ஆனால், அதை அனைவராலும் வாழ்ந்துவிட முடியாது. அதை வாழ்வதற்கு தனி தைரியமும் 200 மடங்கு திறமையும் வேண்டும். இரண்டும் ஒருங்கே அமையப்பெற்ற கடைசி வீரர் என்றால் அது வோர்ன்தான்.**











Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7